# எதிரொலி

ஆஸ்திரேலியா


ETHIROLI

குரல் 03 அதிர்வு 36 ஜுன் 2020 ethirolimelbourne@gmail.com தொ.பே:1800 960 162














ஆஸ்திரேலியாவிலிருந்து வெளிவரும் தமிழ் மாத இதழ்


உங்கள் அதிநவீன பாதுகாப்புத்
தேவைகளுக்காக இன்றே
தொடர்புகொள்ளுங்கள்!
NS Systems
SECURITY
0447 533 555
www.nssystems.com.au
NS
We are registered and licensed by Victoria Police.
* Standard Installation, 3 Year parts (Manufacturer Defects) & 3 Year Labor Warranty !!
+ 0.75c Per day, 6 Months Up Front Payment
UTECH SOLUTIONS
Corporate Group
info@nssystems.com.au
PO BOX 633, Noble Park, VIC 3174
Private security Business License: 910-932-10S
Protect your
Home & Family,
Secure your
Premises & Business.


நம்பிக்கை, தரம், நிரந்தரம்
உங்கள்
SRI MURUGAN
SINCE 1969
ஸ்ரீ முருகன் டிரேடிங்
SRI MURUGAN TRADING
(Largest Indian Grocer Chain)
CORONA VIRUS
can't stop
SRI MURUGAN STORES
FROM MAINTAINING
FULLY STOCKED
AISLES!
Trust
Quality
Forever
03 7379 7777
www.srimurugantrading.com.au
@SriMuruganAustralia
POINT COOK | CARRUM DOWNS | NARRE WARREN
INDIA | SINGAPORE | MALAYSIA | INDONESIA | AUSTRALIA | DUBAI | FRANCE

# அமெரிக்க கறுப்பின ஆதரவுப் போராட்டத்தில்

# அம்பலமாகிய சிறிலங்காவின் தலைவிதி!







உலகெங்கும் படர்ந்தெரியும் வெள்ளைஇனவெறிக்குஎதிரானஆர்ப்பாட்டங்கள்ஆஸ்திரேலியாவுக்குள்ளும் பரவியிருக்கிறது. கொரோனாவை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததுபோலஇந்தஉணர்வு பூர்வமான எழுச்சியினையும் ஆஸ்திரேலிய தரப்பினால் முடக்கிவிடமுடியவில்லை. ஏனென்றால் ஆஸ்திரேலிய வரலாற்றின் மீதான வெள்ளையின ஆதிக்கம் அப்படிப்பட்டது.

அமெரிக்காவில் பொலீஸாரின் காலடியில் மிதித்துப் படுகொலை செய்யப்பட்ட ஜோர்ஜ் ப்ளாய்ட் மரணத்தினால் அமெரிக்க மக்கள் வெஞ்சினம் கொண்டுள்ளார்கள். நகரம் நகரமாக பெரும் போராட்டங்களை மேற்கொண்டு, பாதுகாப்புத் துறையினர் மீது கொடிய தாக்குதல்களை நடத்தத் தொடங்கியுள்ளனர். சில மாதங்களுக்கு முன்னர் இந்தியாவில் இடம்பெற்ற மாணவர் போராட்டங்களைப்போன்ற சம்பவங்களை தற்போது அமெரிக்காவில் காணக்கூடியதாக உள்ளது. அதிலும் பருமன் கூடியது என்று கூறலாம்.

நிலமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு நகரங்களை முற்றாக மூடிய அமெரிக்கா, பொலீஸாரின் பிடியில் படுகொலைசெய்யப்பட்ட கறுப்பினத்தவரின் மரணத்துக்காக மண்டியிட்டு மன்னிப்புக் கேட்டுக்கொண்டிருக்கிறது. இருந்தாலும் மக்களின் பெருங்கோபம் அடங்கவில்லை.

“என்னால் மூச்சுவிட முடியவில்லை” என்று ஜோர்ஜ் ப்ளாய்ட் சாவதற்கு முதல் பொலீஸ் காலடியிலிருந்து முனகிய அந்த காட்சி எல்லோர் கண்களிலிருந்தும் மறையாத கொடுந்துயராக இன்னமும் நிழலாடியபடியிருக்கிறது.

உலகெங்கும் வெள்ளையின வெறிக்கு எதிராகஆர்ப்பாட்டங்களைமேற்கொள்பவர்கள் எல்லோரும் “என்னால் மூச்சுவிட முடியவில்லை” - என்பதையே ஆர்ப்பாட்ட சுலோகமாக பெருங்குரலில் கூவுகிறார்கள்.

ஆஸ்திரேலியாவில் கூடிய ஆர்ப்பாட்டக்காரர்களும் இதுபோன்ற சுலோகங்களையேதாங்கியவண்ணம்தங்களது போராட்டங்களை மேற்கொண்டுள்ளார்கள்.

ஆஸ்திரேலியாவில் பொலீஸாரின் தடுப்புக்காவலில் இறந்துபோன சுமார் நானூறுக்கும் மேற்பட்ட அபொறிஜினல் ஆதிக்குடிகளின் மரணத்தை முன்னிறுத்தி, ஆஸ்திரேலிய ஆர்ப்பாட்டங்கள் முக்கியத்துவப்படுத்தப்படுகின்றன.

இதற்கிடையில், அமெரிக்காவில் கறுப்பர்களுக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட, சிறிலங்கா கொடியை தாங்கிய யுவதி ஒருவரின் படம் சமூக வலைத்தளமெங்கும் பிரபலமாகியிருக்கிறது.

அதாவது, “கறுப்பர்களின் உயிரும் உயிர்தான்” என்ற பொருள்பட அந்த சிறிலங்கா யுவதி ஒரு பதாகையை ஏந்தியபடம் அநேகமாக தமிழர்கள் பலரது முகநூல் தளங்களில் பகிரப்பட்டு எள்ளிநகையாடப்பட்டன.

சொந்த நாட்டில் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்பட்டதெல்லாம் இந்த யுவதிக்கு உணர்வுவரவில்லை. இப்போது கறுப்பினத்தவர்களுக்காக வீதியில் இறங்கியிருக்கிறாளாம். கறுப்பர்களுக்காக இவள் வடிக்கும் கண்ணீர் போலியானது என்பதே அந்தப்பெண்ணின் படத்தை பகிர்ந்தவர்களின் நகைப்புக்கான பொருளாக இருந்தது.

இது உண்மைதான்.

ஆனால், இதற்கு பின்னாலிருக்கும் யதார்த்தம்தான் சிறிலங்காவின் எதிர்கால தலைவிதியாகவும் இருக்கப்போகிறது என்பதை யாராலும் மறுக்கமுடியாது.

அதாவது, உலகின் எங்கு அழிவு இடம் பெற்றாலும் அதற்காக பரிதாபம் உருவாகுவது யாருக்கும் வழமை. சிலர் கண்ணீர் வடிப்பார்கள். பலர் கண்டனம் தெரிவிப்பார்கள். இன்னும்பலர் களத்தில் இறங்கி நின்று எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் செய்வார்கள். இவ்வாறு பல்வேறு வகைகளில் தங்களது எதிர்ப்பை முன்வைப்பார்கள்.

ஆனால், சிறிலங்காவின் பெரும்பான்மையின மக்களின் எதிர்கால சந்ததியினர் இவைஎதற்குமேஉணர்வைவெளிப்படுத்த முடியாதஜடங்களாக - தங்களின் கைகளை இறுகக்கட்டியிருந்து - அழுபவர்களாகமாத்திரமே இருக்கமுடியும் என்பதைத்தான் -

கறுப்பர்களுக்கு ஆதரவாக கொடிபிடித்த சிறிலங்கா பெண்ணுக்கு எதிராக உலக அளவில் முன்வைக்கப்பட்ட ஏளனம் ஒரு செய்தியாக சொல்லியிருக்கிறது.

இவர்கள் தங்களது நேர்மையான உணர்வை காண்பிப்பதற்கு வீட்டைவிட்டு வெளியில் வரும்போதெல்லாம், தமிழர்களுக்கு இவர்களது அரசாங்கம் இழைத்த பெருங்கொடுமை ஒரு பிசாசுபோல கால்களை வந்து இழுத்து விழுத்தும். இவர்களது அரசாங்கம் சாட்சியமற்று செய்த இனஅழிப்புக்கு நீதியை கேட்கும்.

சிறிலங்காவின் அடுத்தடுத்த சந்ததியினருக்கு தமிழர்களுக்கு எதிராக இடம் பெற்ற இனப்படுகொலை குறித்து தெரியாமலே போகலாம், அது குறித்து அவர்களது பெற்றோரும் கற்றோரும் சொல்லாமலேயே மறைக்கலாம். ஆனால், பகிரங்க தளமொன்றில்தங்களை அறியாமல், வேற்று நாட்டவனுக்காக கண்ணீர் வடிப்பதற்கு எத்தனிக்கும் ஒவ்வொரு கணமும், இவர்களுக்கான வரலாறு போதிக்கப்படும். இவர்களுக்கான புதிய கைவிலங்குகள் மாட்டப்படும். நீதியை மறுத்த இவர்களது பூர்வீக தேசத்தின் புண்பட்ட வரலாறு மீண்டும் தோண்டியெடுக்கப்பட்டு இவர்களது கைகளில் ஒப்படைக்கப்படும்.

இதனைத்தான், தற்போது அமெரிக்க கறுப்பினத்தவருக்காக போராட்டம் செய்த சிறிலங்கா பெண்ணின் படத்துக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட தமிழர்களது ஏளனம் காண்பித்திருக்கிறது.

என்றோ ஒருநாள், இந்த பெரும்பான்மை சமூகத்தின் ஒரு தலைமுறை, தனது தேசம் விட்ட பெரும் தவறை உணரத்தான் போகிறது. அப்போது அந்தத்தலைமுறை தனது தேசத்தின் தலைவர்கள் என்று போற்றப்பட்டவர்களை தூற்றத்தான் போகிறது.

முப்பது வருடங்களுக்கு முற்பட்ட காலப்பகுதியில் பொலீஸ் காவலில் பலியான அபொறிஜினல் ஆதிக்குடிகள் நானூறு பேரின் மரணத்துக்கு நீதி கேட்டு போராடுவதற்கு -

அமெரிக்காவில் ஒரு கறுப்பு இனத்தவனின் மரணம் தூண்டுகோலாக அமைந்திருக்கிறது என்றால் -

பல்லாயிரக்கணக்கான மக்களின் படுகொலைக்கு நீதி கேட்பதற்கான ஒரு இனவிடுதலைபொறி இந்த உலகின் ஏதாவது ஒரு மூலையில் தெறித்துவிடாமலே போகப்போகிறது?

மறுக்கப்படும் நீதிக்கு ஆயுள் அதிகம். அது வாழ்ந்தபடியேதானிருக்கும். அதற்கான உயிர் உலகெங்கும் வியாபித்து துடித்தபடியேதானிருக்கும்.

அரசியல் கைதிகளை சிறையில் வைத்திருந்தால்போராட்ட உணர்மைவ மழுங்கடிக்கலாம் என்று சிறிலங்கா அரசு எண்ணுவதும் -

முன்னைய போராட்டம் குறித்து பேசினாலேயே விசாரைணக்கு அழைத்து மிரட்டினால் தமிழ் மக்கள் பயந்துவிடுவார்கள் என்று எண்ணுவதும் -

அதற்காகஆயிரம்சட்டங்களைநாடெங்கும் தொங்கவிட்டுக்கொண்டால் ஓர் இனத்தின் நீதிக்கான அங்கலாய்ப்பை அடியோடு துடைத்து எறிந்துவிடலாம் என்று எண்ணுவதும் -

அவ்வப்போதையஅரசுகளுக்குவேண்டுமானால் வெற்றியாக இருக்கலாம். திருப்தி தருகின்ற காலவெளியை கொடுக்கலாம். மிஞ்சி மிஞ்சிப்போனால் ஒரு சில தேர்தல்களை அவை கூடுதலாக வெல்லலாம்.

ஆனால், நீதியென்பது தேசத்துக்கானது. தேசத்தில் வேரூன்றிய மக்களுக்கானது. அதனை தொடர்ந்து மறுத்துக்கொண்டெல்லாம் இருக்கமுடியாது. மறுப்பதால் வியாபிக்கும் அந்தகாரம் தொடர்ந்தும் அந்த தேசத்தின் வானில் படர்ந்தபடியே இருக்கும். தேசத்தின் கிணறுகள்தோறும் குற்றநீராக ஊறிக்கொண்டேயிருக்கும்.

ஜோர்ஜ் ப்ளொய்ட் மரணமும் அதனைத் தொடரும் போராட்டங்களும் புகாராய் காண்பித்திருக்கும் செய்தி இது.


MKS
MKS Spices'n Things
Finest Quality Guaranteed
We bring the authentic taste of spices and cooking ingredients to you, find out more...
GROCERIES
BOLLYWOOD ENTERTAINMENT
DINE IN
ASHWOOD
382 Warrigal Road
9885 9932
DANDENONG
23 Pultney Street
9701 3165
EPPING
1/88 Cooper St
9424 9162
PRESTON
258 High Street
9416 9011
St ALBANS
276 Main Road East
9366 4141
www.mks.net.au

எதிரொலி
ஆஸ்திரேலியா ETHIROLI
குரல்:03 அதிர்வு: 36 ஜுன் 2020 தொ.பே:1800960162

# திருவிழாவுக்கு தயாராகும் தீவு

சிறிலங்காவில் தேர்தல் களேபரம் மீண்டும் தொடங்கி விட்டது.

உலகமே உயிராபத்தில் அலறியடித்துக்கொண்டிருக்கிறது.

விமானநிலையங்கள் பூட்டப்பட்ட நிலையில், பொருளாதாரத்தை தக்கவைத்துக்கொள்வது எப்படி என்ற பீதியில் உறைந்துபோயிருக்கிறது.

வெளியில் சென்றால் ஆளையாள் எவ்வாறு எதிர்கொள்வது என்ற அச்சத்தில் மக்கள் தொடர்ந்து விழி பிதுங்கிக்கிடக்கிறார்கள்.

இவ்வளவு கலவரங்களுக்குள்ளேயும் சிறிலங்காவில் தேர்தல் நடத்தவேண்டும் என்ற சுதியில், ராஜபக்ச கும்பல் மாஸ்க்கை தாடையில் போட்டுக்கொண்டு நாட்டு மக்களைப் பார்த்து சிரித்துக்கொண்டு நிற்கிறது.

ஜனாதிபதி பதவியை பிடித்துக்கொண்டது முதல், ராஜபக்ச கும்பலின் ஒட்டுமொத்த எதிர்பார்ப்பும், நாடாளுமன்ற தேர்தலில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையை பெற்றுக்கொள்ளவேண்டும் என்பதுதான். இது எவருக்கும் தெரியாத கொரோனா மருந்தொன்றுமல்ல.

கெட்டவர்கள் வாழ்கிறார்கள் என்பதுபோல, சூறாவளியாக வந்து சுழன்றடித்துக்கொண்டிருக்கும் கொரோனா, உலகெங்கிலும் தற்போது ஆட்சியிலுள்ள அரசுகளுக்கு அரிய வாய்ப்பொன்றை கொடுத்திருக்கிறது. அதாவது, உயிராபத்தில் துடித்துக்கொண்டிருக்கும் மக்களுக்கு தற்போது ஆட்சியிலுள்ள அரசுகள்தான் ஆபத்பாந்தவர்கள். இந்த அரசுகள் எதைச் செய்தாலும் அதனை இருகரம் கூப்பி ஏற்றுக்கொள்ளுமளவில் மக்கள் இறைஞ்சிக் கொண்டிருக்கிறார்கள். ஆக, உலகெங்கிலும் தற்போது ஆட்சியிலுள்ள அரசுகள் மக்களைப் பொறுத்தவரை உயிரை மீட்டுத்தரும் மீட்பர்கள்போல காட்சி தருகின்றன.

இது கோத்தபாய அரசுக்கும் விதிவிலக்கானது அல்ல. இது பத்தாது என்று, இராணுவ ரீதியான அணுகுமுறைதான் கொரோனா தொற்றுள்ள நாடுகளுக்கு தேவை என்றும் கூறி, சிறிலங்காவில் அவ்வாறனதொரு ஆட்சி கைமாறியதால்தான் இப்போது, கொரோனா கட்டுப்பாட்டுக்குள் உள்ளது என்றும் போவோர் – வருவோர் எல்லாம் சான்றிதழ் கொடுத்துவிட்டார்கள்.

ஆக, நான்கு மாதங்களாக பிடித்துலுப்பிய கொரோனா ராஜபக்ச கும்பலுக்கு இலவச தேர்தல் பிரசாரமாகவும் நடைபெற்று முடிந்திருக்கிறது. வீட்டில் அடைபட்டிருந்த மக்கள் கடந்த நான்கு மாதங்களாக தொலைக்காட்சியை – சமூக வலைத்தளங்களை – திறந்தால் ஆளும் கட்சியினரையும் அவர்களது அரச சேவையையும்தான் பார்க்க வேண்டிய கட்டாயம். அவர்களது பேச்சும் சேவையும் நாட்டு மக்களுக்கான அருட்கடாட்சமாக காண்பிக்கப்பட்ட வண்ணமிருந்தன.

இப்படியானதொரு நிலையில்தான், தற்போது ராஜபக்ச அரசாங்கத்தினை எதிர்த்து தேர்தலை சந்திக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு கட்சிகள் தள்ளப்பட்டிருக்கின்றன.

நடைபெறப்போகும் தேர்தல் எல்லாவகையிலும் சிறுபான்மை கட்சிகளுக்கு பாதகமானதொன்றுதான்.

தமிழ் மக்களின் நலன்களை சிங்கள அரசிடமிருந்து மீட்டுக்கொள்வதில் அறப்போராட்டம் செய்துவரும் தமிழ் தேசியக்கூட்டமைப்புக்கு இந்தத்தேர்தல் பல தளங்களில் சவால் நிறைந்தது. அந்த உறுதியான கூட்டணியை சிதறடித்துவிடவேண்டும் என்று அங்குள்ள பல்வேறு உப கூட்டணிகள் சம்பந்தரின் காலுக்குள் மொய்த்தவண்ணமிருக்கின்றன.

உலகிலுள்ள அத்தனை மக்கள் சமூகத்துக்கும் கொரோனா காலம் நல்ல படிப்பினையை கொடுத்திருக்கிறது. அதாவது, மனிதாபிமானம் – சகவாழ்வு போன்ற உயர் வாழ்வியல் விழுமியங்களுக்கு அப்பால், ஒற்றுமையாக நின்று ஒரு பொது எதிரியை வீழ்த்துவது எவ்வளவு அத்தியாவசியம் என்பதை கொரோனா கற்பித்திருக்கிறது.

இது இலங்கையிலுள்ள சிறுபான்மை மக்களுக்கு கடந்த பல தசாப்தங்களாக சிங்களப்பேரினவாதம் கற்பித்த ஒன்றுதான். எத்தனையோ கொரோனா யுகங்களை கடந்து வந்தவர்கள் தமிழர்கள்.

இப்போது எழுந்துள்ள இக்காட்டான தேர்தல் காலமும் தமிழர்கள் கற்றுக்கொண்ட பாடங்களை சோதிப்பதற்கு எழுந்திருக்கும் நிலைதான். மக்கள் சுகாதாரமான தீர்ப்பை வழங்குவார்களா பார்ப்போம்!

# கதவுகளை மூடிய கடவுளர் வாழ் காலத்தில் மனிதத்தை உணர்த்தியிருக்கும் கொரோனா

● பொன்ராஜ் தங்கமணி

கொரோனா பரவ ஆரம்பித்தவுடன் அனைத்து நாடுகளும் வெவ்வேறு நடவடிக்கைகள் எடுத்தன. இந்திய அரசும் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டது. அவற்றில் முக்கியமான ஒன்று, நாட்டை முற்றாக முடக்குதல். இந்த முடக்கத்தினால், கொரோனா தொற்று மிக வேகமாக பரவாமல் தடுக்கப்பட்டது என நம்பப்படுகிறது. இருப்பினும், பல்வேறு இன்னல்களை மக்கள் அனுபவித்தனர். அதிலும் குறிப்பாக புலம்பெயர் தொழிலாளர்கள் முகங்கொடுத்த சவால்கள் கொடூரமானவை.

கொரோனா தொற்று பரவலைத் தடுப்பதற்கு, நாட்டை முடக்குதல் அவசியம் என்பதை அனைவரும் உணர்ந்திருந்தாலும் ஒழுங்காகத் திட்டமிடாமல் திடீரென வந்த இந்த ஊரடங்கு அறிவிப்பு அவர்களைப் பெரும் அதிர்ச்சியில் ஆழ்த்தியது. இதற்கு முக்கிய காரணம், புலம்பெயர்ந்த மக்களின் நிலையற்ற வாழ்வாதாரம்தான். அவர்கள் அன்றாடம் உழைத்து அதில் கிடைக்கும் வருவாயில் தங்களுடைய வாழ்க்கையை நடத்துபவர்கள்.

இடம்பெயர்ந்த தொழிலாளர்கள் என்பவர்கள் எல்லா நாடுகளிலும் இருந்தாலும் இந்தியாவில் அவர்களின் எண்ணிக்கை என்பது மிகவும் அதிகமாகும். இடம்பெயர்ந்த தொழிலாளர்களின் எண்ணிக்கை எத்தனை என்கிற தெளிவான தகவல் எந்த அரசு சார்ந்த அமைப்பிடமும் இல்லை. கிட்டத்தட்ட நான்கு கோடி தொழிலாளர்கள் இவ்வாறு இடம்பெயர்ந்திருக்கிறார்கள் என்கிறது ஒரு தகவல். இது ஒரு தோராயமான கணக்குத்தான்.

ஆயிரமாயிரம் ஆண்டுகளாக உணவைத்தேடி மனிதன் இடம்பெயர்ந்து கொண்டிருந்தான். விவசாயத்தைக் கண்டுபிடித்தபிறகு, ஓரிடத்தில் தன் வாழ்க்கையை வாழப்பழகிக்கொண்டான். அதன்பின்னர், பொருளும் பணமும் சேர்ப்பதற்கு ஒரு இடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்கு இடப்பெயர்வு என்பது இயல்பாக நடைபெற்று வருகிறது என்பதை நாம் அறிவோம்.

பெரும்பாலும் இடப்பெயர்வு, புலம்பெயர்வு என்றவுடன் ஒரு நாட்டில் இருந்து இன்னொரு நாட்டிற்கு போவது என்றுதான் நம்முடைய பொதுபுத்தியில் நினைத்துவருகிறோம். நான்கு கோடி மக்கள் ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்துக்கு ஒரு நாட்டிற்குள் இடம்பெயர்ந்திருக்கிறார்கள் என்னும் செய்தி நமக்கு மிகுந்த வியப்பைத் தருகிறது. இது ஆஸ்திரேலியாவின் ஒட்டுமொத்த மக்கள் தொகையைவிட ஒன்றரை மடங்கு அதிகமாகும்.

நடைபாதைகளிலும், பாலத்தின் அடியிலும், சிறிய குடிசைகளிலும் கொட்டகையிலும் வசிக்கும் இவர்கள், பொருளாதாரத்தில் மிகவும் நலிந்த நிலையில் உள்ளவர்கள் என்பதை நாம் சொல்லித் தெரிந்துகொள்ள வேண்டிய அவசியமில்லை.

ஆயிரக்கணக்கான மக்கள், கூட்டம் கூட்டமாக சாலைகளில் தங்கள் தோள்களில் குழந்தைகளையும் சுமைகளையும் தூக்கி வைத்திருந்த காட்சிகள் 1947 ஆம் ஆண்டு இந்திய பாகிஸ்தான் பிரிவினையை நினைவுபடுத்தியது. இருபத்தியொராம் நூற்றாண்டில் லட்சக்கணக்கான மக்கள் சாலை மார்க்கமாக நடந்து ஆயிரக்கணக்கான கிலோ மீட்டர்கள் சென்றிருக்கிறார்கள் என்பது வரலாற்றில் இடம்பெறும் ஒரு சம்பவமாகவே அமையும்.

பீகாரைச் சேர்ந்த ஜோதி குமாரி என்ற 15 வயது பெண் தன்னுடைய நோயுற்ற தந்தையை, தன் மிதி வண்டியில் வைத்து 1200 கிலோ மீட்டர்கள் - டெல்லியில் இருந்து பீகார் வரை கொண்டுசென்று சேர்த்திருக்கிறார் என்ற செய்தி உலகில் பலரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியது.

தண்டவாளம் மார்க்கமாக நடந்து சென்றவர்கள் சிலர் 36 கிலோமீட்டர் நடந்த பிறகு ஓய்வுக்காக தண்டவாளத்தில் படுத்தனர். ரயில்கள் இயங்கவில்லை என்று தவறுதலாக நினைத்து தண்டவாளத்தில் படுத்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது. இவ்வாறு படுத்து உறங்கியவர்கள் 16 பேரும் ரயில் மோதி உயிரிழந்தனர்.

பீகாரின் முஸாபர் நகரில் 35 வயதான ஒரு இளம்பெண் இறந்து கிடப்பதும், அதை அறியாத அவளின் பச்சிளம் குழந்தை அந்தப் பெண்ணை தட்டியெழுப்ப முயற்சிப்பதும் பார்ப்பவர்கள் இதயத்தை பதபதைக்க வைத்தது.

ஒட்டுமொத்த முடக்கம் சற்று தளர்த்தப்பட்டவுடன் புலம்பெயர்ந்தவர்கள் மீண்டும் ஊர் திரும்புவதற்கு ரயில் ஏற்பாடு செய்யப்பட்டது. அவர்களிடம் அதற்கு கட்டணமும் வசூலிக்கப்பட்டது. ஆனால் அவர்களுக்கு முறையான தண்ணீர், உணவு வழங்கப்படவில்லை. இதன் காரணமாக, பலர் பசியிலும், தாகத்திலும் உயிரிழந்தார்கள்.

மே மாதம்வரையில் ரயிலில் இறந்தவர்கள் 80 பேர் என்று அரசு அறிக்கை கூறுகிறது.

இவ்வாறாக, இந்த கண்ணீர்க் கதைகள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. இது கொரோனா காலத்தில் இந்திய அரசு பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களை கையாண்ட விதத்தை வெளிச்சம்போட்டு காட்டிவிட்டது.

கேரளா இந்த நிலைமையை மிகத் திறமையாக கையாண்டது. அதுபோல வேறெந்த மாநிலமும் கையாண்டதாக தெரியவில்லை. தமிழகத்தின் செயல்பாடு, பல வட மாநிலங்களை விட சிறப்பாக இருந்தாலும் கேரளாவிடம் ஒப்பிடும்போது மிகவும் பின்தங்கிய நிலையிலேயே இருந்தது.

ஒருபுறம் இது நடைபெற்றபடியிருக்க, இன்னொரு புறம், மனிதத்தை மதிக்கும் பல செயல்களையும் காண முடிந்தது. ரயில் நிலையத்தில் நிற்காமல் செல்லும் ரயில்களில் பயணிக்கும் தொழிலாளர்களுக்கு பொதுமக்கள் தண்ணீர், சாப்பாடு பொட்டலம்கள், பிஸ்கேட்டுகள் போன்றவைகளை உள்ளே தூக்கியெறிந்து சக மனிதனின் பசி போக்க எடுத்த முயற்சிகள் வெகுவாக மனதைக் கவர்ந்தன.

இந்தியாவில் அதிக கொரோனா தொற்றுக்குள்ளான மாநிலமாக மகாராஸ்டிரா விளங்குகிறது. மும்பையை உள்ளடக்கிய மகாராஸ்ட்டிரத்தில் பல மாநிலங்களை சேர்ந்த தொழிலாளர்கள் உள்ளனர். இதில் தமிழகத்தில் இருந்து சென்ற மக்களும் அடக்கம். ஆசியாவின் மிகப்பெரும் சேரி வாழ்விடமான மும்பையில் உள்ள தாராவி வாழ் தமிழர்களுக்கு தொடர்ந்து மாதக்கணக்கில் உணவளித்து அவர்களின் தேவைக்கு ஏற்ப தமிழகத்திற்கு அனுப்பிவைக்கும் உதவியையும் செய்தது அங்குள்ள தமிழர்கள் அமைப்பு.

ஒடிசா மாநிலத்தில், தனியே தங்க வைக்கப்பட்ட வேற்று மாநில மக்களை தனிமைப்படுத்தல் காலம் முடியும்வரை பாதுகாத்து அனுப்பி வைத்த கிராமத்து மக்களை, கையெடுத்து கும்பிடும் மக்களை பார்த்தபோது மனிதம் வாழும் நிகர்வாழ்வை அங்கு காணமுடிந்தது. இதுபோல இந்தியா முழுதும் பல்வேறு விடயங்கள் நடந்தேறிக்கொண்டேயிருக்கின்றன.

தங்களைக்காப்பாற்றும்என நினைத்த தெய்வங்களும், கொரோனா பயத்தில் தங்கள் வாயில் கதவுகளை இழுத்து மூடிக்கொண்டதால், மனிதனை சக மனிதனின்மீது நம்பிக்கை வைக்க வேண்டிய கட்டத்திற்கு கொரோனா கொண்டு வந்துவிட்டிருக்கிறது. ■

# பாதுகாப்பாக இருப்பது நம்மை ஒன்றிணைக்கிறது



விக்டோரிய மாநில மக்களுக்கு நன்றி.

சில கட்டுப்பாடுகள் தளர்ந்திருக்கும் அதே வேளையில், ஒவ்வொரு நாளும் நமது நடமாட்டத்தைக் கட்டுப்படுத்துவது மிகவும் முக்கியம். இந்த 'வைரஸ்' பரவலின் வேகத்தை நாம் குறைக்கிறோம் என்பதே இதன் அர்த்தமாகும். பூங்காக்களில் நம்மால் தொடர்ந்து விளையாட இயல வேண்டுமானால், தொடர்ந்து வீட்டிலிருந்து வேலை செய்துகொண்டு அங்குமிங்கும் நடமாடுபவர்களின் எண்ணிக்கையை நாம் மட்டுப்படுத்த வேண்டும்.

'கஃபே'-க்களுக்கும், உணவகங்களுக்கும் நம்மால் செல்ல இயல வேண்டுமானால், நமது புத்திசாலித்தனத்தைப் பயன்படுத்தி சமூக விலகலை நாம் பின்பற்ற வேண்டும். நமது நணபர்களையும், குடும்பத்தினரையும் பாதுகாப்பாக வைத்துக்கொள்ள வேண்டுமானால், பார்க்கவேண்டிய தேவை உள்ளவர்களை மட்டுமே நாம் பார்க்க வேண்டும். நம் அனைவரும் ஆற்றவேண்டிய பங்கு ஒன்று இருக்கிறது. இதைப் பயனுள்ளதாக ஆக்குவது நம் கையில்தான்.

**சமூக விலகல்**
**நம்மை ஒன்றிணைக்கிறது**

விபரங்களுக்கு **coronavirus.vic.gov.au/tamil** எனும் வலைத்தளத்திற்குச் செல்லுங்கள்.

VICTORIA State Government

Authorised and published by the Victorian Government, 1 Treasury Place, Melbourne


# நம்பிக்கையில் வாடிக்கையாளர்களின் மனதில் இடம் பிடித்த - 10 வருடகால அனுபவமுள்ள...

# PERPETUA TRADE

## Money Transfer Worldwide

We Guarantee the best rate for
**SRI LANKA, INDIA, CANADA, UK & EUROPE**


- SAME DAY BANK TRANSFER & HOME DELIVERY
- RESPONSIBLE CUSTOMER SERVICE
- CONVINIENT WORLDWIDE LOCATIONS
- EASY, QUICK INTERNET MONEY TRANSFER

COMMERCIAL BANK · BOC · PEOPLE'S BANK · SEYLAN BANK PLC · HNB · சம்பத் வங்கி SampathBank · NSB National Savings Bank · Cash Xpress

**Send Money to any Bank In Sri Lanka**

Hub Arcade, 28/15 -23 Langhorne St. Dandenong VIC 3175
Tel/Fax: 03 8712 1406 Mob: 0423 094 478 - Email: pmoneytransfer@ymail.com

# சொந்த மண்ணில் உரிமை கொண்டாட சட்டத்தையே மாற்றியவர் மாபோ





கவல்கணன்

நீங்கள் பிறந்த மண் -ஆண்டாண்டு காலமாக நீங்கள் வாழ்ந்த மண் -உங்கள் பாட்டன்பேரன்பூட்டன்வாழ்ந்த மண் - யாருக்கு சொந்தம்?" - அதிகாரத்தில் இருப்பவர்களிடம்பலபூர்வகுடிமக்கள் கேட்கும் கேள்வி இது.

தொன்றுதொட்டு அவர்கள்வாழ்ந்து வந்த மண்ணிற்கான பத்திரம் இல்லாவிட்டால் அவர்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்ற நிலை. அவர்களது பூர்வீக மண்ணிலிருந்து வெளியேற்றப்படும்நிலை. அவர்களின் நிலத்தினடியில் இருக்கும் வளங்கள் சூறையாடப்படும் நிலை என்று உரிமைகளும் உடமைகளும் உலகின் பல பாகங்களிலுமுள்ள பூர்வகுடி இன மக்களிடமிருந்து பறிக்கப்படும் வரலாறு இன்றும் தொடர்கிறது.

அதில்ஒருபாரியமாற்றத்தைக்கொண்டு வந்தவர் ஆஸ்திரேலியாவின் வடகரைக்கும் மேலுள்ள Torres Straight தீவுகளில் ஒன்றான Mer தீவில் பிறந்த எடீமாபோ. அந்தத்தீவின் பெயர் தற்போது மர்ரேதீவு என்று மாற்றப்பட்டுள்ளது.

அதேபோல் எடீமாபோ பிறந்த போது அவரது முழுப் பெயர் எடீ கொய்க்கீ சம்போ என்றுதான் இருந்தது. சிறுவயதிலேயே அவரது மாமா முறை கொண்ட ஒருவர் இவரைத்தத்து எடுத்துக்கொண்டார். அதனால் இவர் தனதுகுடும்பப்பெயரைமாற்றிக்கொண்டார். இது கவனத்தில்கொள்ள வேண்டிய விடயம். ஏன் என்பதை பின்னர் சொல்கிறேன்.

மாபோ ஏற்படுத்திய மாற்றத்தின் தாக்கத்தை அண்மையில் உச்ச நீதிமன்றம்வழங்கியஒருதீர்ப்பில்கூடநாம்பார்க்கலாம். மேற்குஆஸ்திரேலியாவில்வாழும் யிண்ட்ஜிஃ பார்ண்ட் (Yindjibarnd)மக்களின் பூர்வீக நிலத்திலுள்ள சொலொமன் சுரங்கத்திலிருந்து Fortescue Metals என்ற சுரங்க நிறுவனம் இரும்புத்தாது எடுக்க முடியாது என்றும், அந்த உரிமை பூர்வீக மக்களின் கைகளில்தான் இருக்கிறது என்றும் உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

முப்பது வருடங்களுக்கு முன்னர் இது சாத்தியப்பட்டிருக்காது.

எடீமாபோவின் முன்னெடுப்பில் நடந்த உச்சநீதிமன்ற வழக்கின் இறுதித் தீர்ப்பு **1992** ஆம் ஆண்டு, ஜூன் மூன்றாம் நாள் வழங்கப்பட்டது. ஆனால், தீர்ப்பு வழங்கப்படும்போது அவர் உயிரோடு இல்லை. புற்று நோய்க்குத் தெரியுமா தீர்ப்பு எப்போது வழங்கப்படுமென்று?

அந்தத் தீர்ப்பில், பூர்வீக குடி மக்களுக்கு அவர்கள்தொடர்ச்சியாகவாழ்ந்த நிலங்களில் உரிமை இருக்கிறது என்றும் அதற்கான உறுதிப்பத்திரங்கள் அவர்கள் கைகளில் இருக்கத்தேவையில்லை என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

ஐரோப்பியர்கள் - குறிப்பாக பிரித்தானியர்கள் - சென்ற பல இடங்களில் காலனிகளை நிறுவியபோது, உள்ளூர் மக்களுடன் ஒப்பந்தம் செய்து கொண்டார்கள்.

மாறாக, ஆஸ்திரேலியா என்ற மண்ணில்மக்களேவாழவில்லைஎன்றுதாமாகவே முடிவெடுத்து, இங்கு பல்லாயிரம் வருடங்களாக வாழ்ந்தவர்களை மனிதர்களாகவே மதிக்காமல் சட்டங்களை இயற்றி, அவர்களது உரிமைகளையும் உடமைகளையும் பறித்ததுமட்டுமின்றி, அவர்களது அடையாளத்தையும் மாற்ற முற்பட்டார்கள்.

ஆனால், ஒதுக்குப் புறமான பகுதிகளில் வாழ்ந்த பூர்வகுடி மக்கள் சிலர் மட்டும் தமது அடையாளத்தைத் தொடர்ந்து பேணக்கூடியதாக இருந்தது. அவர்களில் சிலர் தாம், மேர்தீவு அல்லது மர்ரே தீவு மக்கள்.

தற்செயலாக நடக்கும் பல செயல்கள் சரித்திரத்தையே மாற்றியிருக்கின்றன என்பதற்கு எடீமாபோவின் வரலாறு ஒரு நல்ல சான்று. மேர்தீவில் வாழ்ந்த எடீமாபோ, ஆரம்பக் கல்வி மட்டுமே கற்றிருந்தார். ஆரம்ப நாட்களில் முத்துக் குளிப்பவராகவும், கரும்புத் தோட்டத் தொழிலாளியாகவும் வேலை புரிந்தார்.

உள்ளூர்காவல்துறையுடன்ஏற்பட்ட சில கசப்பான சம்பவங்களைத் தொடர்ந்து, ஆஸ்திரேலியாவில் ரயில் பாதை கட்டுமானப் பணியாளராகவும் வேலை பார்த்தார். அப்போது ஒரு பெண்ணைக் காதலித்து, இறக்கும்வரை அவருடனேயே மணவாழ்க்கையைத் தொடர்ந்தார்.

பிறந்த தீவைவிட்டு எடீமாபோ ஆஸ்திரேலியாவந்தது ஒருதற்செயலான விடயம் என்றால், அவர் குயின்ஸ்லாந்து மாநிலத்தின் ஜேம்ஸ் கூக் பல்கலைக்கழகத்தில் தோட்ட வேலை செய்ய வேலைக்கமர்த்தப்பட்டது இன்னொரு தற்செயலான விடயம். அதிலும் இரண்டு சரித்திரப் பேராசிரியர்களின் நட்பு இவருக்குக் கிடைத்தது மேலும் முக்கியமான விடயம்

பேராசிரியர்கள் Henry Reynolds மற்றும் Noel Loos ஆகிய இருவரும் இவருக்கு நில உரிமை குறித்த உண்மை நிலவரத்தை எடுத்துச் சொன்னார்கள். பலசந்ததியாக, எடீமாபேர் உரிமை கொண்டிருந்த தனது பூர்வீக மண்ணின் மேல் அவருக்கு சட்ட உரிமை எதுவும் இல்லை என்ற உண்மை தெரியவந்த போது அதனை எதிர்த்துப் போராடத் துணிந்தார்.

பிரித்தானியர்கள் இந்த நாட்டில் காலடி வைத்தபோது TerraNullius - "இந்தமண்ணில்யாரும்குடியிருக்கவில்லை" - என்று பிரித்தானியர்கள் பிரகடனப்படுத்தி பெருமளவில் இந்தமண்ணில்குடியேறி, இங்கு வாழ்ந்த பூர்வீக மக்களுக்கு நில உரிமை இல்லை என்று சட்டம் இயற்றினார்கள். நிலத்தில் உரிமை கொண்டாட சட்டப்படி உறுதிப்பத்திரம் எதுவும் தனது கைகளில் இல்லாவிட்டாலும் சந்ததி சந்ததியாகத் தான் வாழ்ந்த மண் தனக்கே உரித்தானது என்று எடீமாபோ வழக்குத் தொடர்ந்தார்.

பேர்த் நகரைச் சேர்ந்த வழக்குரைஞர் Greg McIntyre வழக்கை முன்னெடுக்க ஒப்புக்கொண்டார். BarristerRonCastan மற்றும் Barrister Bryan Keon- Cohen ஆகியோர் இந்த வழக்கில் இணைந்து வாதாடினார்கள். "அந்தநிலம் அரசுக்குச் சொந்தமானது" என்று குயின்ஸ்லாந்து மாநில அரசு வாதிட்டது.

இறையாண்மை, நிலபயன்பாடு, சொத்துரிமை, பரம்பரைபரம்பரையாக அங்கு வாழ்ந்தமை, இழப்பீடு, மற்றும்இதனால் ஏற்படக்கூடிய அரசியல் தாக்கங்கள் என்ற ஆறுவிடயங்களைக் கருத்தில் கொள்ளவேண்டும் என்று இரு பகுதியினரும் வாதிட்டார்கள்.

இந்த வழக்கு ஆரம்பிக்கு முன், அதற்கான ஆவணங்களைத் தேடி அட்டவணைப்படுத்த எடீமாபோவிற்கு ஐந்து வருடங்கள் எடுத்தன.

தனதுகல்வித்தராதரத்தைசற்றுமேம்படுத்திக்கொள்வதற்காக அவர்சிலசட்ட வகுப்புகளில் சேர்ந்துகொண்டார். தனது சமூகத்தின் மேம்பாட்டிற்காக, பூர்வீக மக்களுக்கான பாடசாலைகளை நிறுவ உதவிபுரிந்தது மட்டுமல்லாமல், அவற்றில் ஒரு ஆசிரியராகவும் கடமையாற்றினார். இவரது வழக்கில் மேர் தீவைச் சேர்ந்த போதகர் Dave Passi, Sam Passi, James Rice, Celuia Mapo Salee மற்றும் Barbara Hocking ஆகியோரும் இணைந்து கொண்டார்கள்.

கம்யூனிஸ்ட் கட்சியும் அவருக்கு உதவ முன்வந்தது. அவர்களிடம் சில உதவிகளை ஆரம்பத்தில் அவர் பெற்றிருந்தாலும் வன்முறைவழிகளை முற்றாகத் தவிர்த்து சட்ட வழிகளில் மட்டுமே தனது போராட்டத்தை முன்னெடுத்தார் எடீமாபோ.

**1982** ஆம் ஆண்டு மே **20**ஆம் நாள் இந்த வழக்கிற்கான சட்ட நடவடிக்கைகள் ஆரம்பமாகின. அதனை முறியடிக்க நினைத்த குயின்ஸ்லாந்து மாநில நாடாளுமன்றம் **1985**ஆம் ஆண்டில் நில உரிமை குறித்த சட்டமொன்றை நிறைவேற்றியது. அந்தச்சட்டம்ஆஸ்திரேலிய அரசியலமைப்பிற்கு முரணானது என்று இன்னொரு வழக்கை எடீமாபோ குழுவினர் தொடுத்துவிட்டனர்.

எடீமாபோ தொடுத்த வழக்கை விசாரித்த நீதிபதி, குயின்ஸ்லாந்து மாநில உச்சநீதிமன்றம்தான் அதனை ஆராயவேண்டும் என்று **1986**ஆம் ஆண்டு கூறிவிட்டது. **1975**ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட நாட்டின் இனப்பாகுபாடு சட்டத்துடன்முரண்பட்டதால், **1985**ஆம் ஆண்டில்நிறைவேற்றப்பட்ட நிலஉரிமை குறித்த சட்டம் செல்லாது என்று இந்த வழக்கை விசாரித்த உச்சநீதிமன்ற நீதிபதி **1990** ஆம்ஆண்டு நவம்பர் **16** ஆம் நாள் தீர்ப்பளித்தார். இந்தத்தீர்ப்பு வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, பூர்வீக நிலத்தில் உரிமை இருக்கிறதா, இல்லையா என்பதைத் தீர்மானிக்க உரிமையுள்ள ஒருவர், நில உரிமை கேட்க முடியுமா என்று ஆராய வேண்டும் என்ற நோக்கில் வழக்கை தொடரலாம் என்று உச்ச நீதிமன்றம் ஒப்புக்கொண்டது.

ஆனால், சம்போ குடும்பத்தில் பிறந்த எடீமாபோவிற்கு அந்த உரிமை இல்லை என்று அரசதரப்பினர் வாதிட்டனர். இருப்பினும், இவருடன் இணைந்த மற்றவர்கள் அதே உரிமையைக் கோரமுடிந்தது. மேர்தீவு மக்களால் முன்வைக்கப்பட்ட வழக்கு, அவர்களது பூர்வீகம், பழக்கவழக்கம், உள்ளூர் சட்டங்கள் மற்றும் அந்த மண்ணின் பாரம்பரிய உரிமையுடனான அமைப்புக்கு அடிப்படையானது என்பதையும், நிலம் தொடர்பான அவர்களின் பாரம்பரிய உரிமைகள் மற்றும் கடமைகளையும் உறுதிப்படுத்துவதை வெற்றிகரமாக நிரூபித்தது.

***1992* ஆம் ஆண்டு ஜூன் *3* ஆம் திகதி** உச்ச நீதிமன்ற தீர்ப்பை வழங்கிய ஏழு நீதிபதிகளில் ஆறு பேர் பூர்வீக மக்களின் நில உரிமை குறித்தகோரிக்கையை உறுதி செய்தார்கள். பிரித்தானியக் குடியேற்றம் ஏற்பட்டபோது இந்த கண்டத்தின் நிலங்கள் "யாருக்கும் சொந்தமில்லாத நிலங்கள்" - terra nullius என்பது தவறான எண்ணம் என்றும், மேர்தீவு மக்களுக்கு அந்த மண்ணின் மீது 'உரிமை உண்டு' என்றும் அந்தத்தீரிப்பில் தெரிவிக்கப்பட்டது.

எடீமாபோ வழக்குத் தொடர்ந்து சுமார் **18** வருடங்களின் பின்னர்தான், பூர்வீக குடிமக்களுக்கு அவர்களது பூர்வீக நிலத்தில் சட்டஉரிமை இருக்கிறது என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

ஆனால், இந்த தீர்ப்பு வெளியாவதற்கு நான்கு மாதங்களுக்கு முன்னரே புற்றுநோயால்பாதிக்கப்பட்டிருந்தஎடீமாபோ இறந்துவிட்டார். பூர்வீக பின்னணி கொண்டிராத மக்கள் ஏற்கனவே சொந்தம் கொண்டாடும் நிலங்களின் உரிமையில் பாதிப்பில்லாமல், அரசுக்கு சொந்தமான நிலங்கள் தேசிய பூங்காக்கள் மற்றும் சில குத்தகைக்கு விடப்பட்ட நிலங்கள்மீது மட்டும் பூர்வீக மக்கள் தங்கள் உரிமையை நிரூபித்தால் அந்த நிலங்களை உரிமை கொள்ளலாம் என்று இந்த சட்டத்தில் சொல்லப்பட்டிருப்பதால் இந்த தீர்ப்பை எதிர்ப்பவர்களும் இருக்கிறார்கள்.

எடீமாபோவின் நினைவாக அவர் தோட்ட வேலைசெய்த ஜேம்ஸ்கூக்பல்கலைக்கழகம், தனது நூலகத்திற்கு எடீ-மாபோவின் பெயரைசூட்டியிருக்கிறது. ஜூன் மாதம் மூன்றாம் நாள் மாபோ தினம் என்று ஆஸ்திரேலிய பூராகவும் கொண்டாடப்படுகிறது. அவரது வெற்றி அவர் உயிருடன் இருக்கும்போது கிடைக்கவில்லை. ஆனால், அவர் பெற்ற வெற்றியை ஆஸ்திரேலியாவில் வாழும் பூர்வீகமக்கள் இன்றும் அனுபவிக்கிறார்கள். அதில் ஒன்றுதான் அண்மையில் யிண்ட்ஜி ஃபார்ண்ட் மக்களுக்கு வழங்கப்பட்ட தீர்ப்பு.

# Sai Shree Foods
Pty. Ltd.

## AUSTRALIA - CANADA - INDIA

# REMARKABLE QUALITY AND RELISHING TASTE.




**If you're after the authentic taste of Indian style foods look no further, Sai Shree Foods is the manufacturer of quality Indian Yoghurt, Idli & Dosa mix, Paneer, Shrikhand Kesar Elaichi, Mango Lassi, Punjabi Lassi and much much more. Sai Shree Foods produce a Quality Australian Products in Melbourne facility.**

**We are also distributing Grand snacks/pickles and Mambalam Iyers pickles (Famous South Indian brand)**

**HEAD OFFICE:** Sai Shree Foods Pty. Ltd.
Ph: 03 9706 6211
Unit 17/69-77, Mark Anthony Drive, Dandenong - VIC 3175

**DISTRIBUTORS:** Sai Shree International Pty Ltd
Sydney & Canberra - Mr Bhaskar - 0421 835 554
Products Available - Adelaide, Perth, Brisbane & Darwin

# பந்துல போட்ட திட்டம் மீது மஹேல அணியினர் எறிந்த பந்து

ஆர்.சனத்

உலகெங்கிலும் கோரத்தாண்டவமாடிவரும் கொடிய கொரோனா வைரஸின் கோபம் இன்னும் தணியவில்லை. அமெரிக்காவிலும், ஐரோப்பியாவிலும் ஆழமாக காலூன்றி - மரண வேட்டை நடத்தி, மனித குலத்தையே அது நிலைகுலைய வைத்துள்ளது. அதேபோல் தெற்காசிய நாடுகளிலும் கொரோனாவின் தாக்கம் எச்சரிக்கை மட்டத்திலேயே இருக்கின்றது. மனித உயிர்களுக்கு மட்டுமல்ல, உலக பொருளாதாரத்துக்கும் வேட்டுவைத்துள்ள இந்த கொரோனா, எப்போது கட்டுக்குள் வரும் என்பதை கணிக்கமுடியாமல் உலகசுகாதார அமைப்பு திண்டாடி வருகின்றது. இதனால் திரும்பும் திசையெல்லாம் கொரோனா பற்றியே பேச்சு.









ஆனால், இலங்கையில் கொரோனா அச்சுறுத்தலுக்கு மத்தியில் அரசியல் தீயும் கொளுந்துவிட்டு எரியதொடங்கியுள்ளது. விரைவில் பொதுத்தேர்தல் நடைபெறவுள்ளதால் களத்தை சூடாக வைத்திருக்கவே அரசியல்வாதிகள் விரும்புகின்றனர். குறிப்பாக கொரோனாவைக் கட்டுப்படுத்தி - 'போரை ஒழித்ததுபோல வைரஸுக்கும்) முடிவு கட்டிவிட்டோம்" - என பெருமெடுப்பில் பிரசாரம்செய்து மூன்றிலிரண்டு பெரும்பான்மையைக் கைப்பற்றுவதே ராஜபக்ச அணியின் இலக்காக இருக்கின்றது.

எப்படியாவது இதனைத்தடுத்து நிறுத்தி வெற்றியைத்தம்பக்கம் திருப்ப வேண்டும் என்பதற்காக பல நெருக்கடிகளுக்கு மத்தியிலும் எதிரணிகள் படாதபாடு படுகின்றன. இதற்காக தக்க தருணம் வரும்வரை காத்திருப்பதுடன், சிறியதொரு வாய்ப்பு கிடைத்தால்கூட ஆளுங்கட்சி மீது சொற்கணைகளைத் தொடுத்து பெரும் தாக்கத்தை ஏற்படுத்துவதற்கு முயற்சிக்கின்றன.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே 'கிரிக்கெட் போட்டியில் 'NO BALL எறிந்து, FREE HIT வாய்ப்பு கொடுப்பதுபோல" எதிரணிக்கு அடித்து ஆடுவதற்கான வாய்ப்பை உருவாக்கிக்கொடுத்துள்ளார் அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன.

எனவே, வெறும்வாயை மெல்பவர்களுக்கு அவல் கிடைத்தால் எப்படியிருக்கும்?

அதுபோல பந்துலவை வைத்து அரசாங்கத்துக்கு எதிராக தரமாகவும் - சிறப்பாகவும்-எதிரணிகள் சம்பவங்களை அரங்கேற்றிவிட்டன. முன்னாள் கிரிக்கெட் வீரர்களும் இதுவிடயத்தில் இணைந்துகொண்டதால் இறுதியில் பின்வாங்கவேண்டிய நிலை அரசாங்கத்துக்கு ஏற்பட்டது.

### அப்படி என்னதான் நடந்தது?

இலங்கையில் கிரிக்கெட் போட்டிகளை நடத்துவதற்கும் பயிற்சிகளை பெறுவதற்கும் ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச தரம்வாய்ந்த 8 மைதானங்கள் இருக்கும் சூழ்நிலையில், இலங்கையில் மிகப் பெரிய சர்வதேச கிரிக்கெட் மைதானத்தை அமைப்பதற்கான இடத்தை அமைச்சர் பந்துல குணவர்தன அண்மையில் பார்வையிட்டார்.

நான்குகோடி அமெரிக்க டொலர் செலவில், 26 ஏக்கர் நிலப்பரப்பில் 60 ஆயிரம் பார்வையாளர் ஆசனங்களைக் கொண்ட மைதானத்தை ஹோமாகம பகுதியில் அமைப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

விளையாட்டுத்துறைக்கென அமைச்சரொருவர் இருந்தாலும் ஹோமாகம தொகுதி அமைச்சர் பந்துல குணவர்தனவின் அரசியல் கோட்டை என்பதால் இப்பணிகளை தாமே களத்தில் இறங்கி முன்னெடுத்து, வரலாற்று ஏடுகளில் அவர் இடம்பிடிக்க முயற்சித்தார்.

எனினும், கொரோனா வைரஸ் தாக்கத்தால் முழு நாடே முடங்கியிருந்த சூழ்நிலையில், நிவாரணங்கள் கிடைக்காததால் - மூவேளைகளுக்கு பதிலாக - பெரும்பாலான மக்கள் ஒருவேளை உணவு உண்டு, வாழ்வா, சாவா என்ற கட்டத்தில் போராடிக்கொண்டிருக்கையில் இப்படியொரு முயற்சி முன்னெடுக்கப்பட்டமை பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது.

குறிப்பாக மற்றுமொரு சர்வதேச மைதானம் தேவைதானா என்ற வினாவோடு விவாதத்தை மங்கலகரமாக ஆரம்பித்து வைத்தார் இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் மஹேல ஜயவர்தன. அதன்பின்னர், இவ்விவகாரம் அரசியல் களம்வரை சென்றது. அரசாங்கத்துக்கு எதிராக நாலா புறங்களில் இருந்து விமர்சனக் கணைகள் தொடுக்கப்பட்டன.

மஹேல ஜயவர்தன அல்லாமல் வடக்கிலுள்ள புத்திஜீவியொருவர் இந்த கேள்வியை எழுப்பிசர்ச்சையைக்கிளம்பிவிட்டிருந்தால் இது புலம்பெயர் புலிகளின் சதி, அவர்களிடம் சம்பளம் வாங்கிக்கொண்டே இப்படி செயற்படுகின்றனர் என குற்றஞ்சாட்டிவிட்டு - சிங்கள மக்களை திசை திருப்பிவிட்டு - பந்துலவை அரசாங்கம் இலகுவில் பிணை எடுத்திருக்கும்.

ஆனால், அரசாங்கத்தை பொதுவெளியில் விமர்சிக்காத - சமூகத்தில் நன்மதிப்புடைய நபர்கள்கூட 'பிரமாண்ட சர்வதேச கிரிக்கெட் மைதானம்' திட்டத்துக்கு போர்க்கொடி தூக்கியதால் நாமல் ராஜபக்சவின் தலையீட்டுடன் அலரிமாளிகையில் அவசர சந்திப்பொன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கிரிக்கெட் வீரர்களும் அழைக்கப்பட்டிருந்தனர்.

### மாற்று யோசனையும் வடக்கு, கிழக்கு விளையாட்டுத்துறை மேம்பாடும்

'இயஸ் சேர், நோ சேர் என வளைந்து கொடுக்காமல் சொல்லவேண்டியவிடயங்களை உரிய வகையில் இக்கூட்டத்தில் மஹேல ஜயவர்தன, சங்கக்கார, ரொஷான் மஹாநாக ஆகியோர் எடுத்துரைத்தனர். அதாவது, புதிதாக மைதானம் அமைக்க தேவையில்லை என்பதே கூட்டத்தில் பங்கேற்றிருந்த வீரர்களின் ஒருமித்த நிலைப்பாடாக இருந்தது. மைதானம் அமைப்பதற்காக செலவிட உத்தேசிக்கப்பட்ட பணத்தை இலங்கையில் விளையாட்டுத் துறையைக் கட்டியெழுப்ப முதலிட்டால் அது சிறப்பாக இருக்கும் எனவும் யோசனைகளை முன்வைத்தனர்.

இக்கூட்டத்தில் பலரும் கருத்துகளை வெளியிட்டிருந்தாலும் மஹேல ஜயவர்தன கூறிய விடயங்கள் முக்கியமானவையாக அமைந்தன.

"வடக்கு மாகாணத்தில் 26 பாடசாலைகளில் கிரிக்கெட் விளையாடப்படுகின்றது. பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. ஆனால், உரிய வகையில் பயிற்சிகளை மேற்கொள்வதற்கு வசதிகள் இல்லை.

"வடக்கு, கிழக்கு மாகாணங்களில் திறமையான வீரர்கள் இருக்கின்றார்கள். அவர்களுக்கு இன்னும் உரிய ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படவில்லை. அது தொடர்பில் கவனம் செலுத்தப்படவேண்டும்." - என்றார் மஹேல.

அவரின் இக்கூற்றை ஆமோதிக்கும்வகையில் சங்காவும், சனத் ஜயசூரியவும் சில விடயங்களை சுட்டிக்காட்டினர்.

ஆக, வடக்கு - கிழக்கில் திறமையான கிரிக்கெட் வீரர்கள் இருக்கின்றபோதிலும் உரிய பயிற்சி, வசதிகள் இன்மையால் அவர்களால் தேசிய அணியில் இடம் பிடிக்கமுடிவதில்லை. எனவே, அவர்களையும் தேசிய அணிக்குள் உள்வாங்க வேண்டும் என்பதே முக்கிய மூன்று வீரர்களாலும் முன்வைக்கப்பட்ட கருத்துகளின் சாராம்சமாகும்.

உள்நாட்டுப்போர் முடிவடைந்து 11 ஆண்டுகள் கடந்துள்ளபோதிலும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சர்வதேச தரத்துக்கேற்ப கிரிக்கெட் விளையாட்டுத்துறையை மேம்படுத்துவதற்கும், வீரர்களை தேசிய அணிக்குள் உள்வாங்குவதற்கும் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கவில்லை என்பது தற்போது உறுதியாகியுள்ளது. தமிழர் தாயகத்தில் இருந்து விளையாட்டு வீரர்கள் உருவாகி, சர்வதேசத்தில் சாதிப்பதை சிங்கள - பௌத்த அரசு விரும்பவில்லை என முன்வைக்கப்படும் குற்றச்சாட்டு நிராகரிக்க முடியாததாகவே இருக்கின்றது.

வெளிநாடுகளில் சுயாட்சிபெற்ற மாநிலங்கள்கூட சர்வதேசபோட்டிகளை ஒருநாடாகவே எதிர்கொள்கின்றன. இன, மத, மொழி, குல வேறுபாடுகளுக்கு அப்பால் திறமைக்கு முன்னுரிமை வழங்கப்படுகின்றது. இன ஒற்றுமையை ஏற்படுத்த விளையாட்டே சிறந்த உபாயமாக காணப்படுகிறது. எனவே, இனிவரும் காலப்பகுதியில் விளையாட்டிலாவது அனைவருக்கும் சம உரிமைகளை வழங்குவது பற்றி அரசாங்கம் சிந்திக்க வேண்டும்.

### கைவிடப்பட்டது திட்டம்

இலங்கையில் தற்போது கொழும்பு, கண்டி, காலி, அம்பாந்தோட்டை, தம்புள்ளை உட்பட 8 இடங்களில் சர்வதேச கிரிக்கெட் மைதானங்கள் உள்ளன. இவற்றில் ஐந்து மைதானங்களில் அடிக்கடி போட்டிகள் இடம் பெறும். இம்மைதானங்களில் பல்வேறு குறைபாடுகள் காணப்படுகின்றன. இவற்றை நிவர்த்திசெய்வது தொடர்பில் அரசாங்கம் கூடுதல் கவனம் செலுத்தவேண்டும்.

1996 ஆம் ஆண்டு இலங்கை கிரிக்கெட் அணி உலகக் கிண்ணத்தை கைப்பற்றிய பின்னர் சர்வதேசத்தின் கவனத்தை ஈர்த்தது. அணியின் வெற்றிநடை தொடர்ந்தது. எனினும், சனத் ஜயசூரிய, அரவிந்த டி சில்வா, முரளிதரன், சமிந்தவாஸ், மஹேல, சங்கக்கார போன்ற வீரர்கள் ஓய்வுபெற்ற பின்னர் அணி படுமோசமான தோல்விகளை சந்தித்துவருகின்றது. கத்துக்குட்டிகள் எல்லாம் அடிக்கடி அதிர்ச்சிவைத்தியம் கொடுத்துவருகின்றன.

சர்வதேசகிரிக்கெட் சபையின் தரவரிசையின் அடிப்படையில் ஒருநாள் போட்டித் தொடரில் இலங்கை அணி 8 ஆவது இடத்திலும், டெஸ்ட் போட்டிகளில் 5 ஆவது இடத்திலும், இருபதுக்கு இருபது போட்டிகளில் 7 ஆவது இடத்திலும் உள்ளன.

எனவே, வீழ்ச்சியடைந்துள்ள இலங்கை கிரிக்கெட்டுக்கு புத்துயிர்கொடுக்கவேண்டுமெனில் பாடசாலை மட்டத்திலிருந்து உரிய பயிற்சிகள் நடத்தப்படவேண்டும். மஹேல கூறியதுபோல வடக்கு - கிழக்கு உட்பட நாட்டில் சகலபகுதிகளிலுமிருந்து திறமையான வீரர்களை அடையாளம் கண்டு அவர்களுக்கு தேவையான பயிற்சிகளை வழங்கவேண்டும். உடனடியாக அல்லாவிட்டாலும் என்றாவது ஒருநாள் எழுச்சி நிச்சயம். ஏனைய விளையாட்டுகளுக்கும் இந்த அணுகுமுறை பொருந்தும். மாறாக பெரிய மைதானம் அமைத்துவிட்டதால் ஒரே நாளில் விளையாட்டில் புரட்சி நடக்கப்போவதில்லை. இதனை புரிந்துதான் மைதானம் அமைக்கும் முயற்சியைக் கைவிட பிரதமர் தீர்மானித்துள்ளார்.

மஹிந்த ஜனாதிபதியாக இருந்தபோது குடும்பமொன்றுக்கு உணவு தேவையை பூர்த்திசெய்துகொள்ள 2 ஆயிரத்து 500 ரூபா இருந்தால்போதும் எனகூறிசர்ச்சையில் சிக்கிய பந்துல குணவர்தன, தற்போது மைதானவிடயத்திலும் விஞ்ஞானவிளக்கம் வழங்க முயற்சித்துவருகிறார். எது எப்படி இருந்தாலும் மைதானத்தை திறக்காமலேயே இலங்கையின் முன்னாள் வீரர்கள் களத்தில் இறங்கி ஆடி, பந்துல போட்ட திட்டத்திருந்து அவரை ஆட்டமிழக்கச் செய்திருக்கிறார்கள் என்பது உண்மை.

# H.N. PAWN BROKER
# எச்.என். அடகு கடை

- குறைந்த வட்டி வீதம்
- நம்பிக்கை மிகுந்த ஒரே இடம்
- சேவைக்கட்டணம் இல்லை
- சனிக்கிழமைகளிலும் திறந்திருக்கும்

## தங்கப்பவுணுக்கு அதிகூடிய முற்பணம் வழங்கப்படும்



## வட்டி 3%

Hub Arcade, 28/15-23 Langhorne St, Dandenong VIC 3175

Tel/Fax : 03 8712 1406, Mob : 0423 094 478

# வாசிக்க மறவாத சபேசன் என்ற தமிழின் காதலன்

# சுவாசிக்க மறந்துபோன வலி எமக்கு நெடுந்துயரே!

முருகபூபதி

ஈழத்தமிழர்களின் புலப்பெயர்வு அவுஸ்திரேலியாவை நோக்கி ஆரம்பித்தபோது, முதலில் வந்தவர்கள் கல்வி, தொழில்வாய்ப்பு முதலான காரணங்களைத்தான் முன்னிறுத்தியிருந்தனர். ஏற்கனவே லண்டனுக்கும் சிங்கப்பூர், மலேசியாவுக்கும் சென்றவர்களும் அவுஸ்திரேலியாவில் நல்ல எதிர்காலம் இருக்கிறது என்ற நம்பிக்கையில்தான், இந்த கங்காரு தேசத்தில் தொழில் வாய்ப்பு பெறுவதற்காக வந்து குடியேறினர்.

1980இற்குப்பின்னர்ஐரோப்பியநாடுகளுக்கு விசா அவசியமின்றி செல்லக்கூடிய சந்தர்ப்பம் கிடைத்தபோது, ஈழத்தவர்கள் லண்டன், பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலியைநாடிச்சென்றார்கள்.ஆனால், அதேகுறிப்பிட்டகாலத்தில்அவுஸ்திரேலியாவுக்கு வரவிரும்பியவர்கள் முறைப்படி விசா பெற்றுத்தான் வரநேர்ந்தது.

அவ்வாறு வந்தவர்களில் பெரும்பாலானவர்களும் ஒரு சில மாதங்கள்தான் இங்கு தங்குவதற்கு அனுமதிபெற்றிருந்த



நடேசன் நூல்களின் வெளியீட்டில் சபேசன்

ஓவர்கள். தொடர்ந்து இங்கே வாழ வேண்டுமானால் குடிவரவுத் திணைக்களத்துக்கு சட்டத்தரணிகள் ஊடாக விண்ணப்பித்து அகதி அந்தஸ்து கோர வேண்டும்.

அவ்வாறு1987ஆம்ஆண்டில்நானும் இங்கு பிரவேசித்தபோது, எனக்கு பத்திரிகை ஊடகத்தொழிலைத்தவிர வேறு எந்தவொரு தொழிலும் தெரியாது. வாழ்க்கையை நடத்துவதற்காக ஒரு தொழிலைத்தேடிக்கொண்டே,இயந்திர மயமான அன்றாடப் பொழுதுகளில் கிடைக்கும்சொற்ப நேரங்களில்இலங்கை பத்திரிகைகள் வீரகேசரி, தினகரன், மற்றும் மல்லிகை இதழிலும் எழுதிக் கொண்டிருந்தேன்.

1989ஆம்ஆண்டுஜூன்மாதம்25ஆம் திகதி மெல்பன் வை. டபிள்யூ. சி. மண்டபத்தில்எனது இரண்டாவது சிறுகதைத் தொகுதி "சமாந்தரங்கள்" நூலுக்கு வெளியீட்டு விழாவை நடத்தியபோது, அக்காலப்பகுதியில் சிட்னியிலிருக்கும் தனது புதல்வன் மருத்துவர் அநுராவிடம் வந்து சேர்ந்த ஈழத்தின் மூத்த எழுத்தாளர் எஸ். பொன்னுத்துரையையும் அழைத்துப் பேசவைத்தேன்.

அன்றைய விழாவில்தான் அவர் "புலம்பெயர்ந்தோர் இலக்கியம்" என்ற அடையாளத்தை பிரகடனப்படுத்தினார். அன்றிலிருந்து அந்த சொற்பதம்பேசுபொருளானது!

அன்றைய நிகழ்வில்தான் லண்டனிலிருந்து மெல்பேர்னுக்கு வந்து குடியேறியிருந்த எழுத்தாளர் அருண். விஜயராணியும் முதல் முதலில் இங்கு மேடையேறி இலக்கியம் பேசினார்.

அந்தவகையில் எம்மூவருக்கும் அது தான் அவுஸ்திரேலியாவில் முதலாவது இலக்கிய மேடை. அந்த நிகழ்ச்சிக்கு விக்ரோரியா தமிழ் அமைப்புகளின் தலைவர்களும் கலந்துகொண்டு உரையாற்றினர்.

அதன்பின்னர், மெல்பனுக்கு வந்து குடியேறியிருந்த சண்முகம் சபேசன், விக்ரோரியாஇலங்கைத் தமிழ்ச்சங்கத்திலும் இணைந்து (இந்த அமைப்பின் பெயர் அவ்வப்போது மாறியிருக்கிறது) அதன் சார்பில் வாராந்தம் ஒலிபரப்பான சமூக வானொலி 3 ஸி.ஆர். தமிழ்க்குரலில் செய்தி வாசிப்பவராக இணைந்து பல நிகழ்ச்சிகளையும் அதில் ஒருங்கிணைத்தார். எனது எழுத்துக்களைப்பற்றியும் கேள்விப்பட்டிருந்த சபேசன், எனது "சமாந்தரங்கள்"கதைத் தொகுதியை யாரிடமிருந்தோ பெற்று படித்துவிட்டு என்னை தொடர்புகொண்டார்.

அந்தத் தொகுப்பில் வடபகுதி தமிழ் இளைஞர்களிடத்தில் 1980 இற்குப் பின்னர் தோன்றிய சிந்தனைகள், தொடர்ந்து வந்த போர்க்காலங்கள், இந்தியாவிலிருந்து அமைதிகாக்கவந்த படையினர்(?) பற்றிய கதைகளும் இடம்பெற்றிருந்தமையால், சபேசனை அக்கதைகள்கவர்ந்திருக்க வேண்டும்.

1997 ஆண்டு,எனது இலக்கியப் பிரவேச வெள்ளிவிழாவை முன்னிட்டு மெல்பனில் அதே வை. டபிள்யூ. சி. மண்டபத்தில்மூத்த கலை, இலக்கிய ஆளுமைகளான ஓவியர் கே.ரி. செல்வத்துரை, கவிஞர் அம்பி, அண்ணாவியார் இளைய பத்மநாதன், எழுத்தாளர் எஸ். பொன்னுத்துரை ஆகியோரை பாராட்டி விருது வழங்கி கௌரவிக்கும் நிகழ்வை எமது "முகுந்தன்" பதிப்பகத்தினால் நடத்திய போது நண்பர் சபேசனும் கலந்து கொண்டு உரையாற்றினார்.

இந்நிகழ்வு சிட்னியிலிருந்து வருகை தந்த பேராசிரியர் ஆசி. கந்தராஜாவின் தலைமையில் நடைபெற்றது.

அந்த நிகழ்வில் மெல்பன் சமூக வானொலிகளைச் சேர்ந்தவர்களை அழைத்து, அவர்களின் கரத்தினால் குறிப்பிட்ட ஆளுமைகளுக்கு விருதுகளையும் வழங்கச்செய்திருந்தேன்.

"ஆளுமைகள் வாழும்போதே பாராட்டி கௌரவிக்கப்படல் வேண்டும், அவர்கள் மறைந்த பின்னர் தரப்படும் மரியாதைகள் அனைத்தும் அவற்றைத் தருபவர்களுக்கு மாத்திரமே பெருமை சேர்ப்பிக்கும்" - என்ற எனது சிந்தனை நண்பர் சபேசனையும் கவர்ந்திருக்கவேண்டும்.

(13ஆம் பக்கம் பார்க்க)



வாசிப்பு அனுபவப் பகிர்வில் சபேசன்

# வாசிக்க மறவாத சபேசன் என்ற தமிழின் காதலன்

## சுவாசிக்க மறந்துபோன வலி எமக்கு நெடுந்துயரே!

(12ஆம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்த சில வருடங்களில், விக்ரோரியா இலங்கைத் தமிழ்ச்சங்கத்தின் 20 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் முத்தமிழ் விழாவும் வந்தது. அவ்விழாவுக்காக தமிழகத்திலிருந்து கவிஞர் அப்துல் ரகுமானும் அழைக்கப்பட்டார்.

அவ்வேளையில்நண்பர்கள்சபேசனும் நந்தகுமாரும் கவிஞரை, மருத்துவர் ரகுமான் அவர்களின் இல்லத்தில் சந்தித்து இலக்கிய கலந்துரையாடலிலும் ஈடுபட்டனர்.

மெல்பனில் HungarianCommunity Centre மண்டபத்தில்நடைபெற்றசங்கத்தின் 20 ஆண்டு நிறைவு விழா அச்சமயம் தலைவராக இருந்த திரு. பூபாலசிங்கம் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. அவ்விழாவில் இடம்பெற்ற இலக்கிய கருத்தரங்கினை ஒருங்கிணைத்தவர் சபேசன். "புலம்பெயர்ந்தோர் இலக்கியம் - போர்க்கால இலக்கியம்" முதலான தலைப்புகளில்,எழுத்தாளர் பாடும்மீன் சு. சிறிஸ்கந்தராசா தலைமையில் நடந்த இக்கருத்தரங்கில் நானும் கவிஞர் அப்துல் ரகுமானும், கலைஞர் மாவை நித்தியானந்தனும் உரையாற்றினோம்.

அவ்விழாவில் "வாழும்போதே கௌரவிப்போம்"என்ற நிகழ்ச்சியில் மாவை நித்தியானந்தன், 'நடன நர்த்தகி' சாந்தி இராஜேந்திரா, நாட்டியக் கலைஞர் சந்திரபானு உட்பட மற்றும் சிலரும் நானும் பாராட்டி விருது வழங்கி கௌரவிக்கப்பட்டோம்.



இவ்வாறு கலை, இலக்கிய செல்நெறியை வடிவமைக்கும் ஆற்றலும் சபேசனிடத்தில் குடியிருந்தது.

மறுநாள் அதே மண்டபத்தில் முத்தமிழ் விழாவும் நடைபெற்றது. சபேசன் 3 ஸி.ஆர். "தமிழ்க்குரல்" வானொலியில் கலை, இலக்கியம் சார்ந்த நிகழ்ச்சிகளுக்கும் முன்னுரிமை தந்தவர். இலக்கிய நூல்களை அறிமுகப்படுத்தி, வாசிப்பு அனுபவங்களை நேயர்களுடன் பகிர்ந்து கொண்டவர். என்னையும் எழுத்தாளர் நித்தியகீர்த்தியையும் வானொலி கலையகத்திற்கு அழைத்து இலக்கிய சந்திப்பு உரையாடல்களையும் ஒலிபரப்பினார்.

மெல்பனில்Thornbury என்றஇடத்தில் அமைந்த ஒரு தேவாலய மண்டபத்தில் நடைபெற்ற எனது வெளிச்சம் (சிறு-கதைத் தொகுதி ) சந்திப்பு (நேர்காணல் தொகுதி) வெளியீட்டு அரங்கு யாழ். பல்கலைக்கழக கல்விப்பீடத்தின் விரி-வுரையாளர் கலாநிதி த. கலாமணியின் தலைமையில் நடந்தபோது, சபேசன் சந்திப்பு நூல் பற்றிய தனது நயப்புரையை சமர்ப்பித்து உரையாற்றினார்.

அவரது சேகரிப்பில் ஏராளமான இலக்கியம், அறிவியல், சினிமா, விஞ்ஞானம் தொடர்பான நூல்கள் இருந்தன. தான் படித்த நூல்கள் பற்றி என்னுடன் சிலாகித்துப்பேசுவதும் அவரது வழக்கம்.

தமிழகப்பேராசிரியரும்சபேசனின்நல்ல நண்பருமானசுப. வீரபாண்டியன்பொடா சட்டத்தின் கீழ் கைதாகி சிறையிலிருந்த போது எழுதிய நூல் அது ஒரு பொடா காலம். அதில் ஒரு பிரதியையும் எனக்கு வாசிக்கக்கொடுத்திருக்கும்சபேசன், வருடந்தோறும்சென்னையில்நடைபெறும் புத்தகத் திருவிழாவுக்கும் சென்று வரும் பழக்கத்தையும் கொண்டிருந்தவர்.

சபேசன், தமிழ்நாட்டின் தமிழ் உணர்வாளர்கள் தொல். திருமாவளவன், வை.கோபாலசாமி, பேராசிரியர் சுப வீரபாண்டியன், பழ. நெடுமாறன், ஓவியர் புகழேந்தி, கவிஞரும் திரைப்பட வசன கர்த்தாவுமான அறிவுமதி, இயக்குநர் தங் கர்பச்சான், கவிஞர்கள்வைரமுத்து, காசி. ஆனந்தன் ஆகியோருடனும் நட்புறவு கொண்டிருந்தவர்.

> **சபேசன், தமிழ்நாட்டின் தமிழ் உணர்வாளர்கள் தொல். திருமாவளவன், வை.கோபாலசாமி, பேராசிரியர் சுப வீரபாண்டியன், பழ. நெடுமாறன், ஓவியர் புகழேந்தி, கவிஞரும் திரைப்பட வசன கர்த்தாவுமான அறிவுமதி, இயக்குநர் தங் கர்பச்சான், கவிஞர்கள் வைரமுத்து, காசி. ஆனந்தன் ஆகி-யோருடனும் நட்புறவு கொண்டிருந்தவர்.**

இலங்கையில் மல்லிகை ஆசிரியர் டொமினிக்ஜீவா, கவிஞர் புதுவை ரத்தினதுரை ஆகியோருடனும் நட்புறவு பாராட்டியவர். ஈழத்தின்மூத்த எழுத்தாளர்(அமரர்) சிவராஜா, சபேசனின் நெருங்கிய உறவினர் என்பதும் குறிப்பிடத்தகுந்தது.

மெல்பனுக்கு சுப. வீரபாண்டியன், ஈழவேந்தன், உலகத் தமிழர் பேரவையைச் சேர்ந்த வண. பிதா இமானுவேல் அடிக-ளார் உட்பட பல தமிழ் உணர்வாளர்கள் வருகைதந்த சந்தர்ப்பங்களில்சபேசனின் இல்லத்தில்அன்பானஉபசரிப்பில்திழைத்திருக்கிறார்கள்.

அரசியலில் கலை, இலக்கியத்தில் மாற்றுக்கருத்துக்கொண்டவர்களுடனும் சிநேகபூர்வமாக பழகும் மென்மையான இயல்புகளையும் தன்னகத்தே கொண்டிருந்தவர் சபேசன்.

நவீன தமிழ் இலக்கியத்தில் இவருக்கிருந்த தீவிர நாட்டத்தினால், தரமான இலக்கியச் சிற்றிதழ்களையும் நூல்களையும் தருவித்து படிப்பவர். தீராநதி, உயிர்மை, காலச்சுவடு முதலானதரமான இலக்கிய இதழ்களின் தீவிர வாசகன். அதில் வெளியாகிய பல முக்கிய ஆக்கங்களை பிரதி எடுத்தும் எனக்கு அனுப்பியிருக்கிறார்.

அவரது வாசிப்பு அனுபவத்தின் தீவிரம், அவரை புதுச்சேரியில் வதியும் கரிசல் இலக்கிய வேந்தர் என வர்ணிக்கப்படும் மூத்த படைப்பாளி கி. ராஜநாரயணன் அவர்களையும் தேடிச்சென்று உறவாட வைத்தது.

ஈழத்து இலக்கியத்தின் மீதும் புகலிட இலக்கிய முயற்சிகள் குறித்தும் ஆர்வம் காண்பிக்கும் கி. ரா. அவர்கள், சபேசனுடனான அந்த சந்திப்பிற்குப்பின்னர், தீராநதி இதழில் ஒரு கட்டுரையும் எழுதினார். அதற்கு Cover Story முக்கியத்துவமும் வழங்கப்பட்டிருந்தது.

தரமான நூல்களை படிப்பதில் அவருக்கிருந்த ஆர்வத்தை, அவரை சந்தித்த காலம் முதலே நன்கறிவேன். ஒரு சமயம் பாரதியார், கண்ணதாசன், தி. ஜானகிராமன், கி. ராஜநாராயணன், அகிலன், கவிஞர் அம்பி, கனக செந்திநாதன், எஸ். பொன்னுத்துரை, மல்லிகை ஜீவா ஆகியோரின் இலக்கியத்திற்கு அப்பாலான பக்கங்களில் பொதிந்திருந்த சுவாரசியங்களைஎழுதிஅவரிடம்படிக்கக்கொடுத்த போது, அவற்றை வாரம் தோறும் தமது 3 ஸி.ஆர் "தமிழ்க்குரல்"வானொலியில் அவரே வாசித்து சமர்ப்பித்தார். அந்தத் தொடர், பின்னர் கொழும்பு "தினக்குரல்" வாரப்பதிப்பிலும் வெளிவந்தது.

புதுவை இரத்தினதுரையின் "பூவரசம் வேலியும்புலுனிக்குஞ்சுகளும்"நூலைமெல்பனில் அறிமுகப்படுத்திய நிகழ்வும் சபேசனின் தலைமையில்தான் நடைபெற்றது. அவ்வேளையில், வன்னியிலிருந்த புதுவைரத்தினதுரையுடன்நான்தொலைபேசியில் உரையாடுவதற்கும் ஒழுங்கு செய்து கொடுத்திருந்தார்.

நாம் சந்திக்கும் சந்தர்ப்பங்களில் எம்மிருவரிடத்திலும்கலைஇலக்கியம்தான் பிரதான பேசுபொருளாக இருக்கும்.

எமது அவுஸ்திரேலிய தமிழ் இலக்கியக் கலைச்சங்கம் 2012 ஆம் ஆண்டு பிரஸ்டன் நகரமண்டபத்தில் நடத்திய 12 ஆவது தமிழ் எழுத்தாளர் விழாவிலும் அவர் உரையாற்றினார். அத்துடன் நாம் ஒழுங்குசெய்யும் வாசிப்பு அனுபவப் பகிர்வுகளிலும் ஆர்வமுடன் கலந்து கொள்வார்.

கடந்த2019ஆம்ஆண்டுநண்பர்நடேசனின் நூல்களின்விமர்சனஅரங்கு மெல்பனில் நடந்தபோது, நடேசனின் "நைல் நதிக்கரையோரம்" பயண இலக்கிய நூல் குறித்து தனது வாசிப்பு அனுபவத்தை பகிர்ந்துகொண்டார். இதுவே சபேசன் இறுதியாக கலந்துகொண்டு உரையாற்றிய இலக்கிய நிகழ்வாகும்.

அவர் தமது வானொலியில் நிகழ்த்திய உரைகள் ஏராளம். அவற்றை பகுதி பகுதியாக தொகுத்தால், நான்கைந்து பாகங்களுக்குத் தேறும். அவற்றை காலவரிசைப்பிரகாரம்செப்பனிட்டு வெளியிட வேண்டும் என்ற எண்ணம் அவரிடம் கனவாகவே தொடர்ந்தது. எனினும் அந்தக் கனவை நனவாக்கமுடியாமல் அவர் நினைவாகிப்போய்விட்டார்.

எமதுஇலக்கியக்குடும்பத்தில்இணைந்து வந்த நண்பர் சபேசனின் எதிர்பாராத மறைவு ஏற்படுத்தியிருக்கும் அதிர்வை நாம் கடந்து செல்ல நெடுநாட்களாகலாம்.

# சபேசன் அண்ணா

# துயரமும் துரோகமும் ஒருங்கே பலியெடுத்த அப்பாவி உயிர்!

● தெய்வீகன்



சிங்களவர்களோடு இணைந்து வாழ்வது கடினம் என்று கூறிக்கொண்டு வருடக்கணக்கில் போராடுகின்ற தமிழ் மக்கள், தலைநகர் கொழும்பிற்கு வந்து சிங்களவர் வாழும் பகுதிகளில் பல்லாயிரணக் கணக்கில் வாழ்கிறார்களே. அப்படியென்றால், சிறிலங்கா அரசு மேற்கொண்டு வரும் போர் இனவாதம் நிறைந்தது என்ற விடுதலைப்புலிகளின் பிரசாரம் பொய்தானே"

2009 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் விக்டோரிய நாடாளுமன்றத்திற்கு முன்பாக நடைபெற்றுக்கொண்டிருந்த தமிழர்களின் ஆர்ப்பாட்டமொன்றின்போது செய்தி சேகரிப்பதற்காக வந்திருந்த ஆஸ்திரேலிய ஊடகவியலாளர் ஒருவர், அப்போதைய தமிழர் ஒருங்கிணைப்புக்குழு பொறுப்பாளரான சபேசன் அண்ணையை ஸ்பிறிங் வீதியின் ஓரத்திலுள்ள கோப்பிக்கடையின் முன்பாகவிருந்த மர இருக்கையில் வைத்து மேற்படி கேள்வியை கேட்டிருந்தார்.

இந்தச்சந்திப்புக்கு என்னையும் அழைத்துச்சென்றிருந்த சபேசன் அண்ணன் கேள்விக்கு பதிலளிப்பதற்கு வழக்கம்போல தனது கண்ணாடியை கழற்றி பொக்கெட்டில் வைத்துக்கொண்டு தயாராகிறார்.

"எந்தவொரு நாட்டிலும் அதன் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வருகின்ற மக்கள் தலைநகரில் அதிகமாக குடியிருப்பது வழமையானது. அது பெரும்பாலும் பொருளாதார காரணங்கள் - நலன்கள் - சார்ந்தது. தேவைகளை அடிப்படையாகக் கொண்டது. அதனைவைத்து ஒரு போராட்டத்தின் காரணிகளை எடைபோட்டு விடமுடியாது" - என்றார் சபேசன் அண்ணன்.

"அப்படியானால் விடுதலைப்புலிகள் அமைப்பு வன்முறையாளர்கள் இல்லையா" - என்று அடுத்த கேள்வியைக்கேட்டார் அந்த ஊடகவியலாளர்.

"வன்முறை என்றால் என்ன என்று முதலில் உங்களது வரைவிலக்கணத்தை சொன்னீர்களென்றால், இந்தக்கேள்விக்கு நான் உங்களுக்கு திருப்தியான பதிலை சொல்லமுடியும்" - என்றார் சபேசன் அண்ணன் சிரித்துக்கொண்டே.

"தமிழர் தாயகத்தின் தேவாலயமொன்றில் தஞ்சமடைந்திருந்த நூற்றுக்கணக்கானவர்களை விமானத்திலிருந்து குண்டு போட்டு கொல்வது வன்முறையில்லை என்று இந்த உலகம் ஏற்றுக்கொள்ளும் வரைக்கும் விடுதலைப்புலிகள் வன்முறையாளர்கள் இல்லை. தமிழர் தாயகத்தின் ஒரு பாடசாலையின் மீது குண்டுவீசி பச்சிளம் குழந்தைகள் எண்பதுபேரை கொலைசெய்வதை வன்முறை இல்லை என்று இந்த உலகம் ஏற்றுக்கொள்ளும் வரைக்கும் விடுதலைப்புலிகள் வன்முறையாளர்கள் இல்லை. இதுபோல இன்னும் பல சந்தேகங்கள் எனக்குள்ளன, அவற்றையும்நீங்கள்தெளிவுபடுத்தினால், உங்களுக்கு திருப்தியான பதிலை சிலவேளைகளில் நானும் தரக்கூடும்" - என்றார் சபேசன் அண்ணன்.

அநேகமாக அந்தப்பதிலோடு குறிப்பிட்ட ஊடகவியலாளர் சந்திப்பையும் கோப்பியையும் முடித்துக்கொண்டு எழுந்துவிட்டதாக ஞாபகம்.

இதுதான் சபேசன் அண்ணன்.

தன்னை மற்றவர்கள் விரும்பவேண்டும். தன்மீது கவர்ச்சியடைவேண்டும் என்ற எதிர்பார்ப்புக்களின் ஊடாக எவருடனும் பழகத்தெரியாதவர். எல்லா விடயங்களையும் தர்க்கபூர்வமாக மாத்திரமே அணுகத்தெரிந்தவர். ஆகவேதான், அவருக்கு எவ்வளவுக்கு எவ்வளவு நண்பர்கள் இருந்தார்களோ, அவ்வளவுக்கு அவ்வளவு எதிரிகளும் இருந்துகொண்டேயிருந்தனர்.

தன்னுடன் பழகியவர்கள் எல்லோரிடமும் ஏதோவொரு வகையில் சில நினைவுகளை விட்டுச்செல்பவராக சபேசன் அண்ணின் வாழ்வு அமைந்திருக்கிறது. அதன் அர்த்தம் என்னவென்றால், அவரது உறவும் - பழக்கமும் - எப்போதும் எவருடனும் மேலோட்டமாக அமைந்ததில்லை.

### நானும் சபேசன் அண்ணனும்

அந்த வகையில், எனக்கும் அவருக்குமான உறவு நீண்டது. நெடியது. அவற்றில் நிகழ்ந்தவை அனைத்தையும் இங்கு பதிவுசெய்யவும் முடியாது. இருந்தாலும், அவரது மறைவின் அருகில் பதிவுசெய்ய வேண்டிய சில முக்கியத்துவங்களையும் அவற்றை எல்லோரும் அறிந்திருக்கவேண்டும் என்ற வரலாற்றுப்பிரக்ஞையுடனும் இந்தநினைவுக்குறிப்பினை இங்குபகிர்ந்துகொள்கிறேன்.

எனக்கும் சபேசன் அண்ணைக்குமான பழக்கம் - நெருக்கம் பல்வேறு தளங்களிலிருந்தது. கொழும்பிலிருக்கும்போது "தமிழ்நாதம்" இணையத்தளத்தில் வருகின்ற அவரது கட்டுரைகளின் வாயிலாக அவரை அறிந்துகொண்ட பின்னர், ஆஸ்திரேலியாவுக்கு வந்தபோது ஒரு அமைப்பின் தலைவராக தெரிந்துகொண்டேன். பிறகு, ஒரு வகையில் எனக்கு உறவினர் என்று அவரே என்னை தேடிவந்து தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டார்.

ஆரம்பத்தில் பரஸ்பரம் எங்களது அரசியல் கட்டுரைகள் குறித்த விமர்சனங்களின் ஊடாக அதிகம் பேசத்தொடங்கினோம். என்னைக்காணும் இடங்களிலெல்லாம் தமிழ்நாதத்தில் வெளிவந்துகொண்டிருந்த எனது கட்டுரைகள் தொடர்பாக பேசத்தொடங்கியிருந்தார். அவருக்கும் எனக்குமான இந்த விவாதங்கள் எவ்வளவு நீளமானவை என்றால் -

ஒருதடவை, மெல்பேர்னில் தமிழர் தேசிய விளையாட்டுவிழா கிரிக்கெட் போட்டியில் நான் களத்தடுப்பில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது சபேசன் அண்ணன் எல்லைக்கோட்டிலிருந்த கம்பிவேலியை பிடித்தபடி வெளியில் நின்றுகொண்டு,

"தடையை நீக்கமுடியாது. ஆனால், விடுதலைப்புலிகளுடன்தான் இலங்கை அரசு பேசவேண்டும் என்று அமெரிக்கா பட்டும்படாமல் சொல்லிக்கொண்டிருப்பது எப்படியென்றால், மாப்பிள்ளை சரியில்லைத்தான். ஆனால், அவரைத்தான் உங்கட மகளுக்கு கட்டிக்குடுங்கோ என்பது போலிருக்கிறது" - என்று ஆவேசமாக என்னுடன் பேசிக்கொண்டிருந்தார்.

மணிக்கணக்கில் இவ்வாறான - சளைக்காத - அரசியல் விவாதங்களை மேற்கொள்வதற்கு சபேசன் அண்ணன் விரும்பினார். அந்தக்காலத்தில் அவர் தொடர்ச்சியாக எழுதிவந்த கட்டுரைகள் மெல்பேர்ன் "தமிழ்குரல்" சமூக வானொலியில் வாசிக்கப்பட்டபின்னர், "தமிழ்நாதம்" இணையத்திலும் வெளிவந்துகொண்டிருந்தது.

விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன் அவர்களின் மாவீரர் தின அறிக்கை வெளியானவுடன் எனக்கு அழைப்பெடுப்பார். தலைவரின் சிந்தனையை அடியொற்றி, ஏற்கனவே தான் அந்த விடயங்களை தனது முதல்வார கட்டுரையில் குறிப்பிட்டிருப்பதாகக் கூறுவார். ஆனாலும் தலைவர் கூறிய இரண்டொரு விடயங்களில் தனக்கு உடன்பாடில்லை என்பார். வன்னிக்குப் போனபோது அதற்கு முன்னர் வெளிவந்த மாவீரர்தின உரையிலுள்ள விடயங்களை தான் தலைவருக்கு சுட்டிக்காட்டியதாகவும் அதுபோல இந்த உரை குறித்தும் தான் அவரிடம் பேசவுள்ளதாகவும் கூறுவார்.

ஆரம்பத்தில், சபேசன் அண்ணையின் இந்தக் குணாதிசயங்கள் எனக்கு சிறுபிள்ளைத்தனமானவையாக தெரிந்தன. நானே எனது நண்பர்களுடன் சபேசன் அண்ணையின் இந்த சுபாவம் குறித்து பேசி சிரித்திருக்கிறேன்.

ஆனால், காலம் செல்லச்செல்ல அவர் தொடர்பான முழுமையான சித்திரம் எனக்குள் பதியத்தொடங்கியது.

அதாவது, அவர் விடுதலைப்புலிகள் அமைப்பையும் அதன் தலைமையையும் அளவுக்கு அதிகமாகவே விரும்பினார். காதலித்தார். வெறித்தனமாக நேசித்தார். அதற்குள்ளேயே கரைந்திருந்தார். அவர் உடலால் புலம்பெயர் மண்ணில் வாழ்ந்துகொண்டிருந்தாலும் அவரது எண்ணங்கள் எதிர்ப்பார்ப்புக்கள் அனைத்தும் வன்னியில்தான் சஞ்சரித்தவண்ணமிருந்தன. ஆகவேதான், விடுதலைப்புலிகள் அமைப்புப் பற்றியும் தலைவரின் சிந்தனைகள் பற்றியும் எப்போதும் ஜெபித்துக்கொண்டிருந்தார். தலைவரின் தலைப்பிள்ளை போல அவர்மீது உரிமைகொண்டாடினார். அந்த உணர்வில் திளைத்தார். அதன் நீட்சியாக புலிகள் அமைப்பினதும் தலைவரினது முடிவுகள் மற்றும் உரைகளோடும் உரிமையோடு முரண்பட்டார். எல்லோருக்குமுரிய பலவீனங்களினாலான தளங்களில் நின்றுகொண்டு குழப்படிகளும் செய்தார். ஒரு குழந்தையைப் போல அந்தவிடுதலைப்போராட்டத்தினை அணைத்தபடியிருந்தார். அந்தப்போராட்ட ஆன்மாவின் ஒருதுண்டாக தன்னை உணர்ந்தபடியிருந்தார். அதற்காக ஒளிமங்காத தீபமாக தனக்குள் எரிந்துகொண்டிருந்தார்.

இந்த மாதிரியானதொரு அவரது மனநிலையை ஏற்றுக்கொள்வதும் - அரவணைத்து செயற்படுவதும் - எல்லோருக்கும் இலகுவானதாக இருக்கவில்லை. முக்கியமாக, அவருக்கும் சக புலம்பெயர் அமைப்புக்களுக்கும் உவப்பான உறவை உருவாக்கவில்லை. வேறு அமைப்புக்களில் பணிபுரிந்தவர்களுக்கும் அவருக்கும் முரண்டுபாடுகளை தோற்றுவித்தது. அவரோடு பணிபுரிந்தவர்கள் எல்லோருக்கும் இது தெரிந்ததுதான்.

ஆனால், அந்த முரண்பாடுகள் எவ்வாறு கையாளப்பட்டது என்பதுதான் இங்கு நோக்கப்படவேண்டியதும் - கொடூரமானதும் - பரிதாபகரமானதும் ஆகும்.

### துரோகத்தின் அரங்கேற்றம்

2009 ஆம் ஆண்டு போர் முடிந்த பின்னர், ஆஸ்திரேலியாவில் தமிழர் ஒருங்கிணைப்புக்குழுவினை பொறுப்பேற்கப் போவதாக முளைத்த கும்பலொன்று, சபேசன் அண்ணையையாறுப்பாளர் பதவியிலிருந்து விலகச்சொன்னது. அவர் பதவியிலிருந்தால், பலர் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவோடு இணைந்து வேலைசெய்ய தயங்குகிறார்கள் என்றொரு காரணம் முன்வைக்கப்பட்டது. சபேசன் அண்ணனின் பொது இயல்போடு வைத்துப்பார்க்கும்போது, இவர்கள் கூறுகின்ற இந்தக்காரணம் சரிதான் என்று பலரும் இதற்கு தலையாட்டினார்கள்.

அதனைத் தொடர்ந்து, பல்வேறு வட்டங்களில் சென்று, சபேசன் அண்ணனுக்கு எதிராக குற்றப்பத்திரிகையை வாசித்து பிரச்சாரம் செய்த இந்தக்கும்பல், ஒருங்கிணைப்புக்குழுவுக்கு புதிய "கொமிட்டி" ஒன்றை நியமித்தது. அந்தக்கொமிட்டிக்குள் தாங்கள் நேரடியாக சம்பந்தப்படாமல் "அப்பாவிகள்" சிலரை முன்னிறுத்தியது. மிகச்சாதுரியமாக போடப்பட்ட இந்தத்திட்டத்திற்குள் அப்போதைய களநிலைவரத்தை கருத்திற்கொண்டு - போர் முடிந்த வெறுமையான புலம்பெயர் அரசியல் சூழலில் நின்று எதையாவது செய்ய வேண்டும் என்ற வேணவாவோடிருந்தவர்கள் - விஷயம் புரியாமல் கைகோர்த்துக்கொண்டார்கள். விளைவாக, சபேசன் அண்ணைக்கு பதிலாக ஒருங்கிணைப்புக் குழுவின் புதிய "கொமிட்டி" செயற்படும் என்று அறிவிக்கப்பட்டது. இயக்கபாஷையில் சொல்வதானால், சபேசன் அண்ணன் சிம்பிளாக "வெளியில் தூக்கிப்போடப் பட்டார்"

இந்தச்செயற்பாடானது சபேசன் அண்ணையை பொறுத்தவரை உயிரை உருவி வெளியில் எறிந்ததுபோலானது.

அந்தக் காலப்பகுதியில்தான் சபேசன் அண்ணையின் தனிவாழ்வும் அதிர்ச்சிகரமான வகையில் பெரும் சரிவைக்கண்டிருந்தது.

பெரும் அழிவோடு போர் நிறைவடைந்து, தான் உயிருக்கு உயிராக நேசித்த விடுதலைப்புலிகள் அமைப்பு அடியோடு தகர்ந்துபோக -

தனிப்பட்ட வாழ்க்கை சிதறி தனியாளாக அவர் வெளியேற்றப்பட்டிருக்க -

சமூகத்தின் முன்பாக ஒரு அமைப்பின் தலைவராக இருந்த பதவியிலிருந்தும் வெளியேற்றப்பட்டதானது,

சபேசன் அண்ணையைப் பொறுத்தவரை உயிரோடு எரித்துவிட்டது போலிருந்தது.

தான் எல்லாவற்றிலும் தோற்றுவிட்டதைப் போலவும் - தனது கொள்கையும் இருப்பும்கூட அழிந்துவிட்டதைப் போலவும் - துவண்டுபோனார். சமூகத்தில் எவரையுமே முகங்கொடுக்க முடியாத குற்ற உணர்ச்சிக்குள் தள்ளப்பட்டார்.

அவருடன் மிக நெருக்கமாக உறவைப் பேணியவர்களுடன் மாத்திரம் இதனை மனம்விட்டுப்பேசி அழுதார். தனது இயலாமையை அவரால் பகிரங்கமாக வெளிப்படுத்த முடியவில்லை. எல்லாவற்றிலும் தோற்றுப்போனவராக அவரை அவரால் ஏற்றுக்கொள்ள இயலவில்லை. தான் துவண்டுகொண்டுபோனபோதெல்லாம் ஆன்மசக்தியாக உணர்ந்துவந்த விடுதலைப் புலிகள் அமைப்பும் இல்லாத வெறுமையில், அவரால் எந்தத்திசையிலும் இயங்க முடியவில்லை.

அந்த அழுத்தமும் பிணியும் அவரை மனதளவில் கொடூரமாக சிதைத்தது. இதற்கிடையில், அவருக்கு புற்றுநோயும் வந்து உடலளவில் மிகப்பெரிய உபாதையை ஏற்படுத்தியது. அவரை எப்படியாவது காவுகொண்டுவிடவேண்டும் என்று சாவு அவருக்கு பின்னாலேயே சவுக்கோடு அலைந்து திரிந்தது.


(16ஆம் பக்கம் பார்க்க)



விடுதலைப்புலிகள் அமைப்பையும் அதன் தலைமையையும் அளவுக்கு அதிகமாகவே விரும்பினார். காதலித்தார். வெறித்தனமாக நேசித்தார். அதற்குள்ளேயே கரைந்திருந்தார். அவர் உடலால் புலம்பெயர் மண்ணில் வாழ்ந்துகொண்டிருந்தாலும் அவரது எண்ணங்கள் எதிர்ப்பார்ப்புக்கள் அனைத்தும் வன்னியில்தான் சஞ்சரித்தவண்ணமிருந்தன.

எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI





# சபேசன் அண்ணா

(15ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆனாலும், அதிலிருந்து போராடி மீண்டுகொண்டார். ஆனால், எல்லா தளங்களிலும் அவரால் முன்புபோல இயங்கமுடியவில்லை.

இந்த இடத்தில்தான் அவர் குறித்த வேறொரு தளத்திலான பார்வை முன்வைக்கப்படவேண்டியிருக்கிறது.

அதாவது, தமிழர் ஒருங்கிணைப்புக் குழு எனப்படுவது ஒரு பொதுஅமைப்பு. வியாபித்து எழுந்த 'நிழல் அரசாங்கம்' ஒன்றின் கிளை அமைப்பு. ஒருகாலத்தில், தூதரக அந்தஸ்துடன் இயங்கியது என்று கூட கூறலாம். அதனை ஒரு தனிநபரின் தேவைக்காகவும் எதிர்பார்ப்புக்காகவும் இயங்கும் அமைப்பாக சுருக்கிவிடமுடியாது. இதற்கு சபேசன் அண்ணை ஒன்றும் விதிவிலக்கானவர் அல்ல. அவரது தனிப்பட்ட வாழ்க்கை நெருக்கடியிலிருந்து அவரை மீட்கவேண்டும் என்பதற்காக, பொது அமைப்பொன்றில் அவருக்கு பதவியை கொடுக்கவேண்டும் என்று எந்த அவசியமும் இல்லைத்தான். அவ்வாறு அவர் கோருவதும் முறையில்லைத்தான்.

ஆனால், இந்ததமிழர்ஒருங்கிணைப்புக் குழு சபேசன் அண்ணை விலகி ஓரிரு வருடங்களுக்கு பிறகு, செயற்படத்தொடங்கிய சீத்துவத்தைப்பார்க்கும்போது, சபேசன் அண்ணையேஅதனைதொடர்ந்துபொறுப்பேற்று நடத்தியிருக்கலாம் என்பதுதான் எனது ஆதங்கம். அவரது தலைமை ஓரளவுக்காவதுஅந்தஅமைப்பினைஇன்றுவரை உயிர்ப்போடு வைத்திருந்திருக்கும். அதேபோல, அந்த அமைப்புக்கு நேர்மையாகவும் - விசுவாசகமாகவும் - கொள்கைப் பிடிப்புடனும் - வாழ்ந்த அவரையும் சில வேளைகளில் உயிருடன் வைத்திருந்திருக்கும்.

சபேசன்அண்ணையைநீக்கினால்தான் ஏனைய அமைப்புக்கள் வந்து இணைந்து செயற்படும் என்று காரணம் காண்பித்து அவரை தூக்கிக்கடாசிய தமிழர் ஒருங்கிணைப்புக்குழு, இன்றுபோர்முடிந்து பதினொரு வருடங்களில் எத்தனை அமைப்புக்களுடன் இணைந்து பணிபுரிந்திருக்கின்றன. அல்லது, எத்தனை அமைப்புக்களை தங்களுடன் பணிசெய்ய அனுமதித்திருக்கின்றன.

போர் முடிந்து பதினொரு வருடங்களுக்கு பின்னரும் தாயகத்தில் கோழிக்குஞ்சு வளர்ப்பதற்கு உதவிசெய்கின்ற அளவில்தான் தவழ்ந்துகொண்டிக்கிறதே தவிர -

அதைவிட, இவர்கள் செய்த "பெரும் புண்ணியம்" என்ன என்று கேட்டால், அநாமதேய இணையத்தளங்களையும் முகநூல் கணக்குகளையும் தொடங்கிவைத்து, மற்றவர்களின் தனிப்பட்ட வாழ்க்கையை கிழித்ததும், தங்களது காழ்ப்புக்களை அதில் வாந்தியெடுத்து ஊற்றி, தாங்களே அதனை திரும்பவும் தொட்டு நக்கி சுவை கண்டதும்தான்.

இது பற்றியெல்லாம் தங்களின் மீது பழிவந்துவிடக்கூடாது என்று "தூரநோக்க சிந்தனையோடு" தங்களது மணவறைகளில் மிகச்சாதுரியமாக சபேசன் அண்ணையை அழைத்து வைத்துக்கொண்டாடிக்காண்பித்தார்கள்.

தமிழர் ஒருங்கிணைப்புக்குழுவிலிருந்து நீக்கப்பட்டதால் சபேசன் அண்ணை அடைந்த மனத்துயரும் அழுத்தமும் கொஞ்சநஞ்சமல்ல. தாயகத்தில் முன்னாள் போராளிகளின் வாழ்வு போருக்குப்பிறகு சமூகத்தினால் எவ்வாறு தூக்கியெறிப்பட்டு, அவர்களது முன்னைய இருப்பும் போராட்ட வழிமுறைகளும் கேவலமாக பார்க்கப்பட்டதோ, அதேபோலத்தான் சபேசன் அண்ணையின் வாழ்வும் இங்கு எடுத்தெறியப்பட்டது. இதில் கொடுந்துயர் என்னவென்றால், "நாங்களே புலிகளின் நீட்சி, இனி மேல் எங்கடதான் ஆட்சி" - என்று மார்தட்டிக்கொண்டுவந்தவர்களே சபேசன் அண்ணையை காலுக்குள் போட்டு மிதித்தது தான்.

ஆனால், தலைவரின் கைகளினால் தனக்கு வழங்கப்பட்ட ஒருங்கிணைப்புக் குழு பொறுப்பிலிருந்து தன்னை நீக்கியதற்கான காரணத்தை தனக்கு சொல்லவேண்டும் என்றும் அதற்கான பதிலை தான் சொல்வதற்கு பொதுவெளியில் அனுமதிதர வேண்டும் என்றும் சபேசன் அண்ணன் ஆவேசமடைந்து அலைந்துகொண்டிருந்தார். "மறுத்தால், ஒருங்கிணைப்புக்குழுவின் அடுத்த கூட்டத்திற்கு வந்து வாசலிலேயே தீக்குளிப்பேன்" - என்று அழுதார். இதன் தொடர்ச்சியாக அவர் அடைந்த மன உளைச்சலை இங்கு சொற்களில் எழுதிவிடமுடியாது.

அந்தக்காலப்பகுதியில் என்னை எங்காவது கண்டால் -

"எங்க அண்ணன், கனகாலமாக காணவில்லை" - என்று கேட்டால்,

"இல்லை தம்பி, முதுகெல்லாம் காயம். அதுதான் எழும்பி திரிய இயலாம கிடக்குது"-என்றுதனக்குஇழைக்கப்பட்டதுரோகத்தை வெளியில் சிரித்துக்கொண்டே சொல்வார்.

தான் தலைவரிடம் பரிசு வாங்கும் படத்தையும் பொறுப்பாளராக பதவியேற்றுக்கொண்ட விடயங்களையும்தொடர்ந்து முகநூலில் பதிவுசெய்தபடியிருந்தார். தனக்கு இழைக்கப்பட்ட துரோகங்களை பலரிடமும் சொல்லி அழுதார். போக்கிடமில்லாத அப்பாவி ஈழ விசுவாசியாக அலைக்கழித்தபடியிருந்தார்.

## நச்சு நாடகம்

அப்படிப்பட்ட அவரது பெருவலிக்கு காரணமாக அமைந்தவர்கள், அவர் இறந்த பிறகு ஆடிய நாடகங்களை பார்த்து, பேழைக்குள்ளிருந்த சபேசன் அண்ணனே ஒரு கணம் கடைவாயினால் சிரித்திருப்பார். பிணத்துக்கு ரத்த தானம் செய்யத் துடித்த ஒருங்கிணைப்புக்குழு தளபதிகளின் வேகத்தை பார்க்கும்போது எந்த வாய்கொண்டு சிரிப்பது என்று முகத்தை சுரண்டிக்கொண்டிருந்தேன். தேசியக் கொடியை சபேசன் அண்ணைக்கு போர்த்துவதன் மூலம், சாவீட்டில் தங்களுக்கொரு அங்கீகாரம் வேண்டி அவர்கள போட்ட குஸ்திகளை பார்க்கும்போது, சபேசன் அண்ணையின் சிரித்த முகம்கொண்ட படத்தை பார்த்துக்கொண்டு நினைவு-களை திருப்பிக்கொண்டேன். அதிலேயும் "தமிழ்த்தேசியப்பற்றாளர்" என்றொரு புதிய நாமத்தைசபேசன்அண்ணைக்குகொடுத்து, தங்களை தேசியத்தின் "லைஸன்ஸ் பிளேட்" மன்னர்களாக முடிசூடிக்கொண்ட அற்பத்தனத்தை பார்த்து சபேசன் அண்ணனுடன் சேர்ந்து நானும் கொஞ்சம் சிரித்துக் கொண்டேன்.

எவ்வளவு பெரிய துரோகத்தை அந்த மனிதனுக்கு இழைத்துவிட்டு, இவ்வளவு காலமும் வெறும் வாயை சப்பிக்கொண்டிருந்த இவர்கள், இப்போதாவது அவரது உடலத்தின் காலடியில் மண்டியிட்டு மன்னிப்பு கேட்கவேண்டமா? உண்மையிலேயே அந்த மனிதனுக்கு மதிப்பளிப்பதென்றால், மாவீரரின் உறவொன்றை அந்தக் கொடி போர்க்க அழைத்திருக்கவேண்டாமா?

சபேசன் அண்ணைக்கு இவர்கள் விடுத்த அறிக்கையையும் மதிப்பளிப்பையும் பார்த்தபோது அவரை இரண்டாவது தடவை சாகடித்தது போலிருந்தது.

கொள்கையில் தீவிரமாக இருந்தவர்கள் எல்லோரையும் இந்த உலகம் கோமாளிகளாகத்தான் பாத்திருக்கிறது. அதுதான வரலாறு. அதேபோல, அவர்களது மறைவுக்கான காரணமும் ஏதோவொரு புள்ளியில் துரோகமாகத்தானிருந்திருக்கிறது. அதுவும் வரலாறு.

இதை இங்கு கூறுவதன் காரணம், பொது வாழ்வுக்கு முழுமையாக தன்னை ஒப்படைக்கும் ஒருவனின் செயல்கள் எவ்வளவு தூரம் சமூகத்துக்கு பொறுப்புக் கூற வேண்டியவையாக இருக்குமோ, அதுபோல அவ்வாறு பொதுவாழ்விற்கு தன்னை ஈந்துகொண்டவனுக்கு இழைக்கப்படும் துரோகத்துக்கும் இந்த சமூகம் பொறுப்பேற்க வேண்டும். அதுதான் அறம்.

சபேசன் அண்ணையின் கடந்த பத்து வருட காலம் பல்வேறு மேடு பள்ளங்களின் ஊடாக - உடைந்த நதியாக - கொந்தளித்தபடியிருந்திருக்கிறது. அவரது மிகப் பழைய நண்பர்கள்தான் அவரை அதி-கம் அரவணைத்துக்கொண்டார்கள். ஒரு குழந்தையைப்போல அவரை தத்தெடுத்து இயன்றளவு காப்பாற்றிவந்தார்கள்.

ஒவ்வொரு "எதிரொலி" பதிப்பு வெளி வந்தபிறகும் என்னை அழைத்து பல்வேறு விடயங்கள் குறித்தும் பேசியிருக்கிறார். பத்திரிகையில் வருகின்ற தலைப்புக்கள் மற்றும் ஆங்கிலத்தை தமிழ்ப்படுத்தும் போது பயன்படுத்திய சொற்கள் குறித்து ஆரவாரமாக சிரித்து பாராட்டியிருக்கிறார்.

தமிழினியின் "ஒரு கூர்வாளின் நிழலில்" நூல் வெளிவந்தபோது என்னை தனது புதிய வீட்டுக்கு அழைத்தார். நேரடியாக சென்றபோது பல விடயங்களை பகிர்ந்துகொண்டார். ஒரு குழந்தையைப் போல தனது நூல்களை காண்பித்து மகிழ்ந்தார். ஒருங்கிணைப்புக்குழுவினர் தனக்கு ஏற்படுத்திவருகின்ற தொடர்தொல்லைகள் குறித்தும் பேசினார்.

"சான்றோன்" சத்தியநாதன் நினைவாக "ஏதிரொலி" சிறப்பிதழ்ஒன்றைகொண்டு வந்திருந்தபோது, சபேசன் அண்ணாவின் கருத்தையும் கேட்டு அதில் வெளியிட்டிருந்தோம். சிறப்பிதழ் வெளிவந்தவுடன் "எதிரொலியிடம் ஏன் பேசினீர்கள்" என்று ஒருங்கிணைப்புக்குழு முளையான் ஒன்று தன்னை அழைத்துக்கடிந்துகொண்டதாக என்னிடம் கூறி சிரித்தார்.

சில மாதங்களுக்கு முன்னர், எஸ்பொவின் "சடங்கு" நாவல் எனக்கு தேவைப்பட்டு மெல்பேர்னில் பலரிடமும் விசாரித்தபோது, சபேசன் அண்ணாவிடமிருக்கிறது என்று அறிந்து, நேரடியாக அவரிடம் போனேன். வரும்போது எனது "பெய்யெனபெய்யும்வெயில்" புத்தகத்தையும் கொண்டுவருமாறு கூறினார். போனவுடன் வீட்டினுள் அழைத்துச்சென்று சடங்கையும் தந்து, எனது புத்தகத்துக்கான பணத்தையும் தந்துவிட்டு என்னைப்பார்த்தபடி நின்றார்.

"என்ன அண்ணை" - என்றேன்.

எனது புத்தகத்தில் எனது கையெழுத்தைப்போட்டு தரும்படி கேட்டார்.

மிகுந்த வெட்கத்தோடு கையெழுத்திட்டுக்கொடுத்தேன்.

"இருமன், கதைச்சிட்டுப்போகலாம்" - என்றார். நேரம் அனுமதிக்கவில்லை வந்துவிட்டேன்.

அடுத்த வாரமே "சடங்கு" நூலை கொடுப்பதற்கு திரும்பப்போனேன்.

"புத்தகம் வாங்கினால் திருப்பிக்குடுக்கிற கெட்ட பழக்கமெல்லம் எங்க பழகி-னனீர்" - என்றார் சிரித்தபடி.

அதுதான் அவரை நான் கடைசியாக சந்தித்தது.

அந்தச்சிரிப்பு இன்னமும் நெஞ்சில் நிழலாடுகிறது.

அதன்பிறகு, நான் கடந்த ஜனவரியில் சென்னை புத்தகக் கண்காட்சிக்கு போய் வந்தபிறகு அழைத்தார். தனது புத்தகத்தையும் கொண்டுவரவேண்டும் என்று பதிப்பு வேலைகள் பற்றி கேட்டறிந்தார். அது பற்றி மேலதிகமாக பேசுவதற்கு வீட்டுக்கு வருமாறு அழைத்தார். எனது இரவுவேலை காரணமாக, அவரிடம் போவதற்கு காலத்தை பிற்போட்டபடியே இருந்தேன். ஆனால், சபேசன் அண்ணா இவ்வளவு வேகமாக காலத்தை முந்திக்கொண்டு போய்விடுவார் என்று சற்றும் எதிர்பார்க்கவில்லை.

இப்போது அந்தக்குற்ற உணர்ச்சியும் சேர்ந்து என்னை கொஞ்சம் கொஞ்சமாக தின்றுகொண்டிருக்கிறது.

போன வாரம் அவரை வைத்திய சாலைக்கு கொண்டுசென்றபின்னர்கூட, கட்டிலிலிருந்து எழுந்து "யோகி யோகி" என்று புலம்பிக்கொண்டிருந்தார் என்று நேரில் சென்று பார்த்துவந்த சட்டத்தரணி ரவீந்திரனின் மகன் ஆரூரன் சொன்னான். அதைக்கேட்டபோது எனக்கு நெஞ்சுக்குள் ஒரு மூங்கில் காடே பற்றி எரிந்தது போலிருந்தது. அந்த ஆன்மாவின் கடைசிக்கணங்கள் எத்துணை ஏக்கம் நிறைந்தவை என்பதை என்னால் புரிந்து கொள்ளமுடிந்தது.

சபேசன் அண்ணன் ஒரு சமராடிதான். ஆனால், கெட்டவர்இல்லை. முரண்பாடுகளின் மொத்த உருவம்தான். ஆனால், துரோகி இல்லை.

சிலரது இழப்புக்கள் அவர்கள் தொடர்பான எல்லா நினைவுகளையும் ஒரு அல்பம் போல நினைவுகளில் புரட்டியபடியே இருக்கும். ஈவிரக்கமில்லாமல் எங்கள் நினைவுகளை தொடர்ந்து கொன்றபடியிருக்கும். அப்படியொரு இழப்பு சபேசன் அண்ணாவுடையது.

தேசத்துக்கும் மொழிக்கும் நேர்மையாக உழைத்தவர்கள் மெல்பேர்னில் தொடர்ந்து சாவை அணைத்துக்கொண்டு போவது மனதில் நீண்ட வெறுமையை விதைத்தபடியிருக்கிறது. சிசு நாகேந்திரம் ஐயா, சிங்கம் அண்ணன், நாகரட்ணம் மாஸ்ரர் வரிசையில் தற்போது சபேசன் அண்ணாவின் இழப்பு அடுத்தடுத்து ஏற்பட்டிருப்பது, காலம் ஏன் இவ்வளவு கொடூரமாக இந்த சிறிய சமூகத்தை தண்டித்துக்கொண்டிருக்கிறது என்ற எரிச்சலை ஏற்படுத்துகிறது.

கடைசிச்சந்திப்பின்போது "சடங்கு" புத்தகத்தை அவரது கையில் கொடுத்துவிட்டு காரில் வந்து ஏறும்போது, வீட்டு வாசலில் நின்று என்னையே பார்த்துக்கொண்டு நின்றவர் -

"என்ன கொஞ்சம் வண்டி வைக்குது போல இருக்கு" - என்றார்.

"அண்ணை, உடம்பை பார்க்காமல், மனசை பாருங்கோ" என்றேன் சிரித்தபடி.

சற்றும் யோசிக்ககாமல், சுளீரென்று சொன்னார்.

"எது பெருசா இருக்கோ அதைத்தானே பார்க்கலாம்"

கண்களை சொருகிக்கொண்டு பிறகொரு வெடிச்சிருப்பு.

அதுதான் சபேசன் அண்ணா.

மறக்கமுடியவில்லை.

போய் வாருங்கள் சபேசன் அண்ணா.

முள்ளிவாய்க்கால் துயரமும் துரோ-கமும் பதினொரு வருடங்களுக்கு பிறகு பலியெடுத்த உயிர் நீங்கள்.

போகும்போது காலனோடும்சண்டையிட்டுக்கொண்டுதான் போயிருப்பீர்கள். எனக்குத்தெரியும். வந்து மீதியை அறிந்து கொள்கிறேன்.

இப்போதைக்கு என் நெஞ்சம் நிறைந்த அஞ்சலிகள்!

■



சட்டத்தரணி ரவீந்திரன்

# தொலைதூரம் சென்றாலும் தொலைவதில்லை சில உறவுகள்

சண்முகம் சபேசன் 1954ஆம் ஆண்டு ஜூலை ஆறாம் திகதி பிறந்து, 2020 ஆம் ஆண்டு மே மாதம் 25 ஆம் திகதி மறைந்தார்.

யாழ்ப்பாணம் நீராவியடியில் பிறந்து, யாழ் இந்துக் கல்லூரியில் படித்து, கொழும்பில் தனியார் துறையில்பணியாற்றி, பின்இலங்கையின் நிலைவரங்களினால் ஆஸ்திரேலியாவில் தஞ்சமடைந்திருந்தார்.

அவரது பெற்றோர்முக்கியமாகதாயார் தமிழ் கலாச்சாரங்களுகளிலும் இந்து ஆசாரங்களையும் தவறாது கடைப்பிடிப்பவர். தந்தையாரும் அதனை அனுசரித்து ஆதரவாக இருந்தாலும், ஆங்கிலமே தாய் மொழி மாதிரி சரளமாக அதிலேயே உரையாடுவார். இவைகளால், இளவயதிலேயே பெற்றோர் சபேசனுக்கு சமய ஆசாரப்படி தீட்சை செய்துவைத்தனர். யாழ்ப்பாணத்தில் நல்லூருக்கு கிரமமாக அழைத்துச்சென்றனர்.

ஆனால், பாடசாலை காலத்தில் அவர் அவாவுடன்பலவற்றையும்படித்து, தந்தை பெரியாரின்திராவிடக்கருத்துக்களால்கவரப்பட்டு மதத்திலோ கடவுள்களிடமோ ஈடுபாடு காட்டவில்லை.

இலங்கை வாழ்வில் குறிப்பிட்டு சொல்வதானால் அவரது இளமைக்காலங்களில் ஒன்றாகப்படித்த - விளையாடித்திரிந்த - அவரது சில நண்பர்கள் இயக்கங்களால் கவரப்பட்டு அவற்றோடு சேர்ந்து இயங்கியபோது, முக்கியமாக சபேசனின் பள்ளித்தோழர்கள் நரேனும் அவரது சகோதரர் குகனும் புலிகள் இயக்கத்துடன் இணைந்தார்கள். குகன் குண்டுத்தாக்குதல் ஒன்றுக்குஆயத்தங்களைசெய்துகொண்டிருந்தபோது, அது தற்செயலாக வெடித்ததால் மரணமுற்றார். நரேன் (யோகி) இயக்கத்துடன் முழுமையாக ஈடுபட்டு, பின்னர் இறந்ததாக அறியப்பட்டார். கடைசிவரைக்கும் இயக்கத்துடன் நரேனுக்கிருந்த ஏற்றத்தாழ்வுகளுக்கு இடையிலும் அவரோடு தனது தொடர்புகளை சபேசன் பேணினார்.

அவரது பெற்றோரது மென்மையான பண்புகளையும்எல்லோரிடம்அன்புகாட்டுவதையும் சுடுசொல் காட்டாமல் கபடமின்றி பழகுவதையும் இங்கு அவருடன் பழகியவர்கள் அறிவர். அவர்களைப் போலவே, சபேசனும்மென்மையானபண்புகளையும் எல்லோரிடமும் அன்புடனும் கபடமின்றி பழகுபவர். அது அவரின் ஒரு முத்திரை. கருத்துவேறுபாடு கொண்டவர்களுடனும் தனது சிநேகபாவத்தை வளர்த்துக்கொண்டவர்.

சபேசன் எனக்கு - என் மனைவி வழியால் - நெருங்கிய உறவினரென்றாலும் அவரை நான் சந்தித்து பழகியது மெல்பேர்னில்தான். முதன்முறையாக, எனது வீட்டிற்கு அவரது நண்பருடன் வந்த போது "நான் அண்ணையிடம் சொந்தக்காரனாக வரவில்லை" - என்று சொன்ன வார்த்தைகளின் அர்த்தம் பின்னால்தான் எனக்குப்புரிந்தது. அது அவரது வாழ்க்கையில் ஒரு கீறாக கடைசிவரை தொடர்ந்தது வருத்தமே. அதுபற்றி தேவை வரின் இன்னொருநாளில் விரிவாகப்பகிரலாம்.

சபேசன் சமூகப்பற்றாளராகவும் நாட்டுப்பற்றாளராகவும் பல தளங்களில் பணியாற்றியவர். அவை எல்லாவற்றையும் இங்கு சொல்லவேண்டுமானால், அவருடன் பயணித்த பலரைபபற்றி பெரும்பாரதமாக அந்த கதாபாத்திரங்களின் தாக்கங்களை எழுதவேண்டும்.

அதனால், அவரது ஊடக ஈடுபாட்டினை மாத்திரம் இங்கு நினைவுகூர்ந்து எனது மனப்பதிவுகளை பகிர்ந்துகொள்ளலாம் என்று விரும்புகிறேன்.

சுமார்28வருடங்கள்தொடர்ச்சியாக"3 ஸி.ஆர்"வானொலியை பொறுப்பெடுத்து அதனை நடத்துவதென்பது சுலபமான காரியமல்ல. அதன் நிகழ்ச்சி தயாரிப்பு, ஆயுவுக்கட்டுரைகள், நேரடி சந்திப்புஎன்று அவற்றிற்கு எவ்வளவோ நேரம் செலவிட வேண்டும். அது எவ்வளவு ஆழமானது என்று கணக்கிடமுடியாது. சபேசன் "3 ஸி.ஆர்" வானொலியை பொறுப்பெடுப்பதற்குமுன்னர், அந்த சேவையில்84 - 85 - 86 ஆண்டு காலகட்டங்களில் நானும் சூரிநல்லையாவும்அரசியல்ஆய்வுநிகழ்ச்சியில் பங்கேற்றோம். ஒரு வாரத்தில் ஒரு நாள், அதைச்செய்வதற்கே அதற்கு எந்தளவில் எமது நேரத்தை கொடுக்கவேண்டும் என்று நான் அறிவேன். அப்படியாயின், 28 வருடங்களாக தனது எல்லா வேலைகளையும் விட்டுவிட்டு - வருடா வருடம் 24 மணிநேரமும் "ரேடியோ தொன்" நிகழ்ச்சி மூலம் மருத்துவப்பணிக்காக காசு சேர்க்கும் பணியையும் முன்னெடுத்தார் என்றால் சபேசனின் அர்ப்பணிப்பை என்னால் ஆழமாக புரிந்துகொள்ளமுடிகிறது.

பின்னாளில், ஏதோ அதிகாரங்கள் எங்களிடமே உண்டு என்று - போராட்டம் மௌனிக்கப்பட்டபிறகு - அவரது பரப்புரைகள் போதாது என்று, அவரை அந்தப் பதவியிலிருந்து நீக்கியவர்கள், அவரது அர்ப்பணிப்பின் ஆழங்களை அல்லது வாழக்கையில் தன்னையும் தன் குடும்பத்தையும் புறந்தள்ளி செலவழித்த நேரத்துக்கும் செலவழித்தபணத்துக்கும்ஓரளவுக்காவது நன்றியாக இருந்தார்களா என்பது சந்தேகமே. இப்படியான உன்மத்தங்கள் எங்களிடையே இருக்கும்வரை எமக்கு விடிவும் இல்லை.

அவரின் ஊடகப்பணியிலும் அரசியல் பணியிலும் உறவினர் என்ற வகையிலும் இன்றும் விடுதலையில் அக்கறை கொண்டவர் என்ற முறையிலும் எவ்வளவோ தடவைகள் பேசியிருக்கிறேன்.

சுருங்கச்சொன்னால், புலிகள் பொறுப்பெடுத்து நடத்தும் "3 ஸிஆர்" வானொலி இனத்தின் குரலை பிரதிநிதித்துவப்படுத்துவதாக இருக்கவேண்டுமே அல்லாது, ஒரு விடுதலை இயக்கத்தின் ஊதுகுழலாகவோ அல்லது பிரச்சார இயந்திரமாகவோ மாறக் கூடாது என்று கண்டிப்புடன் சபேசனுக்கு அறிவுறுத்தியிருக்கிறேன்.

எனது வேண்டுகோளை அடுத்து, சமுதாய ஈடுபாட்டு கட்டுரைகள், செவ்விகள், போன்றவற்றை தனது நிகழ்ச்சிகளில் சபேசன் சேர்த்துக்கொண்டார். நான் சேர்ந்து பணியாற்றிய இலங்கை கல்வி நிதியத்தின் செயற்பாடுகள் குறித்து முருக பூபதியை சபேசனது நிகழ்ச்சியில் பேச வைத்தார்.

சபேசன் கொண்டிருந்த அரசியல் கருத்துக்களுக்கு மாற்று அபிப்பிராயங்களை கொண்டிருந்த, சபேசனின்நண்பரானநடேசன் போன்றவர்களையும் என்னையும் மக்களுடன்பேசுவதற்குஅவரதுவானொலியில் இடமளித்தால் என்ன என்று அடிக்கடி கேட்டு அவரை சீண்டுவேன்.

ஒருதடவை, "இயக்கப்பிரச்சாரமாக மேற்கொள்ளப்படும் ஊடக சேவை விடுதலையில் பற்றுள்ள எத்தனைபேரை அந்நியப்படுத்துகிறது தெரியுமா? இது விடுலையை பின்னோக்கியே தள்ளும்" - என்று சபேசனுடன் வாதிட்டேன்.

எனது கேள்விகளுக்கு பதிலளிக்க முடியாதவராக "அண்ணை, நீங்கள் என்னை சங்கடத்தில் மாட்டிவிடப்பார்க்கிறீர்கள்" - என்றார் சிரித்துக்கொண்டே.

கூடவே -

"அண்ணை, உங்களுக்கு விளங்க வேணும், நான் ஒரு சூழ்நிலைக்கைதி. கத்தி முனையில்நடந்துகொண்டிருக்கிறேன். கரணம் தப்பினால் மரணம். எம்.ஜி.ஆர்.போல குத்துக்கரணமெல்லாம் அடித்து வாள் வீச எனக்குத்தெரியாது. நான் சிவாஜி ரசிகன்" - என்றார்.

அந்தப்பதிலில்உள்ளஅர்த்தத்தைபுரிந்து கொண்டேன்.

தனது அரசியல் கட்டுரைகள் பற்றி என்னிடம் அபிப்பிராயம் கேட்கும்போதெல்லாம், "ஆய்வுகளினால் எவ்வளவோ விடயங்களை நியாயப்படுத்தலாம். ஆனால், சமயோசிதம்தான்சந்தர்ப்பங்களைவெற்றி கொள்ளும். நீடித்தபோர் உதவிக்கு வராது, சிறுபிள்ளை வேளாண்மை வீடு வந்து சேராது" - என்று பலதடவைகள் அவரிடம் கூறியிருக்கிறேன்.

ஆனால், சபேசனுக்கு தனது கொள்கையில் ஆழமான நம்பிக்கையும் பற்றுமிருந்தது. அதற்கும் மேலாக தலைவரிடம் ஆழமான பக்தி இருந்தது.

"அண்ணை, தலைவருக்குஉங்களில்நல்ல மரியாதை உண்டு. அவர் எங்களோடு சேர்ந்து வேலை செய்வாரா என்று அடிக்கடி என்னிடம் கேட்பார். என்னுடன் வாருங்கள். நான் எந்தப்பிரச்சினையும் இல்லாமல்கூட்டிப்போய் வருகிறேன்என்பார். அப்படி நம்பிக்கையில்லாவிட்டால், டொக்டர் சத்தியநாதனை கேளுங்கோ தலைவர் சொன்னவற்றை. நான் அவருடன் கூட்டிச்செல்கிறேன்" - என்றார்.

தொலைதூரம் சென்றாலும் தொலைவதில்லை சில உறவுகள். அருகிலேயே இருந்தாலும் அந்நியப்படும் சில உறவுகள். அப்படி, அரசியல் - மாற்றுக்கருத்துக்கள் என்று சபேசன் அருகிலிருந்தும் எம்மிடமிருந்த உறவு அந்நியப்பட்டுக்கொண்டே போனது. எனது கருத்துக்களை அவரது சகாக்களிடம்பேசும்போது அவருக்குநெருக்கடி ஏற்படும் என்று நானும் அவரிடமிருந்து விலகியே பழகினேன்.

ஆனால், அவரது இறப்பிற்குப்பிறகு, ஒரேயொரு சொந்த சகோதரியோ மற்ற உறவினர்களோ சிட்னியிலிருந்து வரமுடியாததால், என்னை அவருக்கு அருகில் வைத்து கடமைகளை செய்யப்பணித்தது. அவர் நோயாளியாக ஆஸ்பத்திரியில் இருந்தபோது போய்சந்திக்கமுடியவில்லை. மகன் ஆரூரன் சென்று பார்த்தபோது மூன்று மணித்தியாலத்திற்கு மேல், மறித்து வைத்து நினைவு வரும் வேளையெல்லாம் அவர் பேசிய விடயங்கள் என்னை ஆழமாக பாதித்தது.

2009 ஆம் ஆண்டிற்கு பின் அவரை மிகவும் பாதிக்கப்பட்டவராக பார்த்தேன்.

போராட்டங்களையும் இழந்து, தனது பதவியையும் ஆஸ்திரேலியாவில் பறிகொடுத்து, அவற்றால் மனம் நொந்து, சீரழிந்து நோய் வாய்ப்பட்டுக்கொண்டிருந்த அவரை மிகக்கவலையோடு கண்டேன்.


சத்தியநாதனின்இறுதிநிகழ்வில்"எதிரொலி" பத்திரிகையை தூக்கி எறிந்தது பற்றி "இது தானா உனக்குகீழுள்ளவர்களைநீவளர்த்து விட்ட வளர்ப்பு" - என்று பிறகொருநாள் சந்தித்தபோது சபேசனைக்கேட்டேன்.

"அண்ணை, எனக்கே முதுகில குத்திப் போட்டாங்கள். இதில் இதுவெல்லாம் என்ன" - என்று கவலையோடு சொன்னார்.

சமூக வளர்ச்சியில் பேரவா கொண்டவர்களும் நாட்டுப்பற்றாளர்களும் எங்கள் மத்தியிலிருந்து நாளுக்கு நாள் விடைபெற்றுக்கொண்டிருப்புது வருத்தம் தருகிறது.

மூப்புஇதற்கொருகாரணம்தான். ஆனால், சபேசனின் இழப்புக்கு அது காரணமல்ல. நோய் காரணமல்ல. சபேசனைப் போன்றவர்களின் கொள்கைகள் பேரிடரில் தவறி விழுகின்றபோது - அதன் தொடர்ச்சியாக நீண்டவலிகள் வாழ்வை சூழந்துகொள்கின்றபோது - கசப்பும் வேதனையும் அவர்களின் மீது ரணங்களாக பெருக்கெடுக்கின்றபோது - நிலைகுலைந்து சாவின் பிடியில் வீழ்கிறார்கள்.

இப்படியான அர்ப்பணிப்பாளர்கள்விழுகின்றபோது சில குருத்துக்கள் அவர்களின் இடத்தை நிரப்புவதற்கு முளைவிடும். ஆனால், அவை சபேசனை ஈடுசெய்யுமா என்பதை காலம்தான் பதில் சொல்லும்.



அமரதாஸ்

# ஈற்றில் ஒலிக்க மறுத்துவிட்டு காற்றில் கரைந்துபோன தமிழ்குரல்

தமிழ்ச் சமூகத்திற்கு கடந்த மே 29 ஆம் திகதியன்று அதிகாலை பேரிழப்பொன்று நிகழ்ந்தது. நண்பரும் ஊடகருமான சண்முகம் சபேசன் அவர்கள் மறைந்து விட்டாரென்ற துயரார்ந்த செய்தியை அறிய நேர்ந்தது. அவருடன் நான் பழகிய உரையாடிய நினைவுகள் மேலெழுகின்றன.

தமிழீழ விடுதலை சார் பணிகளை அவுஸ்திரேலியாவில் மிக நீண்டகாலமாக பல்வேறு முன்னெடுத்து வந்தவர் சபேசன். அவுஸ்திரேலியாவிலே தமிழர் ஒருங்கிணைப்புக் குழு, தமிழர் புனர்வாழ்வுக்கழகம், தமிழ்ச் சங்கம் ஆகியவற்றில் ஈடுபட்டு உழைத்தவர்.

“தமிழ்க்குரல்” வானொலி ஒலிப்பரப்புச் சேவை மூலம் அறியப்பெற்றவர். தீவிர இலக்கிய வாசகர். தான் உளப்பூர்வமாக ஏற்றுக்கொண்ட கொள்கைகளுக்காகவும் தமிழ்ச் சமூகத்தின் நலன்களுக்காகவும் தன் வாழ்வின் பெரும்பகுதியை அர்ப்பணித்தவர். பலநூறு வானொலி உரைகளை நிகழ்த்தியவர். பல நூறு கட்டுரைகளை எழுதியவர். அரசியல் சார்ந்து மட்டுமல்லாமல் பொது விடயங்கள் தொடர்பாகவும் எழுதியிருப்பதாக என்னிடம் சொல்லியிருக்கிறார்.

சபேசன் அவர்கள் விடுதலைப்புலிகள் இயக்கத்திலே மிக நீண்டகாலம் போராளியாகச் செயற்பட்ட யோகி அவர்களின் உறவினர். (மைத்துனன்) நெருங்கிய நண்பரும் கூட 'நரேன்”என்னும் யோகியின் இயற்பெயரைத் தனது மகனுக்கு வைத்துக் கொண்டவர். யோகி மூலம் நீண்ட காலத்துக்கு முன்னரே எனக்கு அறிமுகமாகியிருந்தார். விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரன் அவர்கள் மேல், மிகுந்த மதிப்பும் அன்பும் கொண்டவர். யோகி மூலம் பிரபாகரனுக்கு நெருக்கமாகியிருந்த சபேசன் மேல், பிரபாகரனுக்குப் பிரத்தியேகமான அன்பிருந்தது.

வன்னியில் விடுதலைப்புலிகளின் நிழல் அரசு செயற்பட்ட காலத்தில், பிரபாகரனைச் சந்திக்க வந்திருந்தார். அக்காலத்தில் யோகியுடன் என்னைத் தேடி வந்து சந்தித்து, என்னுடன் பல்வேறு விடயங்களைப் பகிர்ந்துகொண்டார்.

இறுதிப்போரிலே ‘காணாமலாக்கப்பட்ட” யோகியும் ‘தியாகச் சாவடைந்த’ பிரபாகரனும் இன்று இருந்திருந்தால், சபேசனின் இழப்பில் மிகவும் வருந்தியிருப்பார்கள்.

முள்ளிவாய்க்கால் அவலங்களும் பிரபாகரனின் இழப்பும் அவரை வருத்திக் கொண்டேயிருந்தன. பிரபாகரனைத் தலைவராக வரித்துக்கொண்ட பலரும், அவரைத் தமிழீழ தேசியத் தலைவராகக் கருதி மதிக்கிற பெரும்பான்மைத் தமிழர்களும் அவருக்கு வெளிப்படையாக ‘அஞ்சலி’ செலுத்தத் தவறிவருகிறார்கள். இந்த நிலைமை விரைவில் மாறவேண்டும் என்ற வேணவா சபேசனிடம் எப்போதும் இருந்தது.

நீண்ட காலத்திற்குப் பின்னர், சபேசனின் தொடர்பு எனக்குக் கிடைத்திருந்தது. அண்மையில் மிக நீண்டநேரம் என்னுடன் அவர் உரையாடினார். பிரபாகரனின் விருந்தோம்பல் பற்றியும் பேச்சு வந்தது. தனக்கு அவர் பிரத்தியேகமாகக் கொண்டுவந்த உணவைப் பரிமாறியது பற்றிக் குறிப்பிடும்போது தேம்பித் தேம்பி அழுதார். அன்று அவர் பழைய நினைவுகளை மீட்கும்போது பலமுறை உணர்ச்சிவசப்பட்டு அழுதிருந்தார். அவரது அன்றைய அழுகுரல், என் மனதில் என்றும் ஒலித்துக்கொண்டேயிருக்கும்.

ஒருமுறை, அவுஸ்திரேலியாவிலிருந்து வன்னிக்கு வந்து பிரபாகரனைச் சந்தித்தபோது, தனது கட்டுரைகளைத் தொகுப்பாக்கி வெளியிட அனுமதி தருமாறு கேட்டிருந்தார். அப்போது, ‘அதை நானல்லவா வெளியிட வேண்டும்” - என்று கூறியிருந்தார் பிரபாகரன். பின்னர் இடம்பெற்ற இறுதிப்போரில், அது சாத்தியமாகவில்லை. “Selected writings of Sanmugam Sabesan” என்ற தலைப்பில் தனது கட்டுரைகளின் தொகுப்பு, ஒருவரிடம் இருப்பதாக அண்மையில் எனக்குச் சொல்லியிருக்கிறார். தனது நூல் வெளிவரவேண்டுமென்று விரும்பியிருந்த சபேசனின் நூலை, அவரது நெருங்கிய நண்பர்கள் இனியாவது வெளிக்கொண்டு வருவது நல்லது.

கலை மற்றும் அரசியல் சார்ந்து மாற்றுக் கருத்துகளைக் கொண்டவர்களுடனும் அவர் நட்பைக்கொண்டிருந்தார். ஒரு முரண்பாட்டின் நிமித்தமாக அவருக்கு எதிராக வழக்குப் போட்டிருந்த ஒரு நண்பருடனும் தொடர்ந்து நட்பைப் பேணிவந்தவர். மாற்றுக் கருத்தாளர்கள் மத்தியிலும் சொந்தக் கருத்துகளை எடுத்துச் செல்லவேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்.

வன்னியில் இருந்த காலத்திலே அவரிடம் கொடுத்து வைத்திருந்த ‘ஆவணங்கள்” பலவற்றைத் திரும்பப்பெறுவதற்கிடையில், அவரது இழப்பு சடுதியாக நிகழ்ந்துவிட்டது. தனது பிரத்தியேகமான அனுபவங்கள் பலவற்றை என்னுடன் அவர் பகிர்ந்துகொண்ட நினைவுகள் எனக்குள் மெல்ல மெல்ல மேற்கிளம்புகின்றன.

விடுதலைப்போராட்ட வரலாற்றோடும் பிரபாகரனோடும் நெருக்கமாக இருந்தவர்கள் சாவடையும்போது, போராட்ட வரலாற்று நிகழ்வுகள் பலவும் வெளிவராமல் மறைந்துவிடுகிற துயரம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

காஸ்ரோ அவர்கள், இயக்கம் சார்ந்து வெளிநாடுகளிலே முன்னெடுத்த நடவடிக்கைகளில் சபேசனுக்கு முழு உடன்பாடு இருக்கவில்லை. அதுபற்றிப் பிரபாகரனுடன் பேசுவதற்காக வன்னிக்கு வந்து ஒரு தடவை தயாரான நிலையில் காத்திருந்தார். ஒருநாள், காஸ்ரோவுடன் இணைந்து பிரபாகரனை அவர் சந்திக்க வேண்டியிருந்தது. அந்த இடத்திற்குப் பிரபாகரன் வருவதற்கிடையில் காஸ்ரோவுடன் அவர் மிகக் கடுமையான வாக்குவாதத்தில் ஈடுபட்டிருந்தார். இறுதிப் போரானது பேரழிவுகளோடு முடிவை எட்டிய நிலையில், காஸ்ரோவின் இறுதி நிமிடங்கள் குறித்தும் அவலமான முறையில் அவர் தியாகச்சாவடைய நேர்ந்தமை குறித்தும் சபேசனுக்குச் சொன்னபோது மிகவும் வருந்தினார்.

காஸ்ரோவினால், இயக்க வேலைகளுக்காக வெளிநாடுகளில் நியமிக்கப்பட்டிருந்த சிலரது நடவடிக்கைகள், விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கே பாதகமான விளைவுகளை ஏற்படுத்தின. அத்தகைய சிலர், சிறிலங்கா அரச தரப்பினரின் நிகழ்ச்சிநிரலில் இப்போது இயங்குவதாகக் கேள்விப்படுகிறேன். பிரபாகரனால் இயக்கத்தின் பல்வேறு பிரிவுகளுக்குப் பொறுப்பாளர்களாக நியமிக்கப்பட்டிருந்த பலரது தவறுகளின் விளைவுகளைப் பிற்காலத்திலே பிரபாகரன் எதிர்கொள்ள நேர்ந்திருக்கிறது. இயக்கத்தில் அனைத்து விதமான அதிகாரங்களையும் கொண்டவராகப் பிரபாகரன் இருந்தபோதிவும் அவர் சூழ்நிலைக் கைதியாக இருந்த பல சந்தர்ப்பங்களை நானறிவேன். எது எப்படியிருந்தாலும், பிரபாகரனோ அவருடன்இணைந்து பயணித்தவர்களோ விமர்சனத்திற்கு அப்பாற்பட்டவர்களல்லர்

விடுதலைப்புலிகள் இயக்கத்திற்குள் நடந்துகொண்டிருந்த விபரீதமான மாற்றங்கள் குறித்த உரையாடலை சபேசனுடனும் வன்னியிலிருக்கும்போது முன்னெடுத்திருக்கிறேன். எளிதில் உணர்ச்சி வசப்படக்கூடியவராகவும், பின்விளைவுகள் பற்றி அதிகம் யோசிக்காமல் எதையும் வெளிப்படையாகப் பேசக்கூடியவராகவும் சபேசன் காணப்பட்டார். ஒன்றை உண்மையாக நேசித்தவர்களால், அதன் சரிவைத் தாங்கிக்கொள்ள முடியாது தான். சபேசன் போன்ற பலர், இன்னமும் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களிலே சிலர் திட்டமிட்டு ஒதுக்கப்பட்டவர்கள், சிலர் ஒதுங்கிக்கொண்டவர்கள்.

விடுதலைப்புலிகள் இயக்கத்தின் பெயரையும் பிரபாகரனின் பெயரையும் வைத்து அடையாள அரசியலையும் பிழைப்புவாதத்தையும் மோசமான வழிமுறைகளிலே தொடர்பவர்கள், இப்போது உலகெங்கும் பரவியிருக்கிறார்கள். அத்தகையவர்களால், தமிழீழ விடுதலை சார்ந்த ஈழத் தமிழினத்தின் ஒட்டுமொத்தத் தியாகங்களும் வீணடிக்கப்படுகின்ற துயரம் தொடர்கிறது.

ஒரு நாள் உரையாடலின் இறுதியில், ‘மிக நீண்ட காலத்தின் பின்னர், இன்று மனம்விட்டுப் பேசியிருக்கிறேன். இன்று இரவு நான் நிம்மதியாக உறங்குவேன்” - என்று சொன்னார்.

அன்று அவர் தனது மனக்குமுறல்களைக் கொட்டியிருந்தார். தனக்கு ஏற்பட்டிருந்த சுகவீனம் காரணமாக மேற்கொள்ளப்பட்டிருந்த சிகிச்சைக்குப் பிறகு, அடிக்கடி நினைவிழப்பு ஏற்படுவதாகச் சொல்லியிருந்தார். அவர் என்னுடன் உரையாடும்போது அதை என்னால் உணர முடிந்தது. அவரது நினைவுகளை மீட்டெடுக்க வேண்டும் என்ற தவிப்பு, அன்று மேலெழத் தொடங்கியிருந்தது. அவரிடமிருந்து பெற நினைத்தவைகள் ஏராளம். தனது எல்லா நினைவுகளையும் எங்கோ சொருகிவிட்டு, சடுதியாக அவர் நிரந்தர உறக்கத்தில் ஆழ்ந்துவிட்டார். என்னுடன் மனம் திறந்து உரையாடிய அன்றிரவில் அவர் நிம்மதியாக உறங்கியிருக்கக் கூடும் அன்று, அவருக்கான உளவளத்துணையாக நான் இருந்தேன் என்பதில் சிறு நிம்மதி இருந்தது. ஆனால், இப்போது நிரந்தரமாகவே உறக்கத்தில் ஆழ்ந்துவிட்ட அவரது இழப்பின் துயரை எப்படி இறக்கி வைப்பது?

# நினைவில் நீங்காத நிழல்கள்


மெல்பேர்னில் நண்பர்களுடன்

## 'சான்றோன்' சத்தியநாதனின் மறைவுக்கு சபேசன் எதிரொலிக்கு எழுதிய நினைவுக் குறிப்பு




கரிசல் இலக்கியத்தின் தந்தை கி.ராஜநாராயணனுடன்


'காலச்சுவடு' கண்ணனுடன்

தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்தில் தோளோடு தோள் நின்ற பல்லாயிரக்கணக்கான தேசப்பற்றாளர்களில் சத்தியநாதன் அவர்களும் ஒருவர். ஆஸ்திரேலியாவில் அவருடன் எனக்கு பழக்கமேற்பட்ட காலம் முதற்கொண்டு அவருடைய தமிழ் மீதான பற்று என்னை பிரமிக்க வைத்திருந்தது. அதனைவிட, அவர் தமிழுக்காகவும் தாயகத்துக்காகவும் வாரி வாரி வழங்கிய வள்ளல் குணம்தான் அதிகம் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. ஒருகை கொடுப்பது மறுகைக்கு தெரியக்கூடாது என்பார்கள். ஆனால், சத்தியநாதனை பொறுத்தவரைக்கும் அவர் தனது இரண்டு கைகளுக்கும் தெரியாமலேயே அள்ளிக்கொடுத்தார் என்றுதான் கூறவேண்டும். தமிழையும் தாயகத்தையும் தனது இரு கண்கள்போல பேணினார்.

திருவள்ளுவரின் வழி நின்று அவர் மேற்கொண்ட பணிகளும் மெல்பேர்ன் வாழ் தமிழ் மக்களுக்கு திருவள்ளுவரின் சிலைகளை கொடுத்து அவரின் வழி நிற்பதற்காக மேற்கொண்ட செயற்றிட்டங்களும் காலத்தையும் தாண்டி நினைவில் கொள்ளத்தக்கவை. தமிழை தன் உயிர் மூச்சாக நேசித்த அரவது இயல்பு அவரை தெரிந்த எவருக்குமே அவரை வித்தியாசமாக முன்னிறுத்தியது. தமிழ் பிள்ளைகளுக்கு தமிழ் தெரியவேண்டும் என்பதில் அவர் கொண்டிருந்த கவனமும் கரிசனையும் கண்டிப்பானதாக இருந்தது. "எங்கட பிள்ளைக்கு தமிழ் விளங்கும், ஆனா கதைக்க மாட்டார்" - என்று சாக்கு போக்கு சொல்லி தப்பிக்கப்பார்க்கும் பெற்றோரிடம், 'என்ர வீட்டில இருக்கிற நாயும் அப்பிடித்தான். தமிழில கூப்பிட்டா வரும். போ எண்டா போகும். எல்லாம் நல்ல விளங்கும். ஆனால், திருப்பி தமிழில கதைக்காது" - எண்டு கிண்டலாகவும் அதேவேளை கண்டிப்பாகவும் தமிழை இடித்துரைத்துக்கொண்டிருந்தார். தன் நினைவை இழக்கும் வரையில் தமிழின் சிறப்பை கொண்டாடிக்கொண்டிருந்தார் என்றுதான் கூறவேண்டும்.

மெல்பேர்ண் வந்திருந்த தமிழ்ப்பற்றாளர் ஈழவேந்தன் ஐயாவுடன் ஒருநாள் சந்தியநாதனை சந்தித்திருந்தேன். ஐயாவை சத்தியநாதன் அவர்களிடம் அழைத்து சென்றிருந்தபோது என்னை தனியே வீட்டுக்கு பின்னால் அழைத்து சென்று 'எனக்கு எல்லாம் மறந்துகொண்டு போகுதடா. கெதியா செத்துப்போவன் போல கிடக்கு" - என்று குலுங்கி குலுங்கி அழுதார். அவர் அழுத காட்சி இன்னமும் எனது மனக்கண்களில் மாறாதுள்ளது. நினைத்துப்பார்க்கவே அவர் நேரில் வந்து நின்று திரும்பவும் அழுவதைப்போலிருக்கிறது.

ஆனால், இன்று இந்த தேசமே அவருக்காக அழுதுகொண்டிருக்கிறது என்பதை அவரை அறிவாரோ தெரியாது.

**அவரது ஆத்மா அமைதியடையட்டும்.**
**ச.சபேசன்**

## ஆஸ்திரேலிய தினத்தன்று கௌரவிக்கப்பட்ட சபேசன் அண்ணாவின் செய்தி எதிரொலியில்

# ஆஸியின் ஆசி பெற்ற தமிழர்கள்







ஆஸ்திரேலிய தினத்தன்று வெவ்வேறு இனங்களை சேர்ந்த உள்ளூர் சமூகத்தலைவர்கள் பலர் மாநில வாரியாக உள்ள உள்ளூராட்சி நிர்வாக அலகுகளான கவுன்ஸில்களால் கௌரவிக்கப்பட்டனர். அவர்களில் சில தமிழர்கள் தமிழ் சமூகத்துக்கு பெருமை சேர்க்கும் வகையில் விருது வழங்கப்பட்டிருந்தனர்

அவர்களில் சிலர்.

ஆஸ்திரேலிய விருதளித்து கௌரவிக்கப்பட்டவர்களில் ஒருவரான சண்முகம் சபேசன் அவர்கள் தமிழர் ஒருங்கிணைப்புக்குழுவின் தலைவராக செயற்பட்டவர். ஆஸ்திரேலியாவில் பலராலும் அறியப்பட்டவர். தமிழ் அமைப்பின் தலைவராக செயற்பட்டதற்கு அப்பால் ஊடகவியலாளராக வானொலி அறிவிப்பாளராக பத்தி எழுத்தாளராக பன்னெடுங்காலமாக தனது சமரசமற்ற கருத்துக்களை பொதுத்தளத்தில் துணிச்சலோடு வெளியிட்டு வந்தவர்.

மெல்பேர்ணில் சிறந்த குடிமகனாக கௌரவிக்கப்பட்ட இன்னொருவரான விக்கிரமசிங்கம் பல ஆண்டுகளாக ஆஸ்திரேலிய தமிழ் சமூகத்தில் தனக்குரிய இடத்தை பேணுபவர். ஆஸ்திரேலிய – தமிழ் அரசியல் உறவுக்கு பெரும்பாலமாகவும் பெரும்பலமாகவும் செயற்படுபவர். இவரும் ஒரு வானொலி அறிவிப்பாளராக செயற்படுகின்றவர். பல சமூக செயற்பாடுகளில் தொடர்ந்து தன்னை இணைத்து வைத்திருப்பவர்.

சிட்னியில்சிறந்தகுடிமகளாககௌரவிக்கப்பட்டுள்ள திருமதி சந்திரிக்கா சுப்ரமணியன் தொடர்பாக அதிகம் யாருக்கும்அறிமுகம்தேவையில்லை.சட்டத்தரணி,பெண்கள் உரிமைக்காக தொடர்ச்சியாக முன்னின்று உழைப்பவர், எழுத்தாளர், சுமார் 25 நூல்களுக்கு மேல் எழுதியவர். இவரும் ஆஸ்திரேலிய அரசியல் கட்டமைப்புக்களுடன் நெருங்கிய தொடர்புடையவர். தமிழ் சமூகத்துக்கான உறவுப்பாலமாக திகழ்பவர்.

# ஒற்றுமையின் சின்னமாக உதித்த விக்டோரிய தமிழ் கலாசார மையம்





ஆஸ்திரேலியாவில்தமிழ்மக்களுக்கானகலாசார மண்டபம் ஒன்றை உருவாக்கவேண்டும் என்ற மாபெரும் கனவு முதன் முறையாக மெல்பேர்னில் கைகூடியிருக்கிறது. பரவசமூட்டுகின்ற இந்த வரலாற்று முன்னெடுப்பினை ஈழத்தமிழ் சங்கத்தின் விக்டோரிய கிளை சாத்தியமாக்கியதன் மூலம் சாதித்திருக்கிறது. கொஞ்சம் கொஞ்சமாக செயல் வடிவம் செதுக்கியெடுக்கப்பட்ட இந்த மண்டபம் பொதுமக்களின்ஆதரவுடனும்அரசாங்கத்தின்அனு சணையுடனும் பொலிவோடு உதித்திருக்கிறது.

ஆஸ்திரேலியாவில் எத்தனையோ கலாசார மண்டபங்களை அரசாங்கம் உருவாக்கி பல்லின மக்களுக்கு வழங்கியிருந்தாலும்கூட ஒவ்வொரு இனத்தவர்களும் தங்களுக்கான அடையாளமாக ஒன்றோ இரண்டு மண்டபங்களை உருவாக்கி வைத்திருக்கிறார்கள் என்பது அனைவரும் அறிந்த விடயம். இந்த மண்டபங்கள் அனைத்தும் பல வருடங்களுக்கு முன்னரே திட்டமிட்டு முந்தைய தலைமுறையின் முயற்சியினால் உருவாகியவை ஆகும்.

ஆனால், ஈழத்தமிழர்களை பொறுத்தவரை கடந்த காலங்களில் தாயகத்திலிருந்த தேவைகளின் அடிப்படையில் தங்களது சகல வளங்களையும் தாயகத்தை நோக்கி குவியப்படுத்தியிருந்தனர். இப்போதும் அந்த தேவை இருந்தால்கூட, புலம்பெயர்ந்த மண்ணில் அடுத்தடுத்த தலைமுறையினரின் உருவாக்கம் தமிழர்களின் அடையாளத்தை தொடர்ந்து பேணிப் பாதுகாக்கவேண்டியது உட்பட பல அடிப்படை தேவைகளை கோரி நிற்கிறது. அதுமட்டுமல்லாமல் புலம்பெயர்ந்த மண்ணில் ஒரு பலம்வாய்ந்த தமிழ் சமூகமாக தமிழர்களின் இருப்பினை கட்டமைத்துக் கொள்வதற்கும் ஒரு பொது மையம் தேவைப்படுகிறது. இன்று நேற்றல்லாமல் பல வருடங்களாகவே இது வலியுறுத்தப்பட்டு வந்திருக்கிறது.

இவற்றின் அடிப்படையிலேயே ஆஸ்திரேலிய தமிழர்களின் மூத்த தமிழ் அமைப்பான விக்டோரிய தமிழ் சங்கம் இந்த முயற்சியை செயல்வடிவமாக்கி சாதித்திருக்கிறது.

இந்த கலாசார மண்டபம் மெல்பேர்னில் தென் கிழக்கு பகுதியில் அமைந்துள்ள டண்டிநொங் பிராந்தியத்தில் அமைந்துள்ளது. ஏற்கனவே வேறு தேவைக்கு பயன்படுத்தப்பட்டுவந்த ஒரு விசாலமான மண்டபத்தினை வாங்கிய ஈழத்தமிழ் சங்கம், பிரைவேட் லிமிட்டெட்டாக பதிவு செய்து மூன்று வருடங்களில் சமூக மண்டபத்தினை தனது சாதனை மையமாக நிறுவி காண்பித்திருக்கிறது. சமூக சேவையின் அத்திபாரம் செயல்வடிவங்களின் திரட்டிசியே என்று செய்து காண்பித்திருக்கிறது.

தமிழ் மக்களின் முன்னெடுப்பின் வழியில் இந்த மண்டபம் அமைக்கப்பட்டிருந்தாலும் இது எல்லா சமூகத்தினரையும் ஒன்றிணைத்து பயணிக்கவல்ல பொது மையமாக அமையவேண்டும். இந்த நாட்டின் பல்கலாசார விழுமியங்களுக்கு மதிப்பளிக்கும் பொது அலகாக விக்டோரிய தமிழ் சங்கம் இந்தப் பொறுப்பை நெறிப்படுத்தவேண்டும்.

விக்டோரிய தமிழ் சங்கத்திற்கும் துணை நின்றவர்களுக்கு எதிரொலியின் வாழ்த்துக்கள்.




# இலக்கியப் பெருநிலத்தில் புத்தகக் கடைகளின் அவலம்

● குமாரதாஸன்

அச்சு ஊடகங்களில் - பத்திரிகைகளைப் போன்றே - புத்தகங்களும் அவற்றின் அந்திமகாலப்பகுதியில்ஊசலாடிக் கொண்டிருக்கின்றன.

புத்தகங்களின் அச்சு வடிவங்கள் காலாவதியாகுவதால் புத்தகசாலைகள் இழுத்து மூடப்படுவது இந்த நூற்றாண்டின் துயரங்களில் ஒன்று. வீடுகளில் சேரும் கழிவுகளுடன் சேர்த்து புத்தகங்களும் தெருவுக்கு வரும் அவலத்தை எங்கும் காணமுடிகிறது.

டிஜிற்றல் நூலகங்களின் பிரவேசம் காரணமாகபுத்தகசாலைகளைநாடும்வாசகர்கள் எண்ணிக்கை அருகிவிட்டதால், அவை பழைய புத்தகக் கடைகளாக மாறி, பின்னர் காணாமல் போகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

வாடகை அதிகரிப்பு, விற்பனை வீழ்ச்சி, அரசு உதவிகள் கிடைக்காமை போன்ற காரணங்களால் பாரிஸ் நகரின் “லத்தீன் வட்டகை” அதன் பாரம்பரிய புத்தகக் கடைகளை அடுத்தடுத்து இழந்து கொண்டிருக்கிறது.

புத்தகக் கடைகளுக்குப் பெயர் பெற்ற லத்தீன் வட்டகையில் (Quartier Latin) 1938 முதல் ஒர் அறிவுக் களஞ்சியமாக இயங்கிவந்த Boulinier என்னும் பிரபல புத்தகக் கடை இம்மாத நடுப் பகுதியுடன் தனது கதவுகளை நிரந்தரமாக மூடுகிறது. கடையின் குத்தகை நீடிக்கப் படாததை அடுத்தே அதனை மூடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதாக உரிமையாளர் தெரிவித்திருக்கிறார். எனினும் பிற




இடங்களில் உள்ள இதன் கிளைகள் தொடர்ந்து இயங்கும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

இதேபகுதியில்Mazarine மற்றும்Picard & Epona எனப்படும் வேறு இரண்டு பிரபலபுத்தகசாலைகளும்நிரந்தரமாகமூடப் பட உள்ளன என்ற அறிவிப்பு வெளியாகி உள்ளது. Picard & Epona நூலகம் வரலாறு, தொல்லியல், கட்டடக் கலை சார்ந்த பழைய, புதிய புத்தகங்களுக்குப் பெயர்பெற்றது.

இணைய வழி புத்தக விற்பனையுடன் (online sales) போட்டிபோட முடியாத நிலை, நூல்களை டிஜிட்டல் வடிவங்களில் வாசிக்கும் பழக்கம் அதிகரிப்பது போன்ற காரணங்களால் புத்தகக்கடைகளை நாடி வரும் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையில் பெருவீழ்ச்சி ஏற்பட்டிருப்பதே - நிதி நிலைமை கருதி - அவற்றை மூடவேண்டிய நிர்ப்பந்தத்தை உருவாக்கியிருப்பதாக உரிமையாளர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

யாழ். நகரின் பூபாலசிங்கம் புத்தகசாலை போன்று பாரிஸ் நகரில் Boulinier நூலகம் நீண்ட பாரம்பரியம் மிக்க ஒரு புத்தகசாலை. பிரான்ஸின் பிரபல Sorbonne பல்கலைக் கழகத்துக்கு அண்மையில் உள்ள அதன் அமைவிடம் (20, boulevard Saint-Michel) பல தலைமுறை மாணவர்களிடமும் கல்வியியலாளர் மத்தியிலும் பெருமதிப்புப் பெற்ற அறிவு மையமாக அதனை மாற்றி இருந்தது.

ஒரு சுற்றுலா மையமான அப்பகுதியில் உல்லாசப் பயணிகளைக் கவருகின்ற வர்த்தக மையங்கள் பெருகிவருவதால் கடை வாடகைகள் உச்சத்துக்கு உயர்ந்து செல்கின்றன. இதனால் புத்தகக்கடைகள் அங்கு தாக்குப்பிடிக்க முடியாதநிலை உருவாகியிருக்கிறது.

“உல்லாசப் பயணிகள் ஆடை ஆபரண நிலையங்களையும் சான்ட்விச் கடைகளையுமே நாடுகின்றனர். அவர்கள் புத்தகம் வாசிப்பதில்லை. வாங்குவதும் இல்லை” - என்று தனது கட்டுரையில் எழுதுகிறார் ஒரு பத்திரிகையாளர்.

“மூடப்படவுள்ள Mazarine புத்தகக் கடையின் கட்டடத்தை ஒரு ரெடிமேற் ஆடையகத்துக்கோ இறைச்சிக்கடைக்கோ விற்றுவிட ஆயத்தமாகிறார் அதன் உரிமையாளர் Pierre Durieu. நகரங்களின் இன்றைய யதார்த்த நிலைமை இப்படித்தான் இருக்கிறது.

நகரங்கள் மட்டுமல்ல, மக்களின் வாசிப்பு பழக்கங்களும் மாறிவிட்டன. முகநூல் போன்ற சமூகவலைத்தளப் பதிவுகளை அவசரமாக “மேய்வது” ஆழமான புத்தக வாசிப்புக்கான நேரத்தை நம்மிடமிருந்து பறித்துவிட்டது. நல்ல நூல்களை நாடி வாசிக்கும் பழக்கம் அருகிவருவது புத்தகக் கடைகளை இழுத்து மூடச் செய்வதுடன் புத்தகங்களின் சரித்திரத்தையும் முடிவுக்குக் கொண்டுவருகின்றது. ■


# Blinds Screens Security Doors

*Factory Direct*




Free Measure & Quotes - Delivery and Install - Servicing all Suburbans

OUR SERVICES : ● PLANTATION SHUTTERS ● TIMBER BLINDS ● SCREEN BLINDS ● VERTICAL BLINDS ● ROLLER BLINDS ● ROMAN BLINDS ● SECURITY DOORS ( All Types) ● FLY SCREENS ● WARDROBE DOORS ● CANVAS AWNINGS ● SPLASH BACKS ● MIRRORS

**Contact - Raja (Roger) Mob: 0411 734 484 Tel: 93 330 770**

Email: galalxyoz@bigpond.com

**GalaxyOZ (PVT) Ltd.** Factory 31/283 Rex Road Campbellfield Victoria 3061


24 வருட கால
நகை
அடகுச்சேவை
Maximum Value | Quick Service | Lowest Rate
• குறைந்த வட்டி வீதம்
• கடன் தொகை படிப்படியாக மீள் செலுத்தும் வசதி
• ஏழு நாட்களும் சேவையில்
EZY CASH PAWN SHOP
அடகுகடை
EZY CASH
Bala 0420 877 303
#Shop L01 102c, Dandenong Plaza Shopping Centre, 49-55 McCrae Street, Dandenong VIC 3175


எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI



# ஆறுமுகன் தொண்டமானின் மறைவு மலையக அரசியலுக்கு இழப்பா?

இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளி மக்களுக்கு இரு தசாப்தங்களாக அரசியல் தலைமைத்துவத்தை வழங்கிவந்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் ஆறுமுகன் தொண்டமானின் திடீர் மறைவானது அம்மக்களின் மனங்களில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அதுமட்டுமல்ல, மலையக அரசியலில்சில மாற்றங்களையும் ஏற்படுத்தப்போகின்றது. அதற்கான நகர்வுகள் தற்போது திரைமறைவில் இடம்பெற்று வருகின்றன. விரைவில் திரைக்கு வருமென எதிர்பார்க்கப்படுகின்றது.

'ஆலை இல்லாத ஊருக்கு இலுப்பைப்பூ சர்க்கரை' என்பதுபோல பன்முக ஆளுமை இல்லாவிட்டாலும் ஆறுதலுக்காகவேனும்



மலையகத்தமிழர்களுக்கு 'ஆறுமுகன்' என்ற ஒரு தலைமைத்துவம் இருந்தது. தற்போது அதுவும் மௌனித்துவிட்டதால் மக்களுக்கு ஏதேவொரு விதத்தில் இழப்புதான் என்பதை ஏற்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

"பெருவிருட்சம் சரிந்துவிட்டது" "இமய மலை இடிந்துவிட்டது" என்றெல்லாம் இ.தொ.காவின் தொண்டர்கள், 'தொண்டமான்' புராணம் பாடினாலும் மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கை நிலையை விஞ்ஞானப்பூர்வமாக அலசி ஆராய்ந்தால் -

அவர்கள் இன்றுகூட 'நவீன அடிமைகளாகவே' வழிநடத்தப்படுகின்றனர். உரிமைகள் அப்பட்டமாக மறுக்கப்படுகின்றன. எனவே, மேற்படி வர்ணிப்புகள் சரியானவையா?

மலையகத் தமிழர்களுக்கு பல தசாப்தங்களுக்கு முன்னரே கிடைத்திருக்கவேண்டிய உரிமைகள்கூட கிள்ளியே கொடுக்கப்பட்டுவருகின்றன. ஆயிரம் ரூபா சம்பளத்துக்காககூட ஆயிரம் போராட்டங்கள், 5 வருடங்கள் இழுத்தடிப்பு, ஏமாற்றங்கள் என துரோகங்கள் தொடர்கின்றன. எனவே, மலையகத் தமிழர்களுக்கு சிறப்பான தொழிற்சங்க தலைமைத்துவம் வழங்கப்பட்டதா என்ற வினாவும் எழுகின்றது.

இலங்கையில் முடியாட்சியின்போதும் ஏன்...! குடியாட்சியிலும்கூட மலையகத் தமிழர்கள் ஒடுக்கப்பட்டனர். அடக்கி ஆளப்பட்டனர். இன்றும் ஏதோவொரு விதத்தில் அவை தொடர்ந்துகொண்டுதான் இருக்கின்றன. எனவே, தனிநபரின் மரணத்துக்கு அப்பால்வஞ்சிக்கப்பட்ட ஓர்சமூகம் கடந்து வந்த பாதையும், தலைமைத்துவம் வழங்கியவர்களின் இரு பக்கங்களையும் பார்க்கவேண்டியுள்ளது. அதற்காக கோப்பி யுகம் முதல் இற்றைவரை கண்ணோட்டம் செலுத்தப்படுகின்றது.

**மலையகத் தமிழர்களின் குடியேற்றம்**

*1815* ஆண்டில் கண்டி இராஜ்ஜியத்தை பிரித்தானியர் கைப்பற்றிய பின்னர் - மலையகமெங்கும் வெள்ளையர்களின் ஆதிக்கம் கோலோச்சியது. எல்லா விடயங்களும் அவர்களின் கட்டளையின்படியே அரங்கேறின.

**1824** ஆம் ஆண்டில் ஜோர்ஜ் பேர்ட் என்பவரால் இலங்கையில் கம்பளை, சிங்ஹாபிட்டியவில் கோப்பி பயிர் செய்கை அறிமுகப்படுத்தப்பட்டது. காலப்போக்கில் ஒருவகையான நோய்த்தாக்கத்தால் கோப்பி பயிர்செய்கை முற்றாக அழிவடைந்தது.

இதையடுத்தே ஜேம்ஸ் டெய்லர் என்பவரால் **1867** ஆம் ஆண்டில் லூல் கந்தரா. எனும் இடத்தில் தேயிலை பயிர்செய்கை ஆரம்பிக்கப்பட்டது.

**1827** ஆம் ஆண்டில் தென்னிந்தியாவிலிருந்து முதலாவது தொழிலாளி இலங்கையை வந்தடைந்தார் எனக் கூறப்பட்டாலும், தேயிலைப் பயிர்செய்கை அறிமுகப்படுத்தப்பட்ட பின்னரே கொத்துக்கொத்தாக வந்து குவிந்தனர் என்று தரவுகள் தெரிவிக்கின்றன.

கரையோரப்பகுதிகளிலிருந்து கால் நடையாக மலையகப்பகுதிகளுக்கு சென்ற மக்கள் பல இடங்களிலும் அடிப்படை வசதிகள்கூட இல்லாமல் குடியமர்த்தப்பட்டனர். குடியமர்த்தப்பட்டனர் எனக் கூறுவதைவிட லயன் அறைகளில் சிறை வைக்கப்பட்டனர் என்றே கூறவேண்டும்.

**(24ஆம் பக்கம் பார்க்க)**

# "மலையேறப்போகும்" மனோ கூட்டணி திட்டங்களுடன் தயார் நிலையில்!



எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI



(23ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெள்ளையர்களின் நிர்வாகத்தின்கீழ் மலையகத் தமிழர்கள் அடிமைகளாகவே வழிநடத்தப்பட்டனர். உழைப்புக்கேற்ற ஊதியம் வழங்கப்படவில்லை. தொழிற்சங்கம் அமைக்கும் உரிமைகூட மறுக்கப்பட்டது. இப்படி பல கொடுமைகளை பட்டியலிட்டுக்கொண்டே போகலாம்.

**இலங்கை - இந்திய காங்கிரஸ் உதயமும் குடியுரிமை பறிப்பும்**

இலங்கையில் வாழ்ந்த இந்திய வர்த்தகர்கள், தொழிலாளர்கள், அரசபதவிகளில் இருந்தவர்களுக்கு எதிராக நெருக்கடிகள் வலுத்ததால், இது தொடர்பில் கண்காணிப்பதற்கு தனது விசேட பிரதிநிதியாக நேருவை, காந்தி *1939* ஆம் ஆண்டு ஜ/லை மாதம் இலங்கைக்கு அனுப்பிவைத்தார்.

இலங்கைக்கு வந்த நேரு கொழும்பில் செயற்பட்ட இந்திய அமைப்புகளிடையே ஒற்றுமை இல்லாதபோக்கிருப்பதை உணர்ந்தார். இதனால், அனைவரையும் ஒன்றிணைக்கும் முயற்சியில் இறங்கினார்.

கொழும்பில் உள்ளவர்களை மட்டுமின்றி தோட்டத்தொழிலாளர்களையும் இணைத்துக்கொள்ளவேண்டும் என்றும் நேரு வலியுறுத்தினார். இதற்கு சிலர் எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர். ஆனால், நேரு அதை ஏற்கவில்லை.


இழுபறிக்கு மத்தியில் *1939* ஜ/லை மாதம் *24* ஆம் திகதி இறுதிக்கட்ட பேச்சுகள் நள்ளிரவு தாண்டியும் நடைபெற்றன. பிளவுபட்டிருந்தவர்களெல்லாம் ஓரணியில் திரண்டனர். இதன் பிரதிபலனாக இலங்கை - இந்திய காங்கிரஸ் உதயமானது. அது இந்திய வம்சாவளி மக்களுக்கான அரசியல் இயக்கமாகவும் செயற்பட்டது. புறக்கணிக்கப்பட்ட மக்களுக்கு இவ்வமைப்பு சற்று ஆறுதலாக இருந்தது. இவ்வமைப்பே தற்போது இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸாக செயற்பட்டுவருகின்றது.

இலங்கையில் *1947* இல் நடைபெற்ற முதலாவது பொதுத்தேர்தலில் தனித்துகளமிறங்கிய 'இலங்கை - இந்திய காங்கிரஸ்' சிறந்த வெற்றியை பதிவுசெய்தது. அமரர். சௌமியமூர்த்தி தொண்டமான் உட்பட 7 பேர் நாடாளுமன்றத்துக்கு தெரிவானார்கள்.

பொதுத்தேர்தலின் பின்னர் அமைந்த முதலாவது பாராளுமன்றத்திலேயே - அதாவது *1948* இல் - பிரஜா உரிமை சட்டத்தின்கீழ் மலையகத் தமிழர்களின் குடியுரிமைபறிக்கப்பட்டது. அதன்பின்னர், தேர்தல் திருத்தச்சட்டத்தின் ஊடாக வாக்குரிமையும் மறுக்கப்பட்டது. இதனால் மலையகத் தமிழர்கள் அரசியல் ரீதியில் அநாதைகளாக்கப்பட்டனர். டி.எஸ். சேனாநாயக்க தலைமையிலான ஐக்கிய தேசியக்கட்சியின் இந்த துரோக- அடாவடிச்செயலுக்கு அரசின் பங்காளிக்கட்சியாக இருந்த தமிழ் காங்கிரசும் துணை நின்றது.

எனினும், தந்தை செல்வா இதனை கடுமையாகஎதிர்த்தார் - வன்மையாககண்டித்தார் - மலையகத் தமிழர்களுக்காக துணிகரமாக குரல் கொடுத்தார். இறுதியில், தமிழ் காங்கிரசுடன் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக அரசாங்கத்திலிருந்தும் வெளியேறினார். தந்தை செல்வாவுக்கு ஆதரவாக மேலும் சிலர் அவர் பின்னால் அணி திரண்டனர்.

இந்நிலையில் *1949* டிசம்பர் *18* ஆம் திகதி தந்தை செல்வா தலைமையில் 'சமஷ்டி கட்சி' உதயமானது. காலப்போக்கில் "இலங்கை தமிழரசுக் கட்சியாக" பெயர் மாற்றம் பெற்றது.



# ஆறுமுகன் தொண்டமானின் மறைவு மலையக அரசியலுக்கு இழப்பா?

**கட்சிகளுக்கிடையே பிளவு: தனித்து நின்று போராடிய தொண்டமான்**

*1949* களில் இலங்கை குடியுரிமை கோரி விண்ணப்பித்தவர்களில் சிலருக்கு மாத்திரமே அனுமதி கிடைத்தது. அதன் பின்னர் *1964* இல் சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

இந்த உடன்படிக்கையின் பிரகாரம், *5* இலட்சத்து *25* ஆயிரம் மலையகத் தமிழர்களை இந்தியா ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் *3* இலட்சம் *25* ஆயிரம் பேருக்கு *1964* இற்கும் *79* இற்கும் இடைப்பட்ட காலப்பகுதிக்குள் இலங்கையில் குடியுரிமை வழங்கப்படவேண்டும் எனவும் இணக்கப்பாடு எட்டப்பட்டிருந்தது. இதனால் சொந்தங்கள் பிரிக்கப்பட்டன. பாதி பேர் இந்தியாவுக்கும், மீதிபேர் இங்கேயும் வாழ்ந்தனர். குடியுரிமையையும், வாக்குரிமையையும் பெறுவதற்கு போராட்டங்கள் தொடர்ந்தன.

இதற்கிடையில், ஐக்கியமாக இருந்த மலையக அரசியல் தலைவர்களுக்கிடையில் முரண்பாடுகள் ஏற்பட்டன. முதலில் அமரர் அஸீஸ் காங்கிரஸில் இருந்து வெளியேறினார். அதன்பின்னர் அமரர் வெள்ளையன், சி.வி. வேலுபிள்ளை என சிலர் வெளியேறி புதிய சங்கங்களை உருவாக்கினர். எனினும், சௌமியமூர்த்தி தொண்டமான் தளரவில்லை. காங்கிரஸை வழிநடத்தினார்.

*1960* சிறிமா ஆட்சியிலும், *65* இல் ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சியிலும் சௌமியமூர்த்தி தொண்டமானுக்கு தேசியப் பட்டியல் ஊடாக வாய்ப்பு வழங்கப்பட்டது.

*1977* இல் நடைபெற்ற தேர்தலில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தனித்து சேவல் சின்னத்தில் போட்டியிட்டது. நுவரெலியா தொகுதியில் *35* ஆயிரத்து *743* வாக்குகளைப் பெற்று சௌமியமூர்த்தி வரலாற்று வெற்றியை பதிவுசெய்தார். *1947* இற்கு பிறகு வாக்குரிமைமூலம் மலையக பிரதிநிதியொருவர் பாராளுமன்றம் சென்ற சந்தர்ப்பம் இதுவாகும்.

*1982* இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் அமரர் ஜே.ஆர். ஜயவர்தனவுக்கு ஆதரவு வழங்கிய சௌமியமூர்த்தி தொண்டமான், மலையக மக்களுக்கு குடியுரிமை பெறுவதில் குறியாக இருந்தார். பல அழுத்தங்களுக்கு மத்தியில் *1988* இல் குடியுரிமை மற்றும் வாக்குரிமை மலையக மக்களுக்கு கிடைத்தது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் அரசியல் வரலாற்றில் இதுவே மகத்தான வெற்றியாக பார்க்கப்படுகின்றது. இந்த விடயத்தை வைத்தே இன்றளவிலும் அரசியல் நடத்தப்படுகின்றது. அமரர். சௌமியமூர்த்தி தொண்டமானை இந்த விவகாரத்தை அடிப்படையாகக்கொண்டே அவரை "மலையக தந்தை" என அழைக்கின்றனர்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் வடக்கு தமிழ்க் கட்சிகளுடன் இணைந்தே செயற்பட்டுவந்தது. *1972* இல் உதயமான தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியிலும் தொண்டமான் இணைத் தலைமை பதவியைவகித்துள்ளார். எனினும், வட்டுக்கோட்டை தீர்மானத்தின் பின்னர் உறவில் விரிசல் ஏற்பட்டது.

**இ.தொ.காவும் பொதுத்தேர்தல்களும்**

*1989* பெப்ரவரி *15* ஆம் திகதி நடைபெற்ற பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் யானை சின்னத்தின்கீழ் போட்டியிட்டது. இதில், இ.தொ.காவின் வேட்பாளர் முத்து சிவலிங்கம், வீ. அண்ணாமலை ஆகியோர் தோல்வியைத் தழுவினர். எனினும், ஐ.தே.க. ஆட்சியில் இ.தொ.காவுக்கு இரண்டு தேசியப்பட்டியல்கள் வழங்கப்பட்டன.

சௌமியமூர்த்தி தொண்டமானும், பிபி தேவராஜ்ம் நாடாளுமன்றம் சென்றனர். அமைச்சரவையிலும் இடம்பிடித்தனர். *1989* இல் நுவரெலியா மாவட்டத்தில் சுயேட்சையாக போட்டியிட்ட சந்திரசேகரனாலும்வெற்றிபெறமுடியாமல்போனது

*1994* ஆகஸ்ட் *16* இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சியுடன் இணைந்தே இ.தொ.கா. போட்டியிட்டது. நுவரெலியா மாவட்டத்தில் இ.தொ.கா. பட்டியலில் போட்டியிட்ட முத்து சிவலிங்கம் *85* ஆயிரத்து *490* வாக்குகளையும், சுப்பையா சதாசிவம் *83* ஆயிரத்து *368* விருப்பு வாக்குகளையும், ஆறுமுகன் தொண்டமான் *75* ஆயிரத்து *297* விருப்பு வாக்குகளையும் பெற்றனர்.

நுவரெலியா மாவட்டத்தில் சுயேட்சையாககளமிறங்கிய மலையகமக்கள்முன்னணியின் ஸ்தாபக தலைவர் பெரியசாமி சந்திரசேகரன் *23,453* வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றத்துக்கு தெரிவானார்.

சந்திரிக்கா தலைமையிலான மக்கள் கூட்டணியிடம் *14* போனஸ் ஆசனங்கள் சகிதம் *105* ஆசனங்களே கைவசம் இருந்தன. அப்போது, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஏழு ஆசனங்களுடன் சந்திரிக்கா கூட்டணிக்கு நேசக்கரம் நீட்டியது.

இதனால் ஆட்சியமைப்பதற்கு *(113)* சந்திரிக்காவுக்கு மேலுமொரு ஆசனம் (எம்.பியின் ஆதரவு) தேவைப்பட்டது.

இதன்போதே ஆட்சியை தீர்மானிக்கும் சக்தியாக சந்திரசேகரன் உருவெடுத்தார். சந்திரிக்காவுக்கு ஆதரவு வழங்கினார். பின்னர் அவருக்கு பிரதி அமைச்சு பதவியும் வழங்கப்பட்டது.

தேர்தலின் பின்னர், சந்திரிக்காவின் மக்கள் கூட்டணியில் இணைந்துகொண்ட இ.தொ.காவின் தலைவருக்கு சந்திரிக்காவின் அமைச்சரவையில் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு பதவி வழங்கப்பட்டது.

**தாத்தா தொண்டமானின் மறைவும் பேரன் தொண்டமானின் பதவியேற்பும்**

*1999* ஒக்டோபர் *30* ஆம் திகதி சௌமியமூர்த்தி தொண்டமான் உயிரிழந்தார். இ.தொ.காவில் சிரேஷ்ட உறுப்பினர்கள் பலர் இருந்தனர். எனினும், தலைமைப் பதவியை ஆறுமுகன்தொண்டமான்பொறுப்பேற்றார். இதனால் இ.தொ.காவுக்குள் மோதல் உருவெடுத்தது. மூத்த உறுப்பினர்கள் சிலர் வெளியேறி புதுக்கட்சி துவங்கினர். தொண்டர்களும் கதிகலங்கி நின்றனர். கட்சிதாவுதல், காலைவாருதல், கழுத்தறுப்பு செய்தல் என துரோக அரசியலுக்கே உரிய அத்தனை அம்சங்களும் அரங்கேறின.

தொண்டமான்பரம்பரைசலுகைஅரசியலை நடத்தியதால், மறுபுறத்தில் சந்திரசேகரன் உரிமை அரசியலை நடத்தினார். வடக்கு - கிழக்கு கட்சிகளின் ஆதரவும் அவருக்கு இருந்தது. இதுவும் ஆறுமுகனுக்கு தலையிடியாக மாறியது. ஆனாலும் அவர் தளரவில்லை. இதன்மூலம் தனக்கு தலைமைத்துவ பண்பு உள்ளது என்பதை நிரூபித்தார்.

(25ஆம் பக்கம் பார்க்க)

# ஆறுமுகன் தொண்டமானின் மறைவு மலையக அரசியலுக்கு இழப்பா?



(25ஆம் பக்கத் தொடர்ச்சி)

2000 ஒக்டோபர் 10 இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் சந்திரிகா தலைமையிலான மக்கள் கூட்டணியே வெற்றிபெற்றது. இக்கூட்டணியின்கீழ்தான் இ.தொ.கா. போட்டியிட்டது. ஆறுமுகன் தொண்டமான், முத்துசிவலிங்கம், ஜெகதீஸ்வரன் ஆகியோர் வெற்றிபெற்றனர். எனினும், ஓராண்டுக்குள் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு மீண்டும் 2001 டிசம்பர் 05 ஆம் திகதி தேர்தல் நடத்தப்பட்டது. இத்தேர்தலில் ஐ.தே.கவுடன் இணைந்து யானை சின்னத்தில் இ.தொ.கா. போட்டியிட்டது.

நுவரெலியா மாவட்டத்தில் ஐ.தே.க. பட்டியலில் போட்டியிட்ட ஆறுமுகன் தொண்டமான் 121,542 விருப்பு வாக்குகளையும், பெ. சந்திரசேகரன் 121,421 விருப்புவாக்குகளையும்,முத்துசிவலிங்கம் 107,338 விருப்பு வாக்குகளையும் பெற்றனர். அதன்பின்னர் ஆறுமுகன் தொண்டமானுக்கான செல்வாக்கும் கோலோச்சியது.

நாடாளுமன்றத்தில் ஆயுட்காலம் முடிவடைவதற்குள்ளேயே நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி சந்திரிக்கா நாடாளுமன்றத்தைக் கலைத்து 2004 ஏப்ரல் 2 ஆம் திகதி தேர்தல் நடத்தப்பட்டது.

ஐ.தே.கவுடன் இணைந்தே திரும்பவும் நுவரெலியாவில் இ.தொ.கா. போட்டியிட்டது. 99,783 வாக்குகளைப் பெற்று தொண்டமான் வெற்றிபெற்றார். தேர்தலின் பின்னர் பிரதமர் மஹிந்த ராஜபக்ச அரசாங்கத்தில் இ.தொ.கா. சங்கமித்தது.

2010 இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் மஹிந்த ராஜபக்ச தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இணைந்தே இ.தொ.கா. போட்டியிட்டது. நுவரெலியா மாவட்டத்தில் களமிறங்கிய ஆறுமுகன் தொண்டமான் 60 ஆயிரத்து 997 வாக்குகளைப் பெற்று கூட்டணியின் பட்டியலில்முதலிடம்பிடித்தார். அத்தேர்தலில் இ.தொ.காவுக்கு சவாலாக எந்தவொரு கூட்டணியும் இருக்கவில்லை.

2015 ஒகஸ்ட் 17 இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில்கடும்போட்டி நிலவியது. இ.தொ.காவுக்கு கடும் போட்டியாக - சவாலாக - மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்கு கூட்டணி உருவெடுத்தது. ஜனநாயக மக்கள் முன்னணி, தொழிலாளர் தேசிய முன்னணி, மலையக மக்கள் முன்னணி ஆகியன இக்கூட்டணியில் அங்கம் வகித்தன.

ஐக்கியமக்கள்சுதந்திரகூட்டணியுடன் இணைந்து போட்டியிட்ட இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், இரண்டு ஆசனங்களை மாத்திரமே கைப்பற்றியது. ஆறுமுகன் தொண்டமான் 61 ஆயிரத்து 987 வாக்குகளைப் பெற்று சபைக்கு தெரிவானார்.

2018 இல் நடைபெற்ற உள்ளாட்சி மன்றத் தேர்தலில் சொந்த சின்னத்தில் போட்டியிட்டு நுவரெலியா மாவட்டத்தில்இ.தொ.கா. அமோக வெற்றிபெற்றது. இதற்கு சிறப்பான தலைமைத்துவத்தை வழங்கிய ஆறுமுகன் தொண்டமான், 2019 இல் ஜனாதிபதி தேர்தலில் கோட்டாபய வின் வெற்றிக்கும் தீவிரமாக உழைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

### இ.தொ.காவின் சேவைகளும் ஆறுமுகன் தொண்டமானின் வகிபாகமும்

குடியுரிமை, வாக்குரிமை பெற்றுக்கொடுத்ததற்கு அடுத்தப்படியாக மலையகத் தமிழர்களை அரசாங்க ஊழியர்கள் கட்டமைப்பில் இணைத்து வைத்த பெருமை இ.தொ.காவையே சாரும். பட்டதாரி ஆசிரியர் நியமனம், உதவி ஆசிரியர்கள் நியமனம், தபால் ஊழியர்கள் என அந்த பட்டியல் நீள்கிறது.

அத்துடன், சிறிபாத கல்வியியல் கல்லூரி உருவாக்கம், தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையம் ஊடாக மலையக இளைஞர்களுக்கு தொழில்சார் பயிற்சி, கலாசார நிலையங்கள் ஊடாக பயிற்சிகள் போன்ற விடயங்களைக் குறிப்பிடலாம்.

அதேபோல், தொழிலாளர்களை ஒடுக்கிய சில தோட்ட நிர்வாகங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்து தொழிலாளர்களுக்கு நீதி பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது.

மலையகத்தில் தமிழர்களுக்கு எதிராக இனவாதம் கட்டவிழ்த்துவிடப்பட்ட பல சந்தர்ப்பங்களிலும் அவற்றை தடுத்து நிறுத்தி, மக்களுக்கு உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளை வழங்க ஆறுமுகன் தொண்டமான் நடவடிக்கை எடுத்திருக்கின்றார்.

இந்தியாவுடன் சிறந்த ராஜதந்திர உறவுகள் இருப்பதால் மலையகத்துக்கு 14 ஆயிரம் வீடுகள் பெறப்பட்டுள்ளன. மலையக மாணவர்களுக்கு இந்தியாவில் பயிற்சிகள், புலமைப்பரிசில்கள் கிடைக்க வழிசமைத்துக்கொடுக்கப்பட்டுள்ளன.

அதேவேளை, கோட்டாபய ராஜபக்ச தலைமையிலான ஆட்சியில் அமைச்சுப் பதவியை பொறுப்பேற்ற பின்னர் என்றுமில்லாத துடிப்பு ஆறுமுகன் தொண்டமானிடம் காணப்பட்டது.

மலையக பல்கலைக்கழகத்தை உருவாக்குவதற்கு குழு, அமைச்சரவைப்பத்திரம் போன்ற பல பல விடயங்களை வேகமாக செய்தார். தோட்டப்பகுதிகளில் உள்ள தரிசு நிலங்களை மக்களுக்கு பகிர்ந்தளிக்க பொறிமுறை வகுத்திருந்தார். அனைத்து வசதிகளுடனும் தனிவீட்டுத் திட்டத்தை முன்னெடுக்க வியூகம் அமைத்திருந்தார். தோட்டத்தொழிலாளர்களுக்கான ஆயிரம் ரூபா சம்பள உயர்வை எப்படியாவது பெற்றுக்கொடுக்க வேண்டும் என்பதிலும் குறியாக இருந்தார்.

ஆனால், அவரின் கனவுகள் மெய்படமுன்னர் காலன் அவர் உயிரை கொண்டு சென்றுவிட்டார்.

### அடுத்த தலைவர் யார்?

ஆறுமுகன் தொண்டமானுக்கு இறுதிக்கிரியை நடைபெறுவதற்கு முன்னரே, அவரின் மறைவால் நுவரெலியா மாவட்டத்தில் சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் பட்டியலில் ஏற்பட்டுள்ள வெற்றிடத்துக்கு ஜீவன் தொண்டமான் நியமிக்கப்பட்டுள்ளார். மரணம் நிகழ்ந்து மறுநாளுக்குள் ஏன் இந்த அவசரம் என்பதுதான் புதிராக உள்ளது.

இதற்கிடையில், தலைமைப்பதவியை குறிவைத்து ஆறுமகன் தொண்டமானின் தமக்கை மகனான செந்தில் தொண்டமானும் காய்நகர்த்தல்களை மேற்கொண்டுவருகிறார். “செந்தில் தொண்டமான் தலைமையில் இ.தொ.கா. குழு பிரதமரை சந்தித்தது” என்பதில் ‘தலைமையில்’ என்ற பதம்மூலம் தான்தான் அடுத்த தலைவர் என்ற தகவலையும் சமூகத்துக்கு வழங்க செந்தில் தொண்டமான் முயற்சித்துள்ளார். ராஜபக்ச தரப்பும் செந்திலையே விரும்புகிறது. அவர் தமது கட்டுப்பாட்டுக்குள் இருப்பார் என்பதே ராஜபக்சக்களின் அரசியல் கணக்காகும்.

மறுபுறத்தில் இ.தொ.காவில் உள்ள சிரேஷ்ட உறுப்பினர்களும் பிரதான பதவிகளை எதிர்பார்த்து காத்திருக்கின்றனர். தேர்தல் முடிந்த பின்னரே புதிய தலைவர் நியமிக்கப்படுவார் எனக் கூறப்பட்டாலும் அதற்கு முன்னரே கட்சிக்குள் அரசியல் புயல் மையங்கொள்ளும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

எது எப்படியோ தொண்டமானின் மறைவையடுத்து இந்திய வம்சாவளி மக்களுக்கு தலைமைத்துவம் கொடுக்கும் முயற்சியில் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர்களும் இறங்கியுள்ளனர்.

### ‘தொண்டமான்கள்’ செய்ய தவறியவை

மலையகத்தில்உள்ளகட்சிகளுள்இலங்கைத்தொழிலாளர்காங்கிரஸின்ஸ்தாபகத் தலைவர்சௌமியமூர்த்திதொண்டமானும் ஆறுமுகன் தொண்டமானுமே அதிக தடவைகள் அமைச்சரவை அந்தஸ்த்துள்ள அமைச்சுப் பதவிகளை வகித்தனர். எந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும் கூட்டணி அமைத்து குடியேறும் அரசியல் தந்திரத்தை - மந்திரத்தை - சிறப்பாக கற்றுவைத்திருந்தனர். ஆனால், பேரம் பேசும் ஆற்றலை உரிமை சார் விடயங்களுக்கு உரிய வகையில் பயன்படுத்தவில்லை.

மீண்டும், மீண்டும் அபிவிருத்திக்கே அதிகமுக்கியத்துவம்கொடுத்தனர். “மலையக மக்கள் வாழலாம், ஆனால், இங்கு நாங்கள்தான் ஆளவேண்டும்” - என்ற ஆணவ சிந்தனையும் அவர்களுக்குள் இருந்தது. இதன்காரணமாக சமூகமாற்றம் குறித்து உரிய கவனம் செலுத்தப்படவில்லை.

சந்திரசேகரன் தனி வீட்டுத் திட்டத்துக்கு அடித்தளமிட்டார். அதனை தொடர்ந்தும் இ.தொ.கா. உரிய வகையில் முன்னெடுக்கவில்லை. நில உரிமை அற்றவர்களாகவே பெருந்தோட்டத் தொழிலாளர்கள் வாழ்ந்தனர். அவர்களை நில உரிமையாளர்களாக்குவதற்கு காத்திரமான நடவடிக்கைகள் எதுவும் இடம்பெறவில்லை.

பெருந்தோட்டத்துறை தொழிலாளர்களின் சம்பளத்தை நிர்ணயிக்கின்ற கூட்டு ஒப்பந்தத்துக்கு பதிலாக மாற்று பொறிமுறையை உருவாக்கவில்லை.

தேயிலை மலைகளுக்கு கொழுந்து பறிக்க செல்லும் பெண்களுக்கு தொழில்சார் பாதுகாப்பு இல்லை. மலசலகூட வசதியில்லை. பல பெண்கள் மாதவிடாய் காலத்தில் செத்து பிழைக்கின்றனர். தோட்ட நிர்வாகங்களுடன் பேச்சு நடத்தி இதற்கான ஏற்பாடுகளைச்செய்ய அக்கறை செலுத்தவில்லை. அத்துடன், எவருக்காவது காயம் ஏற்பட்டால் முதலுதவி அளிக்கக்கூட சுகாதார ஏற்பாடுகள் எதுவும் இல்லை.

அதேபோல், பெருந்தோட்டப்பகுதிகளில் உள்ள தோட்ட வைத்தியசாலைகளில் மருத்துவ பட்டப்படிப்பை நிறைவு செய்த வைத்தியர்கள் இல்லை. மருத்துவ அதிகாரிகளே இருக்கின்றனர். இன்றும் பல இடங்களில் அந்நிலைமை தொடர்கின்றது. இதற்கு மாற்று ஏற்பாடுகள் எதுவும் செய்யப்படவில்லை. சட்ட ஏற்பாடுகள் செய்யவேண்டும், ஒப்பந்தங்களை புதுப்பிக்க வேண்டும் என்றெல்லாம் காரணம் சொல்பவர்கள், இவ்விடயங்களையும் நாடாளுமன்றத்தின் ஊடாக செய்திருக்கலாம். ஆனால், இன்றுவரை செய்யப்படவில்லை.

2015 ஆம் ஆண்டுக்கு பின்னர் தனி வீடுகள் அமைக்கும் திட்டத்தை தமிழர் முற்போக்கு கூட்டணி துரிதப்படுத்தியது. மலையக மக்களுக்கு காணி உரிமைக்கான பத்திரம் பெற்றுக்கொடுக்கப்பட்டது. மலையக அபிவிருத்தி அதிகார சபையை உருவாக்கியது. தோட்டப்பகுதிகளுக்கு அரச இயந்திரத்தின் அபிவிருத்திகள் செல்வதற்கு தடையாக இருந்த பிரதேசசபை சட்டத்தில்திருத்தம்கொண்டுவரப்பட்டது. பிரதேச செயலகங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது. இப்படி உரிமைசார் அரசியலுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. தொழிலாளர்களின் பிரச்சினைகள் சம்பந்தமாக நாடாளுமன்றத்தில் பிரேரணைகளும் முன்வைக்கப்பட்டன.

வெறும் நான்கரை வருடங்களில் முற்போக்கு கூட்டணியால் இவற்றை செய்ய முடிந்ததெனில் 2000 ஆம் ஆண்டு முதல் அமைச்சுப் பதவிகளை வகிந்துவந்த ஆறுமுகன் தொண்டமானுக்கு ஏன் சமூக மாற்றம் சார்ந்த விடயங்களை செய்ய முடியாமல்போனது என கேள்வி எழுப்படுகின்றது.

இனிவரும் மலையக அரசியல் இந்தக் கேள்விகளின் ஊடகவே விரிவடையப் போகிறது. அந்த அரசியல் நெருப்பு மலையக மக்களை தொடர்ந்தும் எரிக்குமா அல்லது ஒளி கொடுக்குமா என்பதை தேர்தல் களங்கள் தீர்மானிக்கப்போகின்றன. ■

ஊழிக்காலம்-2

12



# புயலுக்குப்பின்...



அப்போது சில ராணுவப் பெண்கள் வந்தனர்.

“சீத்தா...சீத்தா...” - என ஒருத்தி கூப்பிடவே, அந்த சீத்தா ஓடிவந்தாள்.

“ஓடன எல்லாரையும் வெளிய வரச் சொல்லு” - என்றாள் அரை குறைத் தமிழில்.

“எல்லாரும் வெளிய போகட்டா.....ம்” - அவள் கூச்சலிட்டாள். சுமார் நூற்றைம்பது அடி நீளமும் இரண்டு தளங்களைக் கொண்டதுமான அந்தப் பல்கலைக்கழக விடுதிகீழே இருபத்து நான்கு அறைகளையும் மேலே இருபத்துநான்கு அறைகளையும் கொண்டது. கீழும் மேலுமாக இவற்றுக்கான வெளித்தளங்களும் இருந்தன. ஒவ்வொரு அறையிலும் பத்துப்பேருக்குக் குறையாமல் இருந்தனர். வெளித்தளங்களிலும் பெண்கள் இருந்தனர். மாடிப்படிகளின் கீழ்தளங்களிலும் குளியலறை வாசலிலும்கூட பெண்கள் இருந்தனர். மிக மிக நெருக்கமாக படுத்துறங்கும்படி இருந்தனர்.

பெரும்பாலும் களமுனைகளில் பாயின்றி விரிப்பின்றி ஈரத்தரைகளிலும் மணல்வெளிகளிலும் காடுகளிலும் விட்டேற்றியாக விழுந்து படுத்தவுடன் உறங்கிப்போகும் பழக்கமுள்ளவர்கள். இங்கும் அப்படியே பொதிகள்மீதும் ஒருவர்மீது ஒருவர் சாய்ந்தும் உறங்கினர். அது பார்வதியால் இயலவில்லை. இப்படி அடைமழை போன்ற ஒலிகளுக்கு மத்தியில் அவளுக்குப் பைத்தியமே பிடித்துவிடும் போலிருந்தது.

“வெளியே வரட்டாம்” - என்று இராணுவப்பெண் போட்ட சத்தமான கட்டளையைத் தொடர்ந்து மண்டபத்தின்பல பகுகளிலிருந்தும் வாசலை நோக்கி சென்ற பெண்கள் முண்டியடித்து வெளியேறினார்கள். அந்தப் பெரும் கட்டடத்தின் முன்புற வாயில்அகலமாக இருந்தாலும், சுமார் மூன்றடி அகலமான கதவு மட்டுமே திறந்துவிடப்பட்டிருந்தது. அத்தனை பெண்களும் அந்த வாசலால்தான் வெளியேறவேண்டியிருந்தது. எனவே மெதுவாகவே நகர்ந்தனர் பெண்கள்.

“இக்மனட்ட....இக்மனட்ட...” - ராணுவப் பெண் துரிதப்படுத்தினாள். பார்வதி என்ன சொன்னாலும் சொல்லி விட்டுப் போகட்டுமென மெதுவாக வெளியே வந்தாள். அந்த கட்டடத்தின் முற்றம் அல்லோல கல்லோலப்பட்டது. வந்திருந்த பெண்சிப்பாய்களில் அதிகாரிபோல் தோற்றமளித்தவள். மற்றவளிடம் -

“கியண்ட ஒக்கமலாட்ட லைன்கறன்னக் கியலா” - என்றாள்.

“லைன் லைன்... டீம் வகேம லைன் கறன்ன” - என்று கத்தினாள் அவள்.

பார்வதியும் அவளுடன் வந்தவர்களும் இப்போது வெவ்வேறு இடங்களில் விடப்பட்டனர். பார்வதியுடன் பதினைந்துபேர் மட்டுமே குழுவில்லாமல் நின்றனர். இன்னும் எட்டுப்பேர் அவர்களுடன் சேர்ந்தனர்.

இப்போது இவர்களை ஏற்கெனவே இருந்த குழுக்களோடு சேர்த்து பதிவு செய்தனர்.. பின்னர் ஒவ்வொருவராக எண்ணி உள்ளே அனுப்பினர். பின், அவர்களுக்கான அறிவுறுத்தல்களை அந்த சார்ஜன்ட் தர அதிகாரி சிங்களத்தில் சொன்னாள். அதை சீத்தா மிக மோசமாக மொழிபெயர்த்தாள்.

“எல்லாரும் சுத்தமா இருக்கவாம், சண்டை போட வேணாமாம். வேலையள ஒழுங்கா செய்யட்டாம்” - இப்படியாக இருந்தது அந்த அறிவுறுத்தல்.

பின்னர், உள்ளே செல்லும்போது மேலும் சிலர் அவளோடு பேச வந்தனர். அங்கே சீத்தாதான் முதலாளி. எல்லோருடைய நடவடிக்கைகளையும் அவள்தான் கவனித்தாள். பார்வதி எழுந்து எல்லா அறைகளையும் சுற்றிப்பார்த்தாள். அவளிருந்த இடத்துக்கு நேரே உள்ள அறையிலேயே அவளுடன்வேலைசெய்த தோழிகள் இருந்தனர். மேலும் இரு முக்கிய தளபதிகளின் மனைவியரும் இருந்தனர்.

“ஆ... பார்வதியன்ரி வாங்கோ” - என்று அவளை அழைத்தவள். முக்கிய தளபதியொருவரின் மனைவி பழைய போராளி.

“அக்காகாயாக்கா, மத்தியானச்சமையலுக்கு மரக்கறி வந்திருக்காம்” - என்றபடி எட்டிப்பார்த்தாள் ஒருத்தி.

“போய் லீடரட்டச் சொல்லும்” - என்றாள் காயா. அவள் குறிப்பிட்ட லீடர் வெளியே போனாள். அவள் ஒரு சாதாரண போராளி. விரும்பாமலே விடுதலைப் புலிகளால் பிடித்துச் செல்லப்பட்டவள். கட்டாய ஆட்சேர்ப்பில் போராளியானவள்.

காயா பார்வதிக்கு பிஸ்கட் கொடுத்தாள். மற்றப்படி சுகமா? எப்பிடியிருக்கிறியள்? என்ற குசல விசாரிப்புகளுக்கெல்லாம் வேலையே இல்லை. எல்லோருமே ஒரே நிலையிலிருந்தனர்.

காயா பிறந்த கிராமமே இதுதான். மே மாதத்தில் முக்கிய களமொன்றில் அவள் கணவன் கொல்லப்பட்டான். தன் இரண்டு குழந்தைகளையும் தாயுடன் விட்டுவிட்டு ஓமந்தையில் பதிவுக்காக வந்தவள். இங்கே அடைக்கப்பட்டிருந்தாள். அவர்களுடைய குழுவிற்கே இன்றைய சமையல் விதிக்கப்பட்டிருந்தது. அவள் இதுவரைகாலமும் மிகவும் மதிக்கப்பட்ட போராளியாக இருந்தவள். தளபதி ஒருவரின் மனைவியாகவும் இருந்தாள். இன்னும்கூட மற்றப்போராளிகளால் மதிக்கப்பட்டாள். இதற்காக அவள் ஒரு போதும் கர்வப்பட்டதில்லை. அதிகாரம் இருந்த போதும் பணிவாக நடந்தவள்.

பார்வதி அவளுடன் பேசிக்கொள்ள எந்த விடயமும் இருக்கவில்லை. காய்கறி வெட்ட ஒருவரும் வரவில்லை என்ற முறைப்பாட்டுடன் ஒருத்தி வந்தாள். பார்வதி எழுந்து காய்கறி வெட்டும் இடத்துக்குப் போனாள். கத்தரிக்காயும் வெண்டைக்காயும் கீரையும் வந்திருந்தன, அவளும் ஒரு கத்தியை எடுத்துக்கொண்டு அமர முற்பட, அவளைத் தடுத்த ஜானகி -

“இஞ்ச விடுங்கோ, தாங்கோ கத்திய, இவ்வளவு பேர் இருக்கிறம். நீங்க வேலை செய்ய வேணுமா”

கத்தியைப் பிடுங்கிக் கொண்டாள்.

பகல் முழுதும் அப்படி இப்படியென்று அலைந்தே முடித்த பார்வதியை சீத்தா வந்து பார்த்தாள்.

“உங்களை எனக்குத் தெரியும். நீங்க வவுனியாதானே”

“எப்பிடித் தெரியும்”

“நான் உங்களை அங்க கண்டிருக்கிறன்”

“உனக்கென்ன வயதிருக்கும். நான் வவுனியாவைவிட்டு வெளியால வந்து இருபத்திமூண்டு வருசம் கடந்திட்டுது”

“இருக்கட்டுமே, எனக்கிப்ப முப்பத்து நாலு வயது, நான் அப்பாவோட உங்கட வீட்டுக்கு வந்திருக்கிறன். நாங்கள் சிதம்பரபுரத்தில அகதிமுகாமில இருந்தனாங்கள்”

அப்போது பார்வதி தன் சொந்த வீட்டில் வசதியாகவே வாழ்ந்தாள் சிதம்பரபுரம் அகதிமுகாமிலிருந்து மக்கள் உதவிகேட்டு வருவதுண்டு. அவள் அப்போது அப்பகுதி கிராமசேவையாளரின் உதவியாளராகவும் பணிபுரிந்து கொண்டிருந்தாள். எனவே தன்னாலியன்ற உதவிகளை வேறுயாரிடமாவது பெற்றும் கொடுத்ததுண்டு. அப்படித்தான் இவள் வந்திருக்கிறாள்.

இந்த அறிமுகத்தை பார்வதி பயன்படுத்திக்கொள்ள எண்ணினாள்.

“ம்.... நீ அவளா, அப்ப நீ சின்னப்பிள்ளை” - என்றாள்.

“ம்..”

“சீத்தா, இதில எனக்கு கஸ்டமாயிருக்கு. வேற இடம் பாத்துத் தாறீங்களா?’

“ம்...” - சற்று யோசித்தவள் “இருங்கோ வாறன்” - என்று விட்டுப்போனாள். பத்து நிமிடத்துள் திரும்பி வந்தவள் பெராதிகளுடன் அவளை மாடிக்கு அழைத்துச் சென்றாள்.

மாடியின் கோடிக்குள் நுழைந்தவள் அங்குள்ளவர்களிடம்,

“அன்ரீ உங்களோட இந்த ரூமில தங்கட்டுமா?” - என்று கேட்டாள்.

“தாராளமா, எங்களுக்கு நல்ல விருப்பம்” - என்றாள் கண்ணாடி அணிந்திருந்த பெண்ணொருத்தி.

அவளது பொதிகள்வைக்கவும் அவள் படுக்கவுமான இடத்தை ஒதுக்கிக்கொடுத்தார்கள். அந்த அறை மாடியில்ஒரு கோடியில் இருந்தாலும், அதனுடன் இணைந்த குளியலறையைக்கொண்டிருந்தது. பின்புறம் சிறு தளம் கைப்பிடிச்சுவருடன் இருந்தது. அங்கே யூஎஸ்ஏ எண்ணெய் வந்த பேணியிலோ நெஸ்டோமோல்ட் வெற்றுப் பேணியிலோ தேநீருக்காக நீர் சுடவைத்தார்கள். தனியாகவோ குழுவாகவோ அவரவர் அடுப்பு மூட்டி தேநீர் தயாரித்தார்கள். அந்த முகாமில் தேநீர் விநியோகம் கிடையாது.

பார்வதிக்கும் தேநீர் தேவைப்பட்டது. அவளிடம் காமினி மாகாவித்தியாலயத்தில் இருந்தபோது கன்ரீனில் வாங்கிய சுடுநீர் போத்தலும், சீனி, தேயிலை, பால்மா என்பனவும் இருந்தன. அவர்களிடமிருந்து சுடுநீரைப்பெற்று தேநீரை தயாரித்துக் குடித்தாள்.

குளிப்பதற்கு மட்டும் மிகப்பெரிய போராட்டமே நடந்தது. சமையல்வேலை செய்யும்குழுவிற்கே தண்ணீர்த்தொட்டியின் அதிகாரம் இருந்தது. ஏனையோர் தண்ணீரைத் தொட்டு கை கால்களை துடைப்பதுடன் நிறுத்திக்கொண்டனர். சமையல் முறை நாளாந்தம் வெவ்வேறு குழுவுக்கு மாறிக் கொண்டிருப்பதால் அனைவருமே வாரம் ஒருநாள் குளிக்கமுடிந்தது. மலசல கூடங்கள் போதிய நீரின்றி நாற்றமெடுத்தன.

எப்படியோ பார்வதி இருந்த அறையிலேயே குளியறை இருந்தது. காலையில் முகாம்களுக்கான நீர் வழங்கும்போது அந்த அறையிலும் நீர் வரும். அதிகாலையில் தியானம் செய்வதை வழமையாகக் கொண்டிருந்த பார்வதியை அதிகாலையிலேயே குளிக்க வைத்தனர் அந்த அறையிலிருந்த போராளிப் பெண்கள்.

காலையில் குளிக்கச் சென்ற பார்வதி குளித்து முடிக்குமுன்பே நீர் நின்றுவிட்டது. ஆடைகளைக் கழுவி கொக்கியில் போட்டிருந்தாள். சோப் போட்டு கழுவத் தொடங்க நீர் நின்று விட்டது. அறைக்குள்ளிருந்த பிரபா உசாரானாள்.

“தண்ணி நிண்டிட்டிது. அன்ரீ குளிச்சு முடியேல்லப்போல கேள்”

“ஓம் பிள்ளை தண்ணி வராதோ”

“இனி பத்து மணிக்குத்தான் வரும்”

“பிரபாக்கா, அஞ்சுலீட்டர்போத்தல்ல ரெண்ட உள்ளுக்கனுப்புங்க” - என்றாள்

மறுநிமிடம் தண்ணீர்ப்போத்தல்கள் குளியலறைக்குள்வந்தன. பார்வதிகுளித்து முடித்தாள்.

அன்று பகல் பத்து மணியளவில் சில ராணுவப் பெண்கள் கை நிறைய படிவங்களுடன்வந்தனர். பார்வதியின்இந்தவசதியான வாழ்க்கை பறிபோகவும் இதுவே வழி கோலிற்று. நுணலும் தன் வாயால் கெடும் என்பதுபோல.

Australian Government

நாம் மீண்டும் வெளியே நடமாட
ஆரம்பிக்கும் இவ்வேளையில்,

கோவிட் தொற்றிலிருந்து
பாதுகாத்துக்கொள்வது எம்மைப் பொறுத்தது

3 விடயங்களைச் செய்யுங்கள்

20 SEC

கைகளைக்
கழுவுங்கள்

1.5M

சமூக இடைவெளியைப்
பேணுங்கள்

செயலியைப்
பயன்படுத்துங்கள்

அத்துடன் உங்களுக்கு தடிமன் அல்லது சளிக்காய்ச்சல்
போன்றவற்றுக்கான அறிகுறிகளுடன் உடல்நலக்குறைவு
ஏற்பட்டால் வீட்டில் தங்கியிருங்கள். உங்களை சோதனைக்கு
உட்படுத்துவது பற்றி மருத்துவரிடம் பேசுங்கள்.

கோவிட் தொற்றிலிருந்து பாதுகாப்பாக இருங்கள்

கொரோனா வைரஸ்(கோவிட்-19) குறித்த மேலதிக தகவல்களுக்கு **health.gov.au** என்ற இணையத்தளத்திற்குச்
செல்லுங்கள்

COVIDSAFE

கன்பராவில் இயங்கும் ஆஸ்திரேலிய அரசின் அங்கீகாரம் பெற்றது.


Transco™
CARGO
=
FREIGHT
FORWARDER
FROM AUSTRALIA TO SOUTH ASIA
THE ONLY COMPANY WITH WEEKLY SHIPMNTS TO SRI LANKA
ONLINE TRACKING
SMS & EMAIL ARRIVAL NOTICE NOTIFICATION
LIVE CHAT ON WEBSITE
TRANSCO APP
We love to deliver
IF YOU MISS THE CUT-OFF THIS WEEK
YOU CAN SEND IT NEXT WEEK
IT'S AS EASY AS THAT
Weekly shipments exclusive to Transco warehouses in Dandenong South and Campbellfield
206-208 Discovery Road
Dandenong South
(03) 9703 2255
45 Adrian Rd
Campbellfield
(03) 9357 7228
SYDNEY - 02 9897 0004
PERTH - 08 9452 7707
BRISBANE - 07 3219 0203
CANBERRA - 02 62821905
TASMANIA - 03 90174167
ADELAIDE - 08 8322 8825
DARWIN - 08 79790002
1300 1 TRANSCO (1300 187 267)
WWW.TRANSCOCARGO.COM.AU